பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 29 புதன்கிழமை (14.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 361

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

## சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் ஏற்கப்பட்டு புதிய அரசியல் சாசனம் நிறைவேற்றப்படும்

### நல்லாட்சி அதனை முன்னெடுக்கும் என சம்பந்தன் நம்பிக்கை



(சம்பூர்)

இந்த நாட்டில் நிலவிய எந்த ஒரு அரசியல் சாசனங்களும் மக்களுடைய சம்மதத்துடன் அல்லது கூடுதலான அரசியல் கட்சிகளின் சம்மதத்துடன் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், இனிவரும் தினங்களில் நிறைவேற்றப்படவுள்ள புதிய அரசியல் சாசனம் சகல மக்களினதும் அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

23 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி நாளை மலேசியா பயணம்

(கொழும்பு)

மலேசிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்புக்கமைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை 15 ஆம் திகதி பிற்பகல் மலேசியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கை, மலேசிய நாடுகளுக்கிடையிலான தூதரக தொடர்புகள் ஆரம்பிக்கப்பட்டு அறுபது ஆண்டுகள் நிறைவடைவதனை முன்னிட்டு இடம்பெறும் நிகழ்வு, கலா

23 ஆம் பக்கம் பார்க்க....

## இனப்பிரச்சினை பேச்சு; ஜே.வி.பி பங்களிப்பு

(கொழும்பு)

உத்தேச புதிய அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் அடிப்படை தன்மையற்ற மாறுப்பட்ட கருத்துக்கள் முன் வைக்கப்படுகின்றதே தவிர ஆக்கப்பூர்வமான பேச்சுக்களுக்கான முன்னெடுப்புக்கள் காணப்படவில்லை எனத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான

23 ஆம் பக்கம் பார்க்க....

# விடுதலைப் புலிகளை அழிக்க எத்தனை கோடி?

## சிவசங்கர் மேனன் பரபரப்புத் தகவல்




(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடைபெற்ற யுத்தத்திற்காக இலங்கை அரசு சுமார் 200 பில்லியன் அமெரிக்க டொலரை செலவு செய்ததாக முன்னாள் இலங்கைக்கான இந்திய தூதுவராக கடமையாற்றிய வரும் இந்திய மத்திய அரசின் பாதுகாப்பு ஆலோசகருமான சிவசங்கர் மேனன் தெரிவித்துள்ளார். அவர் எழுதியுள்ள ஒரு புத்தகத்திலேயே இந்த விபரங்களை குறிப்பிட்டுள்ளார்.

(03-ம் பக்.)

## இலங்கை - தஜிகிஸ்தான் இடையே சில உடன்படிக்கைகள் கைச்சாத்து



(கொழும்பு)

வர்த்தக துறையை அபிவிருத்தி செய்வதற்கு தஜிகிஸ்தான் இலங்கையிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பல பாடங்கள் இருப்பதாக தஜிகிஸ்தான் ஜனாதிபதி இமோமாலி ராமோன் தெரிவித்தார்.

23 ஆம் பக்கம் பார்க்க....

## அதிகார வரம்புகளை மீறி ஆளுநர் செயற்படுகிறார்!

### உறுப்பினர் ரவிகரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே அண்மைக்காலமாக தனது அதிகார வரம்புகளை மீறி நிர்வாக நடவடிக்கைகளில் தலையிட்டுவருவதாக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த 09ஆம் திகதி அன்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் ஆளுநரால் நடத்தப்பட்ட காணிப்பிணக்குகள் மீதான விசாரணையானது ஒருதலைப்பட்சமாக நடைபெற்றிருப்பது பாதிக்கப்பட்ட தரப்பினரின் அடிப்படை மனித

23 ஆம் பக்கம் பார்க்க....

## வாகன விபத்து; ஐவர் காயம்

(குருமன்காடு)

வவுனியா இராசேந்திரன்குளப் பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேர் உட்பட ஐந்து பேர் காயமடைந்து வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

23 ஆம் பக்கம் பார்க்க....

## அடுத்து வரும் 20 தலைமுறைகளுக்கு ராஜபக்ஷக்கள் கொடுத்தது என்ன?

### அதிக வட்டி கடன் குறித்து சந்திரிகா கருத்து

(கொழும்பு)

ராஜபக்ஷக்கள் பெற்றுக்கொண்ட கடனை செலுத்துவதற்கு இன்னும் 20 தலைமுறைகளாவது செல்லும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஹொரகொல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ அரசாங்கத்தைப் போன்று கூடுதல் வட்டிக்கு கடன் பெற்றுக் கொண்ட வேறு எந்தவொரு அரசும் கிடையாது.

நூற்றுக்கு ஒன்பது வீதம் என்ற அடிப்படையில் கடன் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பெற்றுக்கொண்ட கடனில் 10 வீதத்திற்கு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு எஞ்சிய தொகையை களவாடியுள்ளனர்.

இந்தக் கடன்களை செலுத்துவ

23 ஆம் பக்கம் பார்க்க....

## மதபோதனைகளை ஏற்று வாழ்ந்தால் நல்ல மனிதர்கள் உருவாகுவார்கள்

### அக்கறை காட்டுங்கள் என்கிறார் ஜனாதிபதி

(கொப்பேகடுவ)

தேரவாத பௌத்த தத்துவத்தை உலகெங்கும் பரவச் செய்வதற்கு அரசாங்கம் உயர்ந்தபட்சம் அர்ப்பணிப்புடன் செயற்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் கொப்பேகடுவ, நெல்லிகல சர்வதேச பௌத்த நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்ட வழிபாட்டுக் கூடத்தை சாசனத்துக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாளாந்தம் வழிபாடுகளில் ஈடுபட்டாலும் ஒவ்வொருவரும் தத்தமது மதபோதனைகளுக்கமைய வாழ்

23 ஆம் பக்கம் பார்க்க....

# சட்டவிரோதமாக விற்கப்பட்ட ஒரு தொகுதி மதுபானங்கள் மீட்பு

## ஒருவர் கைது




கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் வெலிக்கன்னவின் கட்டளைக்கமைய, கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கிளிநொச்சி வட்டக்கச்சி கட்சன் வீதியில் பிரதி பொலிஸ்மா அதிபரால் நியமிக்கப்பட்ட விசேட பொலிஸ்குழு மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் போது சட்ட விரோதமாக விற்பனை செய்யப்பட்டுவந்த ஒரு தொகுதி மதுபானங்கள் கைப் பற்றப்பட்டன.

நேற்று செவ்வாய்க்கிழமை பொலிஸார் மேற்கொண்ட மேற்படி சுற்றிவளைப்பின் போது சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்டு வந்த 250 மில்லி லீற்றர் மதுபான போத்தல்கள் 46, 400 மில்லி போத்தல்கள் 5, பியர் ரின்கள் 4 ஆகியவற்றுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். இதேவேளை குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட மற்றுமொருவர் தப்பி சென்றதாகவும், அவரையும் கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர். (செ-15)

# வெதுப்பக கிணற்றினுள் இறந்த நிலையில் நாய்

## உற்பத்தி பொருட்கள் அழிக்கப்பட்டன



(கரணவாய்)

வெதுப்பம் ஒன்றின் கிணற்றுக்குள் நாயினை அடித்து கொன்று வீசிய விசமிகளின் செயலால் நெல்லியடி நகர் பகுதியில் நேற்று பரபரப்பு ஏற்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நெல்லியடி நகரில் உள்ள வெதுப்பகம் ஒன்றின் கிணற்றுக்குள் நாய் ஒன்று இறந்த நிலையில் காணப்பட்டது. இதனையடுத்து கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி சுதேஸ் குமார் தலைமையிலான சுகாதாரப் பரிசோதகர்கள் அங்கு சென்று உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை அழித்ததுடன் வெதுப்பகத்தை மறு அறிவித்தல் வரை மூடியுள்ளனர்.

தொடர்ந்து இடம்பெற்ற முதற்கட்ட விசாரணைகளில் வெதுப்பக விற்பனையின் போட்டி காரணமாக இச் செயல் இடம்பெற்றுள்ளதாக அறியக் கிடைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-60)


உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-6670)



# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

அன்புடையீர்!
கடந்த 14.11.2016 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
**பொன்னு விக்கினேஸ்வரன்**

எமது அன்பின் குடும்ப விளக்கு எம்மை
விட்டுப் பிரிந்து ஒரு மாதமென்ன
ஒராயிரம் ஆண்டானாலும்
உமை நாம் மறவோம்



வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று 14.12.2016 புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம்-10.05.1947
மறைவு-14.11.2016

காரைக்கால் வீதி,
இணுவில் கிழக்கு.
(6926)
-குடும்பத்தினர்.



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



# வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel ஆன Tilko Jaffna City Hotelற்கும் அதன் பிரிவான Charty Beach Resortற்கும் பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- சமையலாளர் (Cook)-06 பேர்
- காசாளர் (Cashier)-02 பேர்
- பூந்தோட்ட பராமரிப்பாளர் (Gardener)-02 பேர்
- விடுதிப் பணியாளர் (Housekeeping Staff)-06 பேர்

அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.

உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:-
0773306985/ 0779817617
(சி-6680)



அபிவிருத்தி லொத்தர் சபையின் 12.12.2016 அன்று சீட்டிழுப்பு இடம்பெற்ற அபிவிருத்தி இலட்சாதிபதி லொத்தரில் 1 இலட்சம் ரூபாய் பணப்பரிசு யாழ்ப்பாணத்தில் வெற்றி கொள்ளப்பட்டது. அவ் லொத்தர் கனகலிங்கம் திலகவதி முகவர் ஊடாக விநியோகம் செய்யப்பட்டுள்ளது. நீங்களும் இன்றே கனகலிங்கம் திலகவதி லொத்தர் கூடுகளுக்கு சென்று; கனகலிங்கம் திலகவதி, வைரவர் கோவில் பின்புறம், யாழ்ப்பாணம் என்று அச்சிடப்பட்டுள்ள லொத்தர்களை கேட்டுவாங்குங்கள். (6924)



SINGER Plus
வருட இறுதி
மெகா சேல்

இடம் SINGER Plus காட்சியறை, மானிப்பாய்
காலம் 11 - 17 Dec 2016




40" SONY TV
சாதாரண விலை: 1,02,900/=
விசேட விலை: 87,000/=
வட்டியின்றிய மாதக்கொடுப்பனவு

சிங்கர் சலவை இயந்திரங்கள்
சாதாரண விலை: 49,900/=
விசேட விலை: 42,000/=
வட்டியின்றிய மாதக்கொடுப்பனவு
4 வருட உத்தரவாதம்

SINGER, SKYWORTH, UNIC TV களிற்கு
- 18,000/- வரையான விசேட விலைக்கழிவு.
- வட்டியின்றிய மாதக்கொடுப்பனவு

SINGER
Skyworth UNIC
3 வருட உத்தரவாதம் இலவசம்

நீங்கள் கொள்வனவு செய்யும் அனைத்துப் பொருட்களுக்கும் விசேட சலுகைகள்...

தொ.பே: 021 225 5343
021 510 0280
(சி-6663)

# விடுதலைப் புலிகளை அழிக்க எத்தனை கோடி?

## சிவ்சங்கர் மேனன் பரபரப்புத் தகவல்

(கொழும்பு)

**இலங்கையின் உள்நாட்டுப் போர் கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் நிறைவுக்கு வந்தது. இந்நிலையில், அதற்காக 200 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக இந்திய முன்னாள தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்துள்ளார். இதற்குள் சந்தர்ப்ப செலவு பற்றிய மதிப்பீட்டு விபரங்கள் உள்ளடக்கப்படவில்லை எனவும் மேனன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

தெற்காசியாவில் மிகவும் வேகமாக அபிவிருத்திஅடைந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இலங்கையின் பொருளாதாரம் காணப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

1983 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் 80 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் வரை போராளிகள் உள்ளிட்டவர்கள் இரண்டு தரப்பிலும் கொல்லப்பட்டுள்ளனர்.

அவர்களில் 30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரையிலானவர்கள் பொதுமக்கள் எனவும் 27,693 புலி உறுப்பினர்கள், 23,790 இலங்கை இராணுவத்தினர் எனவும் 1,155 பேர் இந்திய அமைதி காக்கும் படையினர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தத்தின் இறுதிக் கட்டம் 3 இலட்சம் அகதிகள் அல்லது இடம்பெயர்ந்தோரை உருவாக்கியது. அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 1.6 மில்லியன் நிலக்கண்ணி வெடிகளை இந்த போர் விட்டு சென்றது.


ஆனால் பேரில் உயிரிழந்தவர்கள் இலங்கையின் கலப்பு சமூகத்தினராகும். இதற்கு, தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் சிங்களம் பேரினவாதத்திற்கு சமமான அளவு பொறுப்பு உள்ளதென மேனன் தெரிவித்தார்.

"கொலைகள், சித்திர வதைகள், தடுத்து வைத்தல் மற்றும் போரில் அனைத்து தரப்பினராலும் அதிகளவில் மனித உரிமை மீறப்பட்டமையின் ஊடாக இலங்கையின் ஜனநாயகம் காணாமல் போனது.

சிவில்-இராணுவ உறவுகள் திரிபுபட்டமை, சிங்கள சமூகம் இராணுவமயமாக்கப்பட்டமை, தமிழ் மற்றும் சிவில் சமூகத்தினர் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டமையின் ஊடாக எந்த திசையிலும் நம்பிக்கை இல்லாமல் போனது. யுத்தத்தின் பின்னர் இலங்கையின் நல்லிணக்க முனைப்புக்கள் வரவேற்கப்பட வேண்டிய வகையில் அமைந்துள்ளன.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் யுத்த வெற்றியின் பின்னர் அதனை நல்லிணக்கத்தை நோக்கியோ சமாதானத்தை நோக்கியோ நகர்த்த முயற்சிக்கவில்லை.

அங்கு சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய முனைப்புக் காட்டும் தமிழ்த் தலைவர்களும் இருக்கவில்லை என சிவ்சங்கர் மேனன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)



# குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டால் பதவி விலகுவேன்-கடற்படைத்தளபதி

குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் பதவி விலகுவதாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜே குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்தில் இடம்பெற்ற சம்பவம் குறித்து விசாரணைக் குழு ஒன்று விசாரணை நடத்தி குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் பதவியை இராஜினாமாசெய்வேன்.

ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறி அந்த இடத்தில் காணப்பட்ட பீதியான நிலைமை குறித்து செய்தி அறிக்கையிடாமை வருத்தமளிக்கின்றது.

உலகின் மூன்றாவது மிகப் பெரிய வாகனப் போக்குவரத்து கப்பல் நான்கு நாட்களாக பிடித்து வைக்கப்பட்டிருந்தது, அதனை விடுவித்தமைக்காக சர்வதேச கடல் அமைப்பு எனக்கு சான்றிதழ் வழங்கியுள்ளது.

இலங்கை சமுத்திர ரீதியில் முக்கியமான ஓர் நாடாகும், இலங்கைக்கு வரும் கப்பல்கள் தொடர்பில் கடற்படைத் தளபதி என்ற ரீதியில் என்க்கு பொறுப்பு உண்டு.

நான்கு நாட்களாக இந்தக் கப்பல் தனது பயணத்தை தொடர அனுமதிக்கப்படவில்லை, உடனடியாக கடற்படையினர் இந்த விடயத்தில் தலையீடு செய்யவில்லை. இரண்டு கப்பல்களையும் விடுதலைசெய்யுமாறு இதற்கு முன்னதாகவும் கோரியிருந்தோம்.

கோரிக்கைகளை நிறைவேற்றாது கப்பல்களை விடுத்தால் வருவோரைக் கொன்று தாமும் உயிரை மாய்த்துக் கொள்வதாக அறிவித்திருந்தனர். இதில் எனக்கு எந்தவொரு அரசியல் நோக்கமும் இருக்கவில்லை.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் போர் வெற்றி கொள்ளப்பட்டது. அதற்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்திலும் கடமையாற்றியிருந்தேன்.

நான் கடற்படையின் சார்பிலும் நாட்டின் சார்பிலுமே தீர்மானங்களை எடுக்கின்றேன்.



தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் ஊடகவியலாளர் வழக்குத் தாக்கல் செய்தால் ஊடகங்களில் காண்பிக்கப்படாத வீடியோக்கள் எம்மிடமும் உள்ளன.

எனது பக்க நியாயங்களையும் நான் முன்வைப்பேன். ஊடகங்கள் கூறுவதனைப் போன்று அவசரமாக பதிலளிக்க வேண்டியதில்லை என கடற்படைத் தளபதி ரவீநதர விஜேகுணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# இனவாதத்தை தூண்டும் இணையத்தளங்களுக்கு பிரதமர் கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் இனவாதத்தை தூண்டும் வகையில் செயற்படும் இணையத்தளம் மற்றும் சமூக வலைத்தளங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

ஊவா மாகாணத்தின் குருத்தலாவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய மீலாத் விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியனவற்றில் சில கட்டுப்பாடுகளை விதிக்க எம்மால் முடிந்த போதிலும், இணையத்தளம் மற்றும் சமூக வலையத்தளங்களில் கூறும் விடயங்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்க முடியாதுள்ளது.

சமூக வலைத்தளங்களில எந்தவொரு கெட்ட வார்த்தைகளையும் பொறுப்பற்ற விடயங்களையும் இன்று வெளியிட முடியும்.

எனவே, இவர்களை அழைத்து தெளிவுபடுத்தும் நடவடிக்கையை ஜனாதிபதி மேற்கொள்வார்.

அவ்வாறு அவர்களை கட்டுப்படுத்த முடியவில்லை என்றால், அதற்காக சட்டம் கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்வோம் என பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# துறைமுக ஊழியர்களின் போராட்டம் 7-வது நாளாக நேற்றும் தொடர்ந்தது



அம்பாந்தோட்டை துறைமுக ஊழியர்கள் ஆரம்பித்துள்ள பணிப்பகிஷ்கரிப்பு 7 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

தம்மை துறைமுக அதிகார சபையில் இணைத்துக் கொள்ளுமாறு கோரிக்கை விடுத்து கடந்து 8 ஆம் திகதி முதல் அம்பாந்தோட்டை துறைமுக ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பை ஆரம்பித்திருந்தனர்.

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுக வாயிலை மறித்து பணிப் பகிஷ் கரிப் பு முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் ஆறாவது நாளான நேற்று முன்தினம் வாயில் திறந்து விடப்பட்டது.

483 ஊழியர்களின் நலன் தொடர்பில் நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் தவறியுள்ளதாகவும் இதனையடுத்தே ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்த மாகம்புர துறைமுக சேவை சங்கத்தின் உபதலைவர் ஐ.கே.ஒமேஷ் நேற்றைய தினம் சிவில் உடையணிந்து ஊழியர்கள அமைதி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-3)

# மீண்டும் யுத்தத்திற்கு வழிகோலும் மதக் குழுக்கள் இருப்பது துரதிர்ஷ்டம்

## அர்ஜுன ரணதுங்க கவலை

மீண்டுமொரு யுத்தத்திற்கு வழிகோலும் மதக் குழுக்கள் எம்மிடையே இருப்பது எம் இனத்தின் துரதிர்ஷ்டம் என துறைமுகங்கள் மற்றும் கப்பல துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கிராமத்து விஹாரையே கிராமத்தின் சக்தி எனும் வேலைத்திட்டத்தின் மூன்றாம் கட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இக் கருத்தை வெளியிட்டார்.

அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக போதிய விளக்கமின்றி ஒரு சிலர் மேற்கொள்கின்ற கருத்துக்கள் காரணமாக இன்று இனங்களிடையே மோதல் நிலை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# சிறந்த வீரருக்கான போலன் டி ஓர் விருதை 4ஆவது முறையாக வென்றார் ரொனால்டோ

சிறந்த கால்பந்து வீரருக்கான விருதை போர்த்துக்கல் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ நான்காவது முறையாக வென்றார். ஆர்ஜென்ரினாவின் மெஸ்சி இரண்டாவது இடம் பிடித்தார்.

கால்பந்து அரங்கில் சிறந்து விளங்கும் நட்சத்திரத்துக்கு ஆண்டு தோறும் சிறந்த வீரர் விருது வழங்கப்படும். இந்த ஆண்டுக்கான உத்தேச பட்டியலில் போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ (ரியல் மட்ரிட் கழகம்), ஆர்ஜென்ரினாவின் மெஸ்சி (பார்சிலோனா) உள்ளிட்ட வீரர்கள் இடம்பிடித்தனர்.




**நான்காவது முறை**

இதன்படி, இந்த ஆண்டு கிறிஸ்டியானோ ரொனால்டோ தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம், இந்த விருதை நான்காவது முறையாக கைப்பற்றினார். ஏற்கெனவே, கடந்த 2008, 2013, 2014ல் வென்றிருந்தார். கடந்த 'சீசன்' ரொனால்டோவுக்கு சிறப்பானதாக அமைந்தது. தேசிய அணிக்காக யூரோ கிண்ணம், கழக அணிக்காக சம்பியன்ஸ் லீக் தொடரில் பட்டம் வென்று தந்தார்.

**வீரர்களுக்கு நன்றி**

ரொனால்டோ கூறுகையில், "நான்காவது முறையாக சிறந்த வீரருக்கான விருதை வெல்வேன் என நினைத்துக்கூட பார்க்கவில்லை. மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. எனது தேசிய மற்றும் கழக அணி வீரர்கள் மற்றும் ரசிகர்களுக்கு நன்றி." என்றார்.

சிறந்த வீரருக்கான விருதை ஐந்து முறை கைப்பற்றியுள்ள பார்சிலோனா வீரர் மெஸ்சிக்கு இரண்டாவது இடமே கிடைத்தது. பிரான்ஸ் வீரர் கிரிஸ்மன் மூன்றாவது இடம் பிடித்தார். (க)

# டெஸ்ட் தலைமைப் பதவியிலிருந்து விலகும் மிஸ்டர் 360 டிகிரி



360' டிகிரி என்று செல்லமாக அழைக்கப்படும் தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் ஏபிடி வில்லியர்ஸ் முழங்கால் காயத்தினால் அவதிப்பட்டு வந்தார்.

இதனால் ஏற்கெனவே அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடரில் இருந்து விலகி இருந்தார். அவருக்கு பதிலாக டு பிளசிஸ் டெஸ்ட் அணிக்காக தற்காலிக அணித்தலைவராக நியமிக்கப்பட்டு இருந்தார்.

இந்நிலையில், டெஸ்ட் அணிக்கான தலைவர் பொறுப்பில் இருந்து நிரந்தரமாக விலகுவதாக ஏபிடி வில்லியர்ஸ் அறிவித்துள்ளார்.

இதனை ஏற்றுக்கொண்ட தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை டு பிளிசிஸை நிரந்தர அணித் தலைவராக நியமனம் செய்துள்ளது.

தலைவர் பொறுப்பில் இருந்து வலகியதை அடுத்து, இலங்கைக்கு எதிரான தொடரிலும் அவர் இடம் பெறவில்லை.

இது குறித்து டி வில்லியர்ஸ் கூறுகையில், அணியில் தனிப்பட்ட நபர்களின் நலனை விட அணியின் நலனே முக்கியமானது என்றார். (க)

# கிடைத்த வாய்ப்புக்களை நாம் தவறவிட்டோம்

## தோல்வி குறித்து புலம்புகிறார் அலஸ்ரயர் குக்

மும்பையில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அஸ்வினின் அபார பந்து வீச்சில் இந்திய அணி இன்னிங்ஸ் வெற்றி பெற்று தொடரையும் கைப்பற்றியது.

இந்த போட்டியின் தோல்வி குறித்து இங்கிலாந்து அணித் தலைவர் அலஸ்ரயர் குக் அளித்த பேட்டியில,

வாய்ப்பை தவறவிட்ட மற்றொரு ஆட்டம் இதுவாகும். முதல் இன்னிங்ஸில் 400 ஓட்டங்கள் சேர்த்தது இங்கு போதுமான ஓட்ட எண்ணிக்கையாகும்.



2 விக்கெட் இழப்புக்கு 230 ஓட்டங்கள் எடுத்து இருந்த நாங்கள் முதல் இன்னிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையை இன்னும் உயர்த்தி இருக்கலாம். இந்திய அணி முதல் இன்னிங்ஸில் ஒரு கட்டத்தில் 307 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து இருந்தது.

எங்களுக்கு நல்ல வாய்ப்பு கிடைத்தது. விக்கெட்டுகள் வீழ்த்தும 3 நல்ல வாய்ப்புகளை நாங்கள் வீணடித்தோம்.

அது எங்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தியது. விராட் ஹோலி, விஜய, ஜெயந்த் பிடி வாய்ப்புகளை கோட்டை விட்டது எங்கள் அணியின் தோல்விக்கு வழிவகுத்தது.

இங்குள்ள சூழ்நிலையில் இந்திய அணி எப்பொழுதும் நம்பிக்கையுடன் விளையாடும். அதேபோல் இந்த ஆட்டத்திலும் சிறப்பாக விளையாடியது என்று தெரிவித்தார். (க)

# அதிக ஓவர்கள் வீச நான் ரெடி

## அஞ்சலோ மத்யூஸ் எதிர்பார்ப்பு



தென்னாபிரிக்காவுடன் இடம்பெறவுள்ள டெஸ்ட் தொடரில் நான் அதிகமான ஓவர்களை வீசுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் தென்னாபிரிக்காவுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி போர்ட் எலிசபெத்தில் ஆரம்பமாகவுள்ளது.

கடந்த டெஸ்ட் போட்டிகளில் தாம அதிகமாக பந்து வீசாத நிலையில், வேகப்பந்து வீச்சாளர்களுக்கு ஏற்ற தென்னாபிரிக்காவில் அதிகமான ஓவர்களை வீசி அணிக்காக அதிக விக்கெட்டுக்களை பெற்றுக் கொடுக்க எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் இங்கிலாந்தில் இடம்பெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில் பந்துவீசிய மத்யூஸ் உபாதைகளுக்கு உள்ளாகி இருந்தார்.

இதன்காரணமாக அண்மையில் நடைபெற்ற பல கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில் அவர் கலந்து கொள்ளவில்லை.

இலங்கையின் சிரேஷ்ட துடுப்பாட்ட வீரர்களில் அஞ்சலோ மத்யூஸ் மாத்திரமே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# கார்த்திகைத் தீபத்தில் கடை எரிந்து நாசம்



(பரந்தன்)

கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் உள்ள சில்லறை விற்பனைக் கடை ஒன்றில் நேற்று கார்த்திகை தீபம் தவறி பொருட்களின் மீது வீழ்ந்து தீ பரவியதில் கடை எரிந்து நாசமாகியுள்ளது.

பிரதேசவாசிகள் மற்றும் அயல் வீட்டுக்காரர்களால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டபோதும் கடையின் எண்பது வீதமான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளதாக கடை உரிமையாளர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

மேற்படி தீ விபத்துச் சம்பவத்தில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. (செ-15,312)

# வெல்டிங் கடை எரிந்து நாசம்

புன்னாலைக்கட்டுவன் சந்தியில் அமைந்துள்ள வெல்டிங் (கம்மாலை) கடை ஒன்றில் நேற்று இரவு ஏற்பட்ட மின்ஒழுக்கு காரணமாக கடையொன்று திடீரெனத் தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது.

யாழ்ப்பாணம் புன்னாலைக் கட்டுவன் சந்திப் பகுதியில் உள்ள வெல்டிங் கடையின் பின்புறத்தில் நேற்று இரவு 7 மணியளவில் திடீரெனத் தீப்பற்றிக்கொண்டது. இதனையடுத்து அங்கு வந்த உரிமையாளர், பணியாளர்களுடன் அயலவர்களும் இணைந்து தீயைக் கட்டுப்படுத்த முயன்றபோதும் அது முடியாமல் போனது.

பின்னர் யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீ அணைப்பு வாகன உதவி கோரப்பட்டு சம்பவ இடத்துக்கு விரைந்த தீ அணைப்பு பிரிவினரின் உதவியுடன் தீ முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

எனினும் கடையிலிருந்த பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன தீயில் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

தீ பரவியமைக்கான காரணம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (செ-9,78)

# முல்லைமணி காலமானார்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் முல்லைத்தீவு ஒட்டுசுட்டானைச் சேர்ந்தவருமாகிய முல்லைமணி வே. சுப்பிரமணியம் நேற்று மாலை வவுனியாவில் காலமானார்.



விரிவுரையாளர் என்ற பதவியை விட முல்லைத்தீவு மகா வித்தியாலய அதிபர், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எனப் பல வேறு பட்ட பதவிகளை அவர் வகித்துள்ளார்.

சிறுகதை, நாவல், கவிதை, வரலாற்று ஆய்வுகள் எனப் பல துறைகளில் தனது ஆளுமைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் எழுதிய பண்டாரவன்னியன் என்ற நாடகம் மிகப் பிரபலமானது.

2005ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து கௌரவ கலாநிதிப் பட்டத்தையும் 2015இல் இலங்கை அரசின் உயர்இலக்கிய விருதாகிய சாகித்திய ரத்னா விருதையும் இவர் பெற்றுள்ளார். (செ-11)









மதுரம் கிட்ஸ் முன்பள்ளியின் மழலைகள் மகிழ்வரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறுவன கலையரங்கில் முன்பள்ளியின் தலைவர் எஸ்.கே. கிருபாகரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். செங்குந்தா இந்துக்கல்லூரி அதிபர் ஆர்.பாலச்சந்திரன், வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.


UNIVERSITY OF CAMBRIDGE **CAMBRIDGE ENGLISH**



- Around 4 million people a year take Cambridge English exams
- 13000 universities and employers globally recognise their certificates
- Cambridge have an international network of 2,700 authorised exam centres in 130 countries
- 40,000 schools and intitutions prepare students for cambridge English exams
- Cambridge have 100 years of experience and expertise in English language assessment

Cambridge ன் மூன்று பாடநெறிகள் 19.12.2016 ல் ஆரம்பிக்கின்றோம்

Exam Date : 18.03.2017

**Cambridge - Prelimnary English Test (PET)**

Centre - British Council Colombo.

இது ஓர் Intermediate B1. Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை பல்கலைக்கழக அனுமதிக்காக ஏற்றுக்கொள்கின்றன.

நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றி பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்.

It covers all four language skills (Reading, Writing, Listening and Speaking) and knowledge of grammar and vocabulary.

**FCE** Cambridge First Certificate in English

FCE is an upper intermadiate level exam. It tests the ability to deal confidently with a range of written and spoken. communication. FCE is the most widely taken of the general English exam with over 250,000 candidates every year. This exam is at CEFR Level B2

இது ஒரு சர்வதேசப் பரீட்சையாகும் International Exam. 15000 ற்கு மேற்பட்ட கல்வி நிறுவனங்களும் Employers ம் FCE யை ஏற்றுக்கொள்கின்றன. உலகத்தின் எந்த ஒரு இடத்திலும் சிறந்த ஓர் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அதியுயர்ந்த தகுதியாகும். இது ஒரு வாழ்நாள் முதலீடு.

Exam Date : 06.06.2017

Centre - British Council Colombo

It covers all four skills Reading and Use of English, Writing, Listening - Speaking

**CAE** Cambridge Advanced English - C1

**Who is the exam for?**

Cambridge English: Advanced is typically taken by high achievers who want to:

- follow an academic course at university level
- communicate effectively at managerial and professional level
- participate with confidence in workplace meetings or academic tutorials and seminars
- carry out complex and challenging research
- stand out and differentiate themselves.

**Who recognises the exam?**

Cambridge English: Advanced is accepted by more than 4,000 organisations, employers and governments around the world as being a reliable, accurate and fair test of English. This includes universities and colleges in the UK, USA, Canada, Australia, Europe and beyond.

**Speciality of this course:**

- B1 Level ல் இருந்து C1 Level வரை எல்லா மாணவர்களுக்கும் போதனை நடைபெறும்.
- ஒவ்வொரு நாளும் Listening Practice நடைபெறும்.
- வாழ்நாள் முழுவதும் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைப்பதற்கும் Complete Practice கொடுக்கப்படும்.

**Course Schedule**

வகுப்புக்கள் ஆரம்பம் 19.12.2016


Monday, Tues, Wed, Thurs 10.30 - 1.00 pm

Sat & Sunday 3.00 pm - 6.00 pm

**BRITISH COLLEGE OF ENGLISH**

192, NAVALAR ROAD, JAFFNA. (பெருமாள் கோவிலடி 'திலக்குரல்' காரியாலயத்திற்கு முன்னால்)


## ஆஸி குடியுரிமையை இழக்க குமார் குணரட்ணம் விருப்பம்?



(கொழும்பு)

அவுஸ்திரேலிய குடியுரிமையை இரத்து செய்து இலங்கைப் பிரஜாவுரிமையைப் பெறுவதற்கு முன்னிலை சோஷலிசக் கட்சியின் தலைவர் குமார் குணரட்ணம் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இலங்கைக் குடியுரிமையைப் பெறுவதற்காக குமார் குணரட்னம் அனுப்பிவைத்திருக்கும் விண்ணப்பத்தை ஆராய்ந்து வருவதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களப் .பணிப்பாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக அவுஸ்திரேலியாவில் தஞ்சம் புகுந்த குமார் குணரட்னம் பல வருடங்களுக்குப் பின்னர் 2015 ஆம் ஆண்டு நாடு திரும்பியிருந்தார்.

அதன் பின்னர் அவர் குடிவரவு. குடியகல்வு சட்டங்களை மீறி அரசியலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

எவ்வாறாயினும் அவர் கடந்த இரண்டாம் திகதி அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்டதோடு அவருக்கு மூன்று மாதகால தற்காலிக விசா வழங்கியிருப்பதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-3)

## இராசி பலன்

14.12.2016

(iMY]çï 29, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.13 மணிக்கு

பூரணை காலை 6.47 மணிவரை

பிரதமை பின்னிரவு 4.41 மணிவரை

மிருகசீரிடம் முன்னிரவு 9.04 மணி வரை

விநாயக விரதாரம்பம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| கேது செவ் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அனுசம், கேட்டை காலை 9.19 மணிக்கு மிது-சந் | | |
| சுக் | | | ராகு |
| புத | சூரி சனி | | குரு |

**மீனம்** பொருளாதார நிலை உயரும், தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**மேடம்** சவால்களை சமாளிக்கும் நாள், சகோதரர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், பகையொன்று நட்பாகலாம்.

**இடபம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், தேக நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**கும்பம்** பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**மகரம்** மனையில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், போசன நன்மையுண்டு.

**தனுசு** குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், போசன சுகமுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்** தித்திக்கும் பயணங்கள் வந்து சேரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

**துலாம்** தந்தைவழி உறவில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண நினைப்பீர்கள், காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், ஆன்றோர் சந்திப்புண்டு.





இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பருத்தித்துறை சாலைக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள குறை நிறைபற்றி விரிவாக ஆராய்ந்தார். முற்பகல் 11 மணியளவில் வருகை தந்த இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் ரமால் ஸ்ரீவர்த்தனவை பருத்தித்துறை சாலை முகாமையாளர் கே.கந்தசாமி வரவேற்றார். ஆலய வழிபாடுகளை அடுத்து சாலையின் உட்புறங்களை சுற்றிப் பார்த்து அங்குள்ள குறைநிறைகளை ஆராய்ந்தார். அதன்பின்னர் ஊழியர்களின் நலன்குறித்தும் விசாரித்து அறிந்து கொண்டார். (படங்கள்:- மகாலிங்கம்)

# வாள் மற்றும் கஞ்சாவுடன் கோப்பாயில் 6 பேர் கைது

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய வாள் மற்றும் கஞ்சாவுடன் ஆறு பேரை கைது செய்துள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தின்தலைமைபொலிஸ் அதிகாரியான சுபாஷ் மஞ்சுள காந்தோல தெரிவித்துள்ளார். கோப்பாய் பகுதியில் நீண்ட காலமாக குறித்த குழுவினர் கஞ்சா புகைத்தலில் ஈடுபடுவதாகவும் அதன் பின்னர் வீதியால் செல்பவர்களுடன் சேட்டைகளில் ஈடுபடுவதாகவும் பொதுமக்களால் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது. மேலும் அங்குள்ளவர்களுடன் தெரு சேட்டையில் ஈடுபட்டு வருவதாகவும் கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த நபர்களை கைது செய்வதற்காக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். இதனையடுத்து நேற்று முன்தினம் நள்ளிரவு குறித்த நபர்களை கைது செய்வதற்காக பொலிஸார் சென்றிருந்தனர். இதன்போது குறித்த நபர்கள் கஞ்சா புகைத்து கொண்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களிடம் இருந்து வாள் என்பனவும் கைப்பற்றப்பட்டதுடன் அவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கைது செய்யப்பட்ட மூவரையும் அவர்களிடம் கைப்பற்றப்பட்ட வாள், மோட்டார் சைக்கிள் என்பவற்றை யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவானது உத்தியோகபூரவ வாஸ்த தளத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கோப்பாய் பொலிஸ் நிலைய தலைமை அதிகாரியான சுபாஷ் மஞ்சுள காந்தோல தெரிவித்தார். (இ-4)

# பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்து தயக்கமின்றி முறையிடவும்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு



பெண்களுக்கெதிரான வன்முறை தொடர்பில் தயக்கமின்றி யாராகவிருந்தாலும் முறையிட முடியும் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

பெண்களீதானவன்முறைகெதிரான வாரத்தினை முன்னிட்டு யாழில் அண்மையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை குறிக்கப்பட்ட சில காலத்துக்கு பின்னர் கூடுதலாக அதிகரித்துள்ளமை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

சில கட்டுப்பாடுகளுக்குள் இருந்து திடீரென சுதந்திரமான நிலை வரும் போது இவ்வாறான வன்முறைச்சம்பவங்கள் அதிகரிக்கின்றன. தற்போது பாடசாலை, தனியார் கல்வி நிலையங்களுக்குக்கூட மாணவிகள் தனியாகச் செல்ல முடியாத பாரதூரமான நிலை ஏற்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்முறை எல்லா மாவட்டத்திலும் உள்ளது. ஆனால் எமது மாவட்டத்தில் இது மிக முக்கியமான ஒரு பிரச்சினையாகவுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் பெண்கள் அபிவிருத்தி பிரிவு 3 வருட காலமாக இயங்கி வருகிறது. அதே போன்று பொலிஸ் நிலையங்களிலும் மகளிர் பிரிவு இயங்கி வருகிறது. வன்முறையால் பாதிக்கப்படுகிறவர்கள் தயக்கமின்றி முறைப்பாடுகளை பதிவு செய்ய முன்வர வேண்டும். வன்முறை தொடர்பான முறைப்பாடுகளை செய்வதால் சமூகத்தில் வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும் என சிலர் நினைக்கிறார்கள். அதன் காரணமாக முறைப்பாடுகள் அதிகளவில் பதிவு செய்யப்படுவதில்லை.

உண்மையான நிலைப்பாடுகளை வெளிக்கொண்டு வராமல் விடுவதால் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் இருப்பதுடன் வன்முறைச் சம்பவங்களும் அதிகரித்து செல்கிறது. எனவே இது தொடர்பில் பெண்கள் மத்தியில் விழிப்புணர்வு அவசியம்.

சிறு பிரச்சினைகள் என்றாலும் அவற்றை கூடுதலான முறையில் வெளிக்கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்க முடியும்.


பெண்களுக்கு எதிராக குடும்ப வன்முறை உள்ளது. வெளி இடங்கள் மற்றும் அலுவலகங்கள் என்பவற்றில் பலவிதமாக நடைபெறுகிறது.


குடும்பத்தில் ஏற்படும் வன்முறையால் அவர்களுக்குக் கிடைக்கும் உதவிகள் கூட உரிய முறையில் பயன்படுவதில்லை. இது குடும்பத்தை மிகவும் பாதிக்கிறது. இவ்வாறான செயற்பாடுகள் சில அலுவலகங்களிலும் நடக்கிறது.

எமது மாவட்டத்தை பாலியல் ரீதியான பிரச்சினை இல்லாத மாவட்டமாக மாற்றுவதற்கு பல்வேறு செயற்பாடுகள் நடைபெறுகின்றன. பால்நிலை சமத்துவம் தொடர்பான விழிப்புணர்வுகளை அலுவலகம், பாடசாலைகள், கிராம மட்டத்திலும் செய்ய வேண்டும்.

பல சமூக நிறுவனங்களுடன் இணைந்து அவற்றின் உதவிடன்வன்முறையை ஒழிப்பது சமூக கடமையென நினைத்து எல்லோரும் இணைந்து செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# புனரமைக்கப்படுமா? மீண்டும் ஏற்றப்படுமா?





சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள மட்டுவில் நுணாவில் எல்லை வீதி பல வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இந்த வீதியானது பருத்தித்துறை வீதி, கெண்டி வாய்க்கால்2ஆம்ஒழுங்கைபோன்ற பிரதான வீதிகளுடன் இணைவதனால் மக்கள் பாவனைகூடிய வீதியாக காணப்படுகின்றது.

கடந்த வருடம் எட்டாம் மாதம் அளவில் புனரமைப்பதற்காக தேவையான சகல பொருட்களும் கொண்டு வரப்பட்ட நிலையிலும் இன்னும் புனரமைக்கப்படவில்லை.

ஆனால் வருட இறுதியில் மீள கொண்டு வரப்பட்ட பொருட்கள் ஏற்றப்பட்டன.

அதேபோன்று இந்த வருடம் எட்டாம் மாதம் கொண்டு வரப்பட்ட பொருட்கள் இது வரை காலமும் புனரமைப்புப் பணிகள் தொடராத நிலையில் காணப்படுகின்றமையால் மீளவும் அப்பொருட்களை ஏற்றுவார்கள் என்ற ஐயப்பாடு அப்பிரதேச மக்கள், அவ்வீதிப் பாவனையாளர்கள் மத்தியில் நிலவுகின்றது. (இ

# மயிலிட்டி மக்களுடன் கலந்துரையாடல்

மயிலிட்டித்துறை ஜே/248, ஜே/251 ஆகிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மயிலிட்டி மக்களுக்கான கலந்துரையாடலும் மயிலிட்டி அபிவிருத்தி நிர்வாகத் தெரிவின் ஆலோசனையும் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் (ஏரிஞ்சியம்மன் கோவிலடி பருத்தித்துறை) நடைபெறவுள்ளது. இதில் மயிலிட்டி மக்கள் சகலரும் கலந்து கொள்ளுமாறு மீள்குடியேற்ற குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-60)

புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் மாதிரி முன்பள்ளியின் கலை விழாவும் பரிசளிப்பு விழாவும் நிலைய செயலாளர் மு.ஜெகதேவன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (படங்கள்: கரணவாய் செய்தியாளர்)






# புதிய பேருந்து வேண்டும்

(கரணவாய்)

பருத்தித்துறையில் இருந்து கண்டிக்கு புதிய பேருந்துச்சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கும் கொழும்பிற்கு மேலதிக பேருந்து சேவை ஒன்றை மேற்கொள்ளவும் புதிய பேருந்தொன்றை பெற்றுத் தரவேண்டும் என்பன உட்படசிலகோரிக்கைகளைபருத்தித்துறை சாலை முகாமை யாளர் கே.கந்தசாமி முன்வைத்தார்.

பருத்தித்துறை சாலைக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை விஜயம் மேற்கொண்டஇலங்கைப்போக்குவரத்துச் சபை தலைவர் ரமால் சிறிவர்த்தனவுடனான கலந்துரையாடலிலேயே பருத்தித்துறை சாலைமுகாமையாளர்இக்கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், தற்போது எமது சாலையில் 39-40 பேருந்துகள் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றன. கண்டிக்கான புதியசேவையொன்றைஆரம்பிப்பதற்கு எமக்குப் பேருந்து வேண்டும். அதேபோல பருத்தித்துறையிலிருந்து கொழும்பிற்கும் கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்குமாக ஆறு பேருந்துகள் சேவையில் ஈடுபட்டுள்ளன.

. நண்பகல் 12 மணிக்கு கொழும்பில் இருந்து பருத்தித்துறைக்கும் பருத்தித்துறையில் இருந்து கொழும்பிற்குமான சேவையில் ஈடுபடுமாறு பொதுமக்கள் கோருகின்றனர். இதற்காக புதிய பேருந்துகளைப் பெற்றுத்தர வேண்டும் என்றார்.

5 வருடங்களுக்கு மேலாக 500 ரூபா சம்பள அடிப்படையில் வேலை செய்பவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும்.

பணியாளர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலை வழங்கவேண்டும். ஆனால் அவர்கள் அரசியல்வாதிகளின் பின்னால் செல்லவேண்டிய நிலையுள்ளது. இதுமாறவேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்தனர். (இ-60)

# உர நிவாரணத் தொகையை வங்கிக் கணக்கில் வைப்பீடு செய்யும் நடைமுறை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

பெரும்போக பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான உர நிவாரணத் தொகையை வங்கிக் கணக்குகளில் வைப்பீடு செய்யும் நடைமுறை இன்று ஆரம்பமாகிறது.

இது தொடர்பாக விவசாய அமைச்சின் மேலதிக செயலாளர் விஜித் சந்திரபியதிலக தெரிவிக்கையில், அரச ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கும் வகையில், விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக பணம் வைப்பீடு செய்யப்படும். இந்த நடைமுறையில் பணத்தைப் பெற்றுக் கொள்வதில் தாமதங்கள் ஏற்படமாட்டா தென்றும் தெரிவித்தார்.

இம்முறை போதிய மழை பெய்யாத காரணத்தால் பெரும்போக பயிர்ச் செய்கை தாமதமாகியிருந்தது. இதன் காரணமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, கம்பஹா ஆகிய நான்கு மாவட்டங்களில் இருந்து மாத்திரமே பயிர்ச் செய்கையை ஆரம்பித்த விவசாயிகளின் பட்டியல்கள் கிடைத்ததாக மேலதிக செயலாளர் தெரிவித்தார்.நிவாரணத் தொகைக்குரிய பணத்தை வைப்புச் செய்யும் நடைமுறை எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் முழுமையாக பூர்த்தி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## வர்தாவால் தடைப்பட்ட

# சென்னை - கொழும்புக்கு இடையிலான விமான சேவை வழமைக்குத் திரும்பியது

வர்தா சூறாவளி காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த சென்னை - கொழும்புக்கு இடையிலான விமான சேவை நேற்று முதல் வழமைக்குத் திரும்பியது.

இந்தியாவின் சென்னை விமான நிலையம் உட்பட அப்பிரதேசத்தின் பல பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள மோசமான காலநிலை மாற்றத்தினால், இலங்கையிலிருந்து சென்னை வரை பயணிக்கவிருந்த விமானங்கள் அனைத்தும் நேற்று நண்பகல் வரை ஒத்தி வைக்கப்பட்டன.

எனினும் சென்னைக்கான விமான சேவைகளை நேற்று முற்பகல் ஆரம்பிக்க முடியும் என்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் முகாமைப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

வர்தா சூறாவளி காரணமாக சென்னை- கொழும்புக்கு இடையிலான விமான சேவைகள் நேற்று முன்தினம் இடைநிறுத்தப்பட்டிருந்ததோடு. சென்னைக்கு வரும் சில சர்வதேச விமானங்களும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கம் செய்யப்பட்டன.

வர்தா புயல் நேற்று முன்தினம் மாலை சென்னை நகருக்குள் மீண்டும் பிரவேசித்துள்ளதாக தெரிவிக்கப்படும் தகவலையடுத்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

எனினும் தற்போது நிலைமை சீர்நிலைக்குத் திரும்பியுள்ளதனால் விமான சேவைகளை மீள ஆரம்பிக்கநடவடிக்கை எடுத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(இ-3)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி.உமாநிதி புவனராசா
(இலங்கை கல்வி நிர்வாக சேவை)

கிளிநொச்சி வலயத்தில் ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக பத்தொன்பது வருட அர்ப்பணிப்பான சேவை செய்து, இன்று முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் தங்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



வலயக் கல்விப் பணிப்பாளரும்
உத்தியோகத்தர்களும் ஊழியர்களும்
வலயக் கல்வி அலுவலகம்,கிளிநொச்சி.
2016.12.14
(6922)


# சவுதியின் சட்டத்தை மீறிய பெண்ணுக்கு நேர்ந்த கதி!



சவுதி அரேபிய சட்டத்தை மீறிய பெண் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என அந்நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த பெண், ரியாத் நகரில் கடந்த மாதம் சவுதி அரசின் சட்டத்தை மீறி தைரியமாக புகைப்படங்களை எடுத்து டுவிட்டர் கணக்கில் பதிவேற்றம் செய்துள்ளார்.

தலைமுதல் கால்வரை மறைக்கும் ஆடைகளையே (நிகாப்) சவுதி பெண்கள் அணிய வேண்டும் என சவுதி சட்டத்தில் உள்ளது. ஆனால் குறித்த பெண் அந்த சட்டத்தை மீறி புகைப்படங்களை எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்துள்ளார் என அந்நாட்டு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் Fawaz al-Maiman குறிப்பிட் டுள்ளார்.

குறித்த பெண் செய்த செயல் பல சர்ச்சை களை ஏற்படுத்தியிருந்த நிலையில் அவர் நேற்று முன்தினம கைது செய்யப்பட்டார் என பொலிஸார தெரிவித்தனர்.

மேலும் குறித்த பெண் உறவினர்களுடன் தொடர்பில்லாத ஆண்களுடன் வெளிப்படையாகவே பேசுவார் என்றும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. நாட்டின் சட்டத்திற்கு முரணாக நடந்து கொள்ளும் இவ்வாறானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்க வேண்டும் என்றும் இவ்வாறு செயற்படுபவர்களுக்கு இஸ்லாமிய போதனைகளை கற்பித்துக் கொடுக்க வேண்டும் என்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். (இ-3)


கிருஷ்ணா அடகு சேவை

பதிவு இல J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2016 ஆம் ஆண்டு 30.06.2016 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி (15.01.2017) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்க தவறின் 15.01.2017 திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எனது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(அ-8676)

இல. 370,
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
021 490 0311

உரிமையாளர்
A.S.Surendran.

இல. 09
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5046.



துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்பாள்



வெள்ளவத்தையில் பென்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்குக் கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் புதன்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை 14.12.2016 மாலையிலிருந்து 18/12/2016 காலை வரை ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு.

யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார்.

சனிக்கிழமை அன்னதானம் வழங்கப்படும்.

பூசை நேரம்: முற்பகல் 10.30-12.30 மணிவரை
மாலை 5.30-6.30 மணிவரை

குறிப்பு: கலாசார உடையுடன் வருகை தரவும்.

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றி வளைப்பு

## மல்லிகைத்தீவு காட்டுப்பகுதியில் சம்பவம்

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயப் பிரிவிற்குட்பட்ட புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பிரிவிலுள்ள மல்லிகைத்தீவு காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையமொன்று சுற்றி வளைக்கப்பட்டு 35 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு கோடாவும் (35 லீற்றர்), 750 மில்லி லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்திய உபகரணங்களுடன் சம்பவ இடத்தில் வைத்து இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கசிப்பு உற்பத்தி நிலையம் நீர்மூலமாக்கப்பட்டுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடி உத்தரவிற்கமைய முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் இ.சேந்தன் தலைமையில் சென்றபொலிஸ் அணியினரின் திடீர் சுற்றி வளைப்பின் போது கசிப்பு உற்பத்தி நிலையம் கைப்பற்றப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தின் போது கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களும் கைதான சந்தேக நபர்களும் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவ மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் முன்னேற்பாட்டு நடவடிக்கை

## வீட்டுத்தரிசிப்புகள் முன்னெடுப்பு

நாட்டில் பரவலாக பரவிவரும் டெங்கு நோயை கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டுப்படுத்தும் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினரும் கரைச்சி பிரதேச சுகாதார அதிகாரி பணிமனையினரும் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த விசேட வேலைத் திட்டத்தின் அங்கமாக நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் மாலை 6 மணி வரை 535 வீட்டு தரிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.



இதற்கமைய கிளிநொச்சி நகரம், ஆனந்தபுரம், கனகபுரம், திருநகர் வடக்கு, தெற்கு கனேசபுரம், பரவிப்பாஞ்சன் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய வகையில் கரைச்சி பிரதேச சபையினர், பொதுச் சுகாதார பரிசோதகர், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.





இதன்போது வீட்டின் உரிமையாளர்களுக்கு மழை காலங்களில் வீட்டின் வளாகத்தினுள் நீர்தேங்கி நிற்காத வகையில் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் வீடுகளில், சுற்றுப்புறங்களில் காணப்பட்ட சிரட்டைகள், பிளாஸ்ரிக் போத்தல்கள், இளநீர் கோம்பைகள், பிளாஸ்ரிக் போத்தல்கள் சேகரிக்கப்பட்டு பிரதேச சபையினரின் கழிவகற்றல் பிரிவினர் மூலம் அப்புறப்படுத்தப்பட்டன.

இதேவேளை 10 மாவட்டங்களில் டெங்கு அபாயம் அதிகரித்து உள்ளதாகத் தெரிவித்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் தீவிரபடுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

இதன் காரணமாக டெங்கு அபாயம் ஏற்பட்டுள்ள 10 மாவட்டங்களில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் 30 இல் உள்ள சுகாதார அதிகாரிகளின் விடுமுறை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

டெங்கு காய்ச்சல் அறிகுறிகள் முற்றாக இல்லாதொழிக்கப்படும் வரையிலும் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்றும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் சுற்றுச் சூழலை வைத்திருப்போருக்கு 25 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் அறவிடுவதற்கான வர்த்தமானி அறிவித்தலையும் விரைவில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-277)

# 32 வருடங்களுக்குப் பின் காய்க்கின்ற முரளிமரத்தை வேரோடு சாய்க்காதீர்கள்



நெடுங்கேணி - ஒலுமடு கிராமத்தில் முப்பத்திரண்டு ஆண்டுகளின் பின்னர் கணிசமான அளவில் முரளி மரங்கள் காய்த்துள்ளன.

இதனால் அந்த பகுதி மக்கள் சந்தோசத்தில் பழத்தினை பிடுங்கி விற்பனை செய்து வருகின்றனர்.

இப்படியான ஒரு சம்பவம் 1984 ஆம் ஆண்டிலும் நிகழ்ந்துள்ளது. சிலர் பழங்களை பிடுங்குவதற்காக கோடரிகளைப் பயன்படுத்தி மரங்களை அறுத்து விழுத்துவதனால் அவ்விடத்திற்கு பொலிஸாரும் வனவள பகுதியினரும் சென்றுள்ளனர்.

பழங்களை பிடுங்கி ஒரு கிலோகிராம் 160 ரூபா தொடக்கம் 200 ரூபா வரை விற்பனை செய்து வருகின்றார்கள். பல பிரதேசங்களில் இருந்தும் மக்கள் வருகை தந்து பழங்களை பிடுங்குவதை அவதானிக்க முடிகின்றது.

நெடுங்கேணியில் ஒலுமடு, ஊஞ்சல்கட்டி, மருதோடை, தண்ணிமுறிப்பு மற்றும் காஞ்சிரமோட்டை வயல் பிரதேசம் ஆகிய பகுதிகளிலும் வழமைக்கு மாறாக கணிசமான அளவில் குறித்த பழம் காய்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)




# யுகசக்தி பெண்கள் அமைப்பினருக்கும் சாந்தி எம்.பிக்கும் இடையில் சந்திப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கிவரும் யுகசக்தி பெண்கள் அமைப்பினருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜாவுக்கும் இடையில் நேற்று முன்தினம் மாங்குளத்திலுள்ள யுகசக்தி சம்மேளனத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

சுமார் 4 ஆயிரம் அங்கத்தவர்களை கொண்ட இவ்வமைப்பினுடைய செயற்பாடுகள், தேவைகள் தொடர்பாக கேட்டறிந்த பாராளுமன்ற உறுப்பினர் அவர்களது கோரிக்கைக்கமைவாக அடுத்த ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து தருவதாக உறுதியளித்தார்.

இதனைவிட எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் நடத்தப்படவுள்ள நிகழ்வு தொடர்பாக மகளிர் விவகார அமைச்சர் உள்ளிட்ட பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெண்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகள் சம்மேளனங்களை சந்திக்கவுள்ளனர்.

இதன்போது வடமாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக வெளிப்படுத்துமாறும் கோரிக்கை விடுத்தார். (2-281)

# சமூக பொலிஸ் நடமாடும் சேவையின் நிறைவு நிகழ்வு மாங்குளத்தில்

(பனிக்கன்குளம்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 150ஆவது ஆண்டு நிறைவையொட்டி பொலிஸ்மா அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க நாடளாவிய ரீதியில் நடைபெற்று வந்த சமூக பொலிஸ் நடமாடும் சேவையினையொட்டி மாங்குளம் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட சமூக பொலிஸ் நடமாடும் சேவையின் நிறைவு நிகழ்வு கடந்த 11 ஆம் திகதி மாலை 7 மணிக்கு மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் செயற்படும் சிவில் பாதுகாப்பு குழுவினருக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டதோடு இசை நிகழ்வும் இடம்பெற்றன. (2-281)



புலம்பெயர் உறவான அவுஸ்திரேலியா நாட்டை சேர்ந்த விஜய் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள பாரதி பெண்கள், சிறுவர் இல்லத்தல் உள்ள 108 சிறார்களுக்கு 65 ஆயிரம் ரூபா பெறுமதியான மழைக்கவசங்கள் வழங்கி வைத்துள்ளார்.

(படம்:மல்லாவி செய்தியாளர்)



சமூக பொலிஸ் நடமாடும் சேவை கடந்த 30.11.2016 தொடக்கம் 10.12.2016 வரை 42 நாட்கள் திருமுறிகண்டி கிராம சேவையாளர் பிரிவில் முறிகண்டி கோவில் காவல் சாவடியில் நடைபெற்றது. இதற்கமைய திருமுறிகண்டி, இந்துபுரம், பனிக்கன்குளம், மாங்குளம், வசந்த ஒலுமடுங்குளம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் பல்வேறு சேவைகளை முன்னெடுத்த மாங்குளம் பொலிஸ் நிலையத்தினர் அதனுடைய இறுதி நாள் நிகழ்வை நேற்று முன்தினம் மாலை 7 மணிக்கு மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் நடத்திய போது. (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# பளை பகுதியில் கடை உடைப்பு சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் 8 பேர் கைது

## புளியங்குளத்தில் திருட்டு வேலையில் ஈடுபட முயன்ற வேளை பளை பொலிஸாரால் அதிரடி



(முல்லாவி)

பளை நகரப் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை தொலைபேசி விற்பனை நிலையமொன்றை உடைத்துக் கொள்ளையிட்ட திருடர்கள் ஏ-9 வீதியிலுள்ள புளியங்குளத்தில் மற்றுமொரு இடத்தில் திருட்டு வேலையில் ஈடுபடுவதற்கு முயன்றவேளை எட்டுப்பேர்சந்தேகத்தின்பேரில் கைதாகியுள்ளதாக பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பளை நகரப் பகுதியில் நடைபெற்ற கடை உடைப்பு திருடர்களைபிடிப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சிமுல்லைத்தீவுஆகியமாவட்டங்களுக்கான பொலிஸ்மா அதிபர் வெலிகன்ன விடுத்த பணிப்புரைக்கு அமைய கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பாலித சிறிவர்த்தனவின் வழிகாட்டுதலில் கிளிநொச்சி மாவட்ட உதவிப் பொலிஸ் பரிசோதகர் றொசான்ராஜபக்ஷவின்நேரடி வழிகாட்டலின் கீழ் புலன் விசாரணைகளைத் தொடங்கிய பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எ.எஸ்.டபி ஏயூரஞ்சுபண்டாரவின் தலைமையில் விரைந்த பொலிஸ் அணியினரே கடை உடைப்புடன் தொடர்புடையதாக கூறப்படும் எட்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள்எட்டுப் பேரும் 18 வயதுக்கும் 22 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து களவாடப்பட்ட பொருட்கள், கடை உடைப்பிற்கு பயன்படுத்திய தடயப் பொருட்கள் என்பன மீடகப்பட்டுள்ளதுடன் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(2-15)

# சட்டவிரோதமாக பசுமாடுகளை கடத்திய நபர்கள் கைதாகினர்

## வாகனமும் கைப்பற்று

ஓமந்தை பகுதியூடாக அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாக பசு மாடுகளை கடத்தி சென்ற நபர்களை கைது செய்துள்ளதுடன் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனத்தையும் வவுனியா பிராந்தியத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையிலான பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம்நேற்று காலை 6 மணிக்கு ஓமந்தையில் நடைபெற்றது.

இந்நிலையில் இக் கடத்தல் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது. ஓமந்தை சேமமடு பகுதியில் இருந்து வவுனியா பகுதிக்கு சட்டவிரோதமான முறையில் கடத்தல் சம்பவம் ஒன்று இடம்பெறுவதாக வவுனியா போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு தகவலொன்று கிடைத்திருந்தது. இதனையடுத்து வவுனியா பிராந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இவ் விசாரணைகளின் அடிப்படையில் ஓமந்தை பகுதியில் வைத்து அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக மாடுகளை கடத்தி சென்ற லொறியொன்று கைப்பற்றப்பட்டிருந்தது. இதில் எருமை மாடுகள் ஐந்து கைப்பற்றப்பட்டிருந்ததுடன் அதனை கடத்தி சென்றிருந்த இருவரையும் வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். இதன்படி கைப்பற்றப்பட்ட மாடுகளையும் வாகனத்தையும் மற்றும் கைது செய்யப்பட்டவர்களையும் ஓமந்தை பொலிஸாரிடம் பாரப்படுத்தியுள்ளதாகவும் அவர்களூடாக வவுனியா நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்திருந்தனர். (2-4)

# முல்லைத்தீவில் நிறுவப்படவுள்ள மாவீரன் பண்டாரவன்னியன் சிலை

மாவீரன் பண்டாரவன்னியனின் உருவச்சிலை அமைக்கும் பணியானது நிறைவுறும் நிலையில் இருப்பதால் 2017 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் நிறைவுக்குள் சிலையை முல்லை. நகரில் நிறுவமுடியும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி நடைபெற்ற வடமாகாணசபையினது 25 ஆவது அமர்வில் முல்லைத்தீவில் பண்டாரவன்னியனின் சிலையொன்று நிறுவப்படவேண்டும் என்ற தீர்மானமானது வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனால் கொண்டுவரப்பட்டது.

ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இத்தீர்மானத்தின் அடிப்படையில் சிலை அமைப்பதற்கான செலவினை மாகாணத்தின் கலாசாரத் திணைக்களம் பொறுப்பெடுக்க வேணடுமென்ற கோரிக்கையும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது முல்லைத்தீவு சந்தியை நோக்கியதாக பிரதேச சபை வளாகத்தின் பக்கமாக மாவீரன் பண்டாரவன்னியன் சிலையை நிறுவுவதற்கான அனுமதியைப்பெற்று அவ்விடத்தில் சிலைக்கான தளம் அமைக்கும் வேலைகள் தொடங்கியுள்ளன.

நேற்று முன்தினம் தொடக்கம் செதுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் மாவீரன் பண்டாரவன்னியனின்சிலை செதுக்கப்பட்டு நிறைவுறும் நிலையில் உள்ளது. எதிர்வரும் 2017 ஆம் ஆண்டின் ஜனவரி மாதநிறைவுக்குள்முல்லை. நகரில் மாவீரன் பண்டாரவன்னியனின் சிலை நிறுவப்படும் என அவர் தெரிவித்தார். (2-281)

# தம்பனை காட்டில் கசிப்பு உற்பத்தி நிலையம்; நெளுக்குளம் பொலிஸார் முற்றுகை; ஒருவர் கைது



வவுனியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெளுக்குளம் காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று கைப்பற்றப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் சம்பவ இடத்தில் வைத்து ஒருவர் கைது செய்யப்படுள்ளதாக நெளுக்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியாமாவட்டபொலிஸ் அத்தியட்சகர் காரியாலயப் பிரிவிற்குட்பட்ட நெளுக்குளம்பொலிஸ்பிரிவில் உள்ள தம்பனைக் காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டது.

நெளுக்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி எ.எஸ். அத்தநாயக்க தலைமையிலான பொலிஸ் அணியினரின் சுற்றிவளைப்பின்போது 45 லீற்றர் கசிப்பு கோடா, 5 லீற்றர் கசிப்பு என்பன கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்திய உபகரணங்களுடன் சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர் ஒருவரும் கைதாகினார்.

இச்சம்பவத்தின் போது கைப்பற்றப்பட்ட தடயப் பொருட்கள் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் இன்று புதன்கிழமை வவுனியா மாவட்ட நீதிமன்றில் தடயப் பொருட்கள் பாரப்படுத்தப்படவுள்ளதுடன் சந்தேக நபர் ஆஜர் படுத்தப்படவுள்ளதாகவும் நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-15)

## தமக்கென வழங்கப்பட்ட பழக்கடைகளில்

# வியாபார நடவடிக்கையில் ஈடுபடாமல் கொள்வனவு பகுதியில் வியாபாரம்

## பாதிக்கப்பட்டவர்கள் விசனம்

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கிளிநொச்சி பொதுச்சந்தையில் வாழைக்குலை கொள்வனவு செய்யும் பகுதியில் நாளாந்தம் கொள்வனவுகளை செய்து தங்களுக்கென வழங்கப்பட்ட வியாபார நிலையங்களில் வியாபாரிகள் வியாபாரம் செய்து வரும் நிலையில் சில பழக்கடை வியாபாரிகள் தங்களுக்கென வழங்கப்பட்ட வியாபார நிலையங்களில் வைத்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடாமல் கொள்வனவு செய்யப்படுகின்ற இடத்தில் வைத்தே மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்வதாக பாதிக்கப்பட்ட வியாபாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

சில பழக்கடை வியாபாரிகள் தமக்கென சந்தையினுள் ஒதுக்கப்பட்ட பழக்கடைகளில் வியாபாரத்தில் ஈடுபடாமல் தாம் கொள்வனவு செய்யும் இடத்தில் வைத்து வெளி வர்த்தகர்கள், கோவில்தேவைக்கு வருபவர்கள், திருமண வீட்டுத் தேவைகளுக்கென வருபவர்கள் மற்றும் ஏனைய தேவைகளுக்கு வருபவர்கள், அவ்விடத்திலுள்ள சில்லறை வாழைக்குலை வியாபாரிகளிடம் கொள்வனவு செய்வதால் தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக பழக் கடை வியாபாரிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இவ்வாறான வியாபார நடவடிக்கை நடைபெறுவதால் பழக்கடைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் வியாபாரத்தில் ஈடுபடமுடியாத நிலை




ஏனைய வியாபாரிகளுக்கும் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பலமுறை வாழைக்குலை குத்தகைதாரரிடம் வியாபாரிகளால் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை என்று வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆகையினால் இதனை கரைச்சி பிரதேச சபை செயலாளர், கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தக சங்க தலைவர்,கிளிநொச்சி பொதுச்சந்தை காப்பாளர் நேரில்சென்று இவ் விடயத்தை பார்வையிட்டுவியாபாரிகளின் வியாபாரநடவடிக்கையை சீர்செய்து தருமாறு பாதிக்கப்பட்ட வியா பாரிகள் கோரிக்கை ஒன்றை முன் வைக்கின்றனர். (2-271)

# வீதியில் நிறுத்தப்பட்டிருந்த ஆட்டோ திடீரென தீப்பற்றியது

## வவுனியாவில் சம்பவம்



(மல்லாவி)

வவுனியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹொரவப்பொத்தானை சந்திக்கருகில் வீதியில் ஆட்டோவொன்றைநிறுத்திவிட்டு வியாபார நிலையமொன்றுக்குள் அதன் சாரதி சென்றிருந்த நிலையில் ஆட்டோ திடீரென தீப்பற்றி எரிந்த சம்பவமொன்று நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.


இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வீதியோரத்தில் ஆட்டோவை நிறுத்தி விட்டு அதன் சாரதி வியாபார நிலையத்துக்குச் சென்ற நிலையில் திடீரென ஆட்டோ தீப்பற்றி எரிந்துள்ளது.

அவ்வழியாகசென்றுகொண்டிருந்த பொதுமக்கள் மற்றும் வீதி போக்குவரத்து பொலிஸார், அதன் சாரதி எனப் பலரும் தீயைக் கட்டுப்படுத்த எடுத்த முயற்சி பயனளிக்காமையால் ஆட்டோ முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-15)

# மதுபான பரிமாற்றத்தைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளில் அரசாங்கம்



## பட்ஜெட் - 2017

நல்லாட்சி அரசாங்கத்தின் இரணடாவது வரவு - செலவுத் திட்டம் அனைவருக்கும் நன்மைதரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி என்ற தொனிப்பொருளில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் 10.11.2016 அன்று நாடாளுமன்றில் முன் வைக்கப்பட்டது. நிதி அமைச்சரின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது...

(தொடர்ச்சி)

### தொலைத் தொடர்பாடல் அறவீடு

463.ஏனைய தொலைத்தொடர்பு சேவைகளோடு இணைந்த வகையில் இணைய சேவைகள் மீதான தொலைத்தொடர்பு அறவீடானது 25 சதவீதத்தினால் அதிகரிக்கப்படுகிறது.

464.நாட்டினை டிஜிற்றல்மயப்படுத்தல் செயன்முறைக்கு ஒத்துழைப்பு வழங்கும்வகையில்அனைத்து செல்லிடத் தொலைபேசி இயக்குநர்களும் ஆகக் குறைந்தது 3G சேவையினை வழங்கும் வகையில் அவர்களது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஆறு மாத காலஅவகாசம் வழங்கப்படும்.

இக்கால எல்லையினுள் இதனை செயற்படுத்துவதற்கு தவறும் தொலைபேசி இயக்குநர்கள் மீது மாவட்டத்திற்கு அமைய ரூபா. 100 மில்லியன் தண்டப்பணம் அறவிடப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 திகதி முதல் அனைத்து நகர்புற பிரதேசங்களும் 4G சேவை வசதிகளுக்கு நிலை மாற்றப்படுதல் வேண்டும்.

465.மாதமொன்றுக்கு 150,000 இற்கும் அதிகமான சிம் அட்டைகள் விநியோகிக்கப்படுவதாக அவதானிக்கப்பட்டது. மோசடி மற்றும் குற்றச் செயல்களுக்காக தற்காலிக செல்லிடத் தொலைபேசி இணைப்புக்களை கட்டுப்படுத்தும், கட்டுப்படுத்துவதற்காக சிம் அட்டை செயலாக்க அறவீட்டினை ரூபா. 200 ஆக அறவிடுவதற்கும் முன்மொழியப்படுகிறது.

466.வருடாந்த உரிமக் கட்டணமானது குறிப்பிடத்தக்க காலத்தில் திருத்தியமைக்கப்படவில்லை. ஆதலால், 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் பயன்வலுப்பெறும்வகையில் அலைகற்றை உரிமக் கட்டணத்தினை 25 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கும் முன்மொழிகின்றேன்.

467.வெளிநுழைவாயில் இயக்குநர்களினால் உள்நாட்டு இயக்குநர்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக பெறுமதிசேர் வரி மற்றும் தே.க.வ. என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படுகின்றது.

### மதுபானம் மீதான வரிகள்

468. சபாநாயகர் அவர்களே, நாட்டினுள் சட்டவிரோத மற்றும் சட்ட ரீதியற்ற மதுசார பரிமாற்றத்தினை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில முன்மொழியப்பட்டவாறு, நாட்டினுள் சட்டரீதியற்ற மதுபாவனையினை கட்டுப்படுத்துவதற்காகவும் வரி இழப்பினை கட்டுப்படுத்தும் நோக்கிலும் பாதுகாப்பான ஸ்டிக்கர்கள் முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான கேள்வி மனுக்கோரல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பான ஸ்டிக்கர் முறையினை 2017 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படுவதற்கும் உத்தேசிக்கப்படுகிறது.

469.எதனோல்மதுசார உற்பத்தியின் போது ஆவியாதல் காரணமாக ஏற்படுகின்ற இழப்பு தொடர்பில் வழங்கப்பட்டிருந்த 1.5 சதவீத கொடுப்பனவினை சதவீதம் வரை குறைப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். தொழில்நுட்ப முன்னேற்றத்துடன், களஞ்சியப்படுத்தலில் மற்றும் போக்குவரத்து என்பவற்றின் போது ஆவியாதல் செயற்பாட்டினால் ஏற்படுகின்ற இழப்புக்கள் குறைந்திருந்தும் இச்சதவீதமானது ஏறத்தாழ 10 வருடங்களில் திருத்தியமைக்கப்படவில்லை.

470.எதனோல் மதுசார உற்பத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற மூலப்பொருட்களின் மீது உற்பத்தி வரியினை அமுல்படுத்துவதற்கு முன்மொழிகின்றேன்.

இது உண்மையாக உற்பத்தி செய்யப்பட்ட எதனோல் மதுசாரத்தின் அளவினை நிர்ணயிப்பதற்கு இது உதவியாக அமையும்.

471.உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற மதுசாரத்திற்கான சிறந்த விலை மட்டத்தினை வழங்கும்வகையில், இறக்குமதி எதனோல், மதுசாரம் மீது விதிக்கப்பட்டிருந்த வரி அதிகரிக்கப்படுகின்றது.

உள் நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும், இறக்குமதி செய்படுகின்ற நகர்த்த முடியாத மதுசாரங்களுக்காகவும் லீற்றர் ஒன்றுக்கு ரூபா. 25 என்ற உற்பத்தி வரியினை அறிமுகப்படுத்துவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

472.உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) தீர்வையானது 325 மில்லிலீற்றருக்கு மேற்படாத பியர் கொள்கலனொன்றுக்கு 10 ரூபா வீதமும் 365 மில்லிலீற்றருக்கு மேற்பட்ட பியர் கொள்கலனொன்றுக்கு ரூபா 15 வீதமும் என பியர் இறக்குமதி மீது விதிக்கப்படுதல் வேண்டும்.

### காபன் வரி

473. சபாநாயகர் அவர்களே, காபனை உள்ளடக்கிய எரிபொருள் மூலம் இயங்குகின்ற அனைத்து வாகனங்களுக்காகவும் காபன் வரியினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இவ் வரியானது வாகனப் புகைப பரிசோதனைக் கட்டணம் காபன் வரியில் உள்ளடக்கப்படுகிறது. மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் காபன் வரி திரட்டப்படுகின்றது. வாகனத்தின் புகைப் பரிசோதனைக் கட்டணமானது திணைக்களத்தின் சேவை வழங்குநருக்கு மீண்டும் செலுத்தப்படும். வாகன உரிமையாளர்கள் வாகன புகைப் பரிசோதனைக் கட்டணம் என மேலதிகக் கட்டணம் ஒன்றினை செலுத்த அவசியப்பாது.

### மோட்டார் வாகனங்கள்

474. சபாநாயகர் அவர்களே, கடந்த வரவு - செலவுத்திட்டத்தில் மோட்டார் வாகனங்களுக்காக அதன் உந்துபொறி (என்ஜின்) கொள்ளளவினை அடிப்படையாகக் கொண்டு அலகு முறைமை ஒன்றின் கீழ் உற்பத்தி வரியினை கணிப்பீடு செய்வதற்கான முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

இம்முறைமையினை மோட்டார் சைக்கிள்கள் மீது விரிவுபடுத்துவதற்கும் நான் முன்மொழிகின்றேன். சபாநாயகர் அவர்களே, நட்புச் சூழல் சக்தி வளப் பாவனையினை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணித்துள்ளது. எரிசக்தி கொள்ளளவு 100 இற்கு மேற்படாத மின்சாரக்கார்களுக்கான உற்பத்தி வரியினைக் குறைப்பதற்கும் நான் முன்மொழிகிறேன்.

475.உள்நாட்டு கைத்தொழில்களை ஊக்குவிக்கும் வகையில், லொறி மற்றும் 5 தொன்களுக்கு மேற்பட்ட கொள்ளளவினைக் கொண்ட உறை குளிரூட்டி பொருத்தப்பட்ட ட்ரக் வண்டிகள் இறக்குமதியின் போது விதிக்கப்பட்டிருந்த வாகனத்தின் வயது எல்லையினை 10 வருடங்கள் வரை நீடிப்புச் செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

மேலும், வரிக் கட்டமைப்பில் காணப்பட்டஏற்றத் தாழ்வுகளை சீர் செய்வதற்காக திருத்தங்கள் பல மேற்கொள்ளப்படவுள்ளன. இத்திருத்தங்கள் பயன்வலுப் பெறும் வகையில் அமுல்படுத்தப்படும்.

476. சபாநாயகர் அவர்களே, மோட்டார் வாகனங்கள் தொடர்பில் பயணிகள் பாதுகாப்பு மிகவும் முக்கியமானதாகும். பாதுகாப்பு முறைமையினை ஊக்குவிப்பதன் ஆரம்ப நடவடிக்கை என்ற வகையில், மோட்டார் வாகனங்களுக்காக SRS, காற்றுப் பைகள், ABS மற்றும் மூன்றுபுள்ளி ஆசனப் பட்டிகள் கட்டாயமாக்கப்படுகின்றது.

477.வாகன உரித்துக் கட்டணமானது தற்போது நாணயக் கடிதத்தினைத் திறக்கும் போது வங்கியில் செலுத்தப்படுகின்றது. இந்நடைமுறையினை மாற்றியமைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இக் கட்டணமானது இலங்கை சுங்கத்திலிருந்து வாகனத்தினை விடுவிக்கும் போது செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

கொடுப்பனவினை அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட வாகனம் தொடர்பான விபரச் சான்றிதழ் ஒன்று விநியோகிக்கப்படுகின்றது.

478.நாட்டினுள் 6 மில்லியனுக்கும் அதிகமான பழைய வாகனங்கள் காணப்படுவதோடு, இதன் மூலம் குறிப்பிடத்தக்க சூழல் சார்ந்த பிரச்சினைகள் எழுந்துள்ளன. ஆதலால், 5 வருடங்களுக்கு மேற்பட்ட வாகனங்களை ஏற்றுமதி செய்வது தொடர்பில் வரிச்சலுகையினை வழங்குவதற்கும் நான் முன் மொழிகின்றேன்.

சபாநாயகர் அவர்களே, இதன் மூலம் ஐக்கிய அமெரிக்க டொலர் 200,000 இற்கு மேற்படாத வகையில், ஆகக் குறைந்தது 20 வாகனங்களையாவது ஏற்றுமதி செய்யப்படுமெனில், ஐக்கிய அமெரிக்க டொலர் 50,000 இற்கு மேற்படாத CIF காப்புறுதிப் பெறுமதியுடன் வாகனமொன்றினை இறக்கு மதி செய்யும் போது செலுத்தப்பட வேண்டியுள்ள உற்பத்தி வரியின் 50 சதவீதத்தில் வரிச்சலுகை வழங்கப்படுகிறது.

### விமானமேறல் வரி

479.பயணிகளிடமிருந்து அறவிடப்படுகின்ற கப்பலேறல்/ விமான மேறல் கட்டணத்தினை ஐக்கிய அமெரிக்க டொலர் 50வரை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகிறேன். அதிலிருந்து ஐக்கிய அமெரிக்க டொலர் 35 திரட்டு நிதிக்கு அனுப்பப்படும்.

### மூலதன வரி

480.நகராச் சொத்துக்களை நீக்கும் போது கிடைக்கப் பெறுகின்ற இலாபத்திற்காக 10 சதவீத மூலதனவரி விதிக்கப்படுகின்றது.

### தீர்வை வரி

481.பால்மா இறக்குமதியின் போது அறவிடப்படுகின்ற் தீர்வை வரியானது கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 100 வரை குறைக்கப்படுவதோடு, குடிபான மதுசார இறக்குமதியின் போது அறவிடப்படுகின்ற தீர்வை வரியானது லீற்றர் ஒன்றுக்கு/ ரூபா 500 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 800 வரை அதிகரிக்கப்படுகின்றது.

### செஸ் வரி

482. சபாநாயகர் அவர்களே, வெளிநாட்டு வர்த்தகம் மீது விதிக்கப்பட்டுள்ள எமது வரிக்கட்டமைப்பானது து.வி.அ. அறவீடு செஸ் மற்றும் சுங்கத் தீர்வை போன்ற பல்வேறு வகையான எல்லை வரி முறைமை என்பவற்றினையும் உள்ளடக்கிக் காணப்படுகின்றது. இந்த எல்லை வரிமுறைமை கட்டமைப்பு சர்வதேச வர்த்தகத்தின் அடிப்படைகளுக்கு முரணானவைகளாகும்.

ஆதலால் சர்வதேச போட்டித் தன்மையினை எதிர்கொள்ளும் வகையில், வர்த்தக வரிகள் இலகுபடுத்தப்படுதல் வேண்டும். அதற்காக, இறக்குமதி செஸ் அறவீடுகளை படிப்படியாக நீக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். அதன முதற் கட்டமாக 100 பொருட்களின் செஸ்வரியினை நீக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

483.உள்நாட்டில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் ஏற்றுமதியினை ஊக்குவிக்கும் வகையில் இறப்பர் ஏற்றுமதியின் போது அறவிடப்படுகின்ற செஸ் வரியினை கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 15 வரை அதிகரிக்கப்படுகின்றது.

(தொடரும்)

# பாமர அரசியலில் மூழ்கி காணாமல் போகக்கூடாது

## அமைச்சர் மனோ தெரிவிப்பு

மலையக மக்களுக்காக பேசிய அநுரகுமாரவை பாராட்டி வரவேற்போம். அதே வேளை வரலாற்றையும் மறக்காதிருப்போம் என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது குறித்து அமைச்சர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, யாழ்.பொது நூலக எரிப்பு தொடர்பில் நாடாளுமன்றத்தில் மன்னிப்பு கோரியதைப்போல், மலையக மக்களிடமும் மன்னிப்பு கோர வேண்டுமென ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கூறியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்ட குடியுரிமை பறிப்பு, வாக்குரிமை பறிப்பு என்பவை மலையக தமிழரின் இருப்பையே இந்நாட்டில் அசைத்து விட்டன என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனவே ஐ.தே.க. மலையக மக்களிடமும் மன்னிப்பு கோர வேண்டுமென அநுர கூறியிருப்பது நியாயமானதுதான்.

இந்த வரலாற்று தவறுகளுக்காகவும் இன்னும் பல இனவாத நடவடிக்கைகளுக்காகவும் இன்னமும் பல வேறு சிங்கள, தமிழ், முஸ்லிம் கட்சிகள் மக்களிடம் மன்னிப்புக் கோர வேண் டிய சூழல் மெதுவாக உரு வாகி வருகிறது.

மலையக மக்கள் குறிப்பாக தோட்டத்தொழிலாளர் இந்நாட்டில் "தமிழர்" என்ற இன அடையாளம் காரணமாகவே பிரதானமாக ஒடுக்கப்படுகிறார்கள்.

இந்நாட்டில் ஈழத்தமிழர், மலையகத்தமிழர் மற்றும் முஸ்லிம் மக்கள் என ஒட்டு மொத்த தமிழ் பேசும் மக்களே ஒடுக்கப்படுவதற்கான பேரினவாதச் சூழலை ஏற்படுத்துவதில் எல்லா பிரதான பெரும்பான்மை இனக் கட்சிகளும் வரலாறு முழுக்க பங்களித்துள்ளன.

இதில் ஐ.தே.க, ஸ்ரீ.சு.க ஆகியவற்றுடன் ஜே.வி.பிக்கும் பாரிய பங்கு இருக்கின்றது. எனவே தமிழரிடம் "மன்னிப்பு" கேட்க வேண்டுமென்றால் இந்த மூன்று கட்சிகளுமே கேட்க வேண்டும்.

குறிப்பாக "தொழிலாளர் ஆட்சியை அமைப்போம்" என்று அறைகூவல் விடுத்த, "புரட்சிகர" ஜே.விபியின் உருவாக்கத்தின் போது நடந்து என்ன? உழைக்கும் மலையக பாட்டாளி மக்களை, "இந்திய ஏகாதிபத்திய விஸ்தரிப்புவாத முகவர்கள்" என அடையாளமிட்டு, கட்சி அங்கத்தவர்களுக்கு அரசியல் வகுப்பை நடத்தி சிங்கள இளைஞர் மத்தியில் மலையக மக்களுக்கு எதிராக இனவாத நஞ்சு தூவப்பட்டு, இனவாத அடிப்படை ஏற்படக் காரணமாக அமைந்த கட்சி தான், ஜே.வி.பி. இது ஒன்றும் பரம இரகசியம் அல்ல.

ரோஹன விஜேவீரவின் இந்த வழிகாட்டலில் உருவாகிய, அன்றைய ஜே.வி.பி "இளைஞர்கள்" தான் இன்று, நண்பர் விமல் வீரவன்ச உட்பட, பல்வேறு கட்சிகளில் இருந்து கொண்டு தமிழ்பேசும மக்களுக்கு எதிரான நிலைப்பாடுகளை முன்வைக்கின்றார்கள். ஹெல உறுமய செயலாளர் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் அத்தகைய ஒரு முன்னாள் ஜே.வி.பி. யாளர்தான்.

இவர்கள் இன்று இலங்கை அரசியல் பரப்பில் ஆற்றிவரும் அரசியல் பங்களிப்புகளை நாம் சரியாக அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

எனவே இன்றைய ஜே.வி.பி. தலைவரின் நிலைப்பாடுகளை வாழ்த்தி வரவேற்கும் அதேவேளை வரலாற்றையும் நாம் மறந்து விடக் கூடாது.

வரலாற்றை ஆய்ந்தறிந்து பாடங்களை கற்க மறந்த முட்டாள்களாகி விடக் கூடாது. எம்மினத்தை வாழ்க்கை முழுக்க அடித்து படுகாயப்படுத்தி, குற்றம் புரிந்து விட்டு, கடைசியில் அதே குற்றவாளி எம்மை பார்த்து சும்மா சுகம் விசாரிப்பதை கண்டு, உணர்ச்சி வசப்பட்டு, புளகாகிதமடைந்து, மயிர்க்கூச் செறிந்து, தடுமாறும் "பாமர" அரசியலில் நாம் மறந்தும் மூழ்கி காணாமல் போய்விட முடியாது.

நாங்கள் சிரித்து பேசுகிறோம் என்பதற்காக அவர்களும் அவர்களது அடிப்படை விடயங்களில் நிலைதடுமாறுவது இல்லையே. எனவே நாங்கள மட்டும் அவசரப்பட தேவையில்லை.

ஆகவே தோழர் அநுர குமாரவை இன்று பாராட்டி இனிதே வரவேற்போம். வரலாற்றையும் மறக்காதிருப்போம் என அமைச்சர் மனோ கணேசன்தெரிவித்தார்.(இ-3-10)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பெரிய அம்மான்பச்சரிசி

**Botonical Name- Euphorbia hirta**
**Family- Euphorbiaceae**
**Eng-Australian Sthima weed**
**Sing-Budada kiriya**

வேரினின்றும் பல குச்சிகளுடன் செங்குத்தாகவும் சிறிது பக்கம் நோக்கிச் சாய்ந்தும் குத்துச்செடி போன்று சுமார் ஒரு அடி தூரம் வரைக்கும் வளரும் காம்பு சுமார் 3 மில்லி மீற்றர் பருமனுள்ளது. 4 முதல் 6 சென்ரிமீற்றர் நீளமும் 1.5 செ.மீ முதல் 2.5 செ.மீ அகலமும் உள்ள மெல்லிய இலைகள் காம்பின் நுனியில் நெருக்கமாகவும் அடியில் கலக்கவும் எதிரெதிராகவும் இரண்டாகவும் அமைந்துள்ளது. மிக மெல்லிய சுனைகள் காம்பில் அதிகம். இலையில் குறைவு. இலை நுனி குவிந்து சூலம் போன்றிருக்கும். இலை விளிம்புகள் மெல்லிய ரம்பவடிவானவை வெண்ணிறப் பூக்கள் ஒவ்வொரு கணுவிலும் இலைகளுக்கிடையில் மிளகு பருமனில் காணலாம்.

இது எப்போதும் பூத்துக் கொண்டிருக்கும். இது ஓராண்டுப் பயிராகும். இப் பூண்டின் எப்பகுதியை கிள்ளினாலும் பால் வரும். அதாவது கோடையில் இது காய்ந்துவிடும். மழை சிறிது தொடர்ந்து பெய்ததும் வேரினின்று துளிர் விட்டு வளரும் இயல்புடையது.

எல்லா வகை மண்களிலும் வளரக்கூடியது. 100 கிராம் இலைகளிலுள்ள சத்துக்கள்

புரதம் 4.7 கிராம்
தாது உப்பு -3.2 கிராம்
இரும்பு-21.2 மில்லி கிராம்
கல்சியம்-546மில்லிகிராம்
பொஸ்பரஸ்-106 மி.கிராம்.

இது ஒரு கீரையுமாகும். இரும்புச்சத்து கல்சியம் பொஸ்பரஸ் இருப்பதால் இரத்தம் விருத்தி ஆகும். மூட்டுவலி போன்றவற்றுக்கும் சிறந்ததாகும்.

20 கிராம் இலையை 100 கிராம் முளைக்கீரை இனக் கீரைகளோடு அல்லது கலவைக்கீரையுடன் சேர்த்து சமைக்கலாம். 30 கிராம் இலையை குடிநீர் காய்ச்சிக் குடிக்கலாம். இலைகளை நிழலில் உலர்த்தி பொடித்து பொடி 1 தேக்கரண்டி அளவும் உபயோகிக்கலாம். இதனால் உடல் குளிர்ச்சியடையும் மலத்தை இளக்கவெளியேற்றும். மூல நோய்க்கும் சிறந்ததாகும். சிறுநீர் எரிச்சல் ஆகியன தீரும். இரத்தம் விருத்தியடையும். கர்ப்பப்பை சம்பந்தமான நோய்களுக்கும் சிறந்தாகும்.

15 கிராம் இலையோடு 3 கிராம் கையாந்தகரை இலையை சேர்த்து முன் போல சாறு பிழிந்து உபயோகிக்கலாம். அல்லது மென்று உண்ணலாம். 20 கிராம் இலையோடு 10 கிராம் தேங்காய்த்துருவல் தக்காளி, தயிர், நெல்லிக்கனி சேர்த்து சட்னி, துவையல் செய்யலாம்.

இலைகளை நிழலில் உலர்த்தி பொடித்த பொடி 1 தேக்கரண்டி அளவும் உபயோகிக்கலாம். இதனால் உடல் குளிர்ச்சியடையும்.

அம்மான் பச்சரிசி இலைகளை தேவையான அளவு சேகரித்து கழுவி நிழலில் உலர்த்தி சருகுபோல காய வைத்து உரலில் இடித்து துணியில் அரித்து ஒரு வாயகன்ற சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு 4 கிராம் காலை மாலை கற்கண்டுடன் சேர்த்து பசும்பாலுடன் அருந்தவும்.

இவ்வாறு 40 நாட்கள் தொடர்ந்து சாப்பிடதாது விருத்தியடையும். உடலுக்கு பலத்தையும் உரத்தையும் கொடுக்கும்.

அம்மான் பச்சரிசி கீரையின் பூக்களை 40 கிராம் நன்றாக அரைத்து பாலில் கலந்து 5 நாட்களுக்கு குடித்தால் தாய்ப்பால் அதிகமாக சுரக்கும். அம்மான்பச்சரிசிகீரையை ஒடித்தால் பால்வரும். அந்தப் பாலை கால் ஆணியில் தடவினால் விரைவில் குணமாகும்.

அம்மான் பச்சரிசி கீரைப் பொடி 1 கிராம், கடுக்காய் பொடி 1கிராம் வைத்து காலை மாலை சாப்பிட்டால் உடல் வலிமை பெறும்.

அம்மான் பச்சரிசி ,கீழா நெல்லி, வெந்தயம் மூன்றையும் சம அளவு எடுத்து அரைத்து தினமும் காலை மாலை இருவேளையும்15கிராம் அளவுக்கு சாப்பிட்டால் வெண் குஷ்டம் குணமாகும். காலில் ஆணி தோன்றினால் அம்மான் பச்சரிசி பாலை கனமாக தடவி வர காலாணி மறையும்.

அம்மான் பச்சரிசிக் கீரையுடன் மஞ்சள், ஓமம் இரண்டையும் சேர்த்து அரைத்து சாப்பிட்டால் குடல்புண் குணமாகும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

வயது வந்ததும் பூப்பெய்யாத பெண்களுக்கு அம்மான் பச்சரிசி இலையை ஆய்ந்து ஒரு கைப்பிடியளவு எடுத்து ஒரு சட்டியில் போட்டு 10 கிராம் பெருங் காயம், 5 கிராம் எள்ளு, பனை வெல்லம் 10 கிராம் சேர்த்து எல்லாவற்றையும் ஒன்றாக கொதிக்க வைத்து தினசரி காலை மாலை 60 மில்லி 7 நாட்களுக்கு கொடுத்தால் பெண்கள் ருதுவாகி விடு வார்கள்.

அம்மான் பச்சரிசி தேவையானளவு சேகரித்து மை போல அரைத்து எடுத்து பாக்களவு (5 கிராம்) ஒரு டம்ளர் (200 மில்லி) மோரில் கலக்கி காலையில் மட்டும் கொடுக்க பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் குணமாகும்.



# வர்தா புயலால் சென்னையில் பேரழிவு 10 பேர் உயிரிழப்பு! ஆயிரம் கோடி சேதம்















வங்கக் கடலில் உருவான வர்தா புயல் நேற்று முன்தினம் சென்னை உள்ளிட்ட மூன்று மாவட்டங்களில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது. சென்னை அருகே நேற்று முன்தினம் பிற்பகல் கரையைக் கடந்த வர்தா புயலின் போது, 120 கி.மீ இற்கும் அதிக வேகத்துடன் சூறைக் காற்று வீசியது. இதனால் ஆயிரக்கணக்கான மரங்கள் வேருடன் சாய்ந்தன. ஆயிரக் கணக்கான மின்சாரக் கம்பங்கள் பெயர்ந்து விழுந்தன.

வீடுகளின் கூரைகள், வர்த்தக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள், அலங்கார தட்டிகள் என்பன தூக்கி வீசப்பட்டன. கடும் மழையும் பெய்தது. வீதியில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள், அடுக்கி வைக்கப்பட்டிருந்த கொள்கலன்கள் கூட சூறைக்காற்றினால் தூக்கி வீசப்பட்டன. இதனால் சென்னை நகரம் மற்றும் திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்கள் கடுமையான பாதிப்புகளைச் சந்தித்தன. இந்தப் புயலினால் இதுவரையில் 10 பேர் பலியாகியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எங்கு பார்த்தாலும், முறிந்து விழுந்த மரங்களும், சிதைவுகளுமாக பேரழிவுக் காட்சியாக சென்னை மற்றும் அதன் சுற்றுப் புறங்கள் காட்சியளிக்கின்றன. வர்தா புயலினால் 1000 கோடி ரூபாவுக்கு மேல் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை பாதிகப்பட்ட இடங்களை சீரமைக்கும் பணிகள் துரித வேகத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் முழுவதும் மூடப்பட்டிருந்த சென்னை விமான நிலையம் நேற்றுக் காலை இயங்க ஆரம்பித்துள்ளது. புகையிரத பேருந்து சேவைகளும் மீளத் தொடங்கியுள்ளன. (இ-3)

## ஒபாமா போன்று மாற வேண்டும்



சீனாவை சேர்ந்த நடிகர் ஒருவர் தான் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா போன்று தோற்றம் அளிக்க வேண்டும் என்பதற்காக பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டுள்ளார்.

சீனாவின் Sichuan மாகாணத்தை சேர்ந்த Xiao Jiguo (30) ஆரம்பத்தில், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்று நகைச்சுவை நிகழ்ச்சிகளை நடத்தி வந்துள்ளார்.

அதன் பின்னர், தான் அமெரக்க ஜனாதிபதி போன்று மிமிக்கிரி செய்ய வேண்டும் என ஆர்வம் கொண்ட அவர, ஒபாமாவின் நடை, உடை, பாவனைகள் குறித்து ஒரு நாளைக்கு பல மணி நேரம் பயிற்சி எடுத்துள்ளார்.

இதன் காரணத்தினாலேயே இவருக்கு தொலைக் காட்சிகளில் அதிக வாய்ப்புகள் குவிந்தன.

ஒபாமாவின் செயல்முறைகளை பிரதிபலிப்பதை விட அவரை போன்று மாற வேண்டும் என ஆசைப்பட்ட இவர், அதற்காக பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டு ஒபாமா போன்று மாறியுள்ளார்.

இவ்வாறு தோற்றம் அளிக்கும் காரணத்தால், தற்போது பல்வேறு திரைப்படங்களில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். (இ-3)

## தமிழகத்தின் சேதங்களை அப்புறப்படுத்த விஷேட கப்பல்கள் தயார் நிலையில் உள்ளன

தமிழகத்தை தாக்கிய வர்தா புயலினால் ஏற்பட்ட சேதங்களை அப்புறப்படுத்துவதற்காக விஷேட குழு ஒன்று சென்னை வந்திறங்கியுள்ளது.

புயலால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ள மீட்பு பணி மற்றும் நிவாரண உதவிக்கு ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் இருந்து நேற்று முன்தினம் அதிகாலை இந்திய கடற்படையின் சிவாலிக், காமாட் ஆகிய 2 கப்பலகள் சென்னைக்கு வந்துள்ளன.

கடற்படை கப்பல்களில் மீட்பு பணிகளுக்காக படகுகள், சிறிய ரக கப்பல்கள், ஹெலிகொப்டர்கள், உணவு, கூடாரங்கள் அமைக்க தேவையான உபகரணங்கள், துணிகள், மருந்துகள், போர்வைகள் உள்ளிட்ட நிவாரண பொருட்கள் போதுமான வகையில் கொண்டு வரப்பட்டுள்ளன.

கடற்படை கப்பல்களில் நீச்சல் வீரர்கள் அடங்கிய 10 குழுவினர் வந்திறங்கியுள்ளனர். மேலும் கடற்படையை தவிர இந்திய இராணுவப்படையின 6 குழுக்களும் தயார் நிலையில் காணப்படுகின்றன.

மேலும், இது தவிர விஷேட கபபல்களும், விஷேட ஹெலிகொப்டர்களும் தயார் நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-3)

## கல்பாக்கத்தில் மின் உற்பத்தி நிறுத்தம்

சென்னை கல்பாக்கத்தில் உள்ள 2 அலகுகளிலும் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மின்னுற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளமையினால் 440 மெகாவோட் மின்னுற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், வர்தா புயலின் காரணமாக சில இடங்களில் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை திருத்தணி மற்றும் பள்ளிப்பட்டி பகுதிகளில் புயலினால் சேதமடைந்த மின்கம்பம் சரிசெய்யப்பட்டு மின்விநியோகம் தொடங்கியுள்ளது.

தொடர்ந்தும் மற்றைய இடங்களில் புனரமைப்பு பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. (இ-3)

# அமெரிக்காவில் பங்களாதேஷ் இந்துக்கள் ஆர்ப்பாட்டம்

## 200 முறை தாக்குதல் நடத்தப்பட்டதாக குற்றச்சாட்டு



(வோஷிங்டன்)

பங்களாதேஷத்தில் சிறுபான்மையாக வாழ்ந்து வரும் இந்து மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் ஒடுக்குமுறைக்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா குரல் கொடுக்க வேண்டும் என பலர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பங் பங்களாதேஷ் நாட்டில் கடந்த 1988 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட அரசியலமைப்பு சட்டத்தின் மூலம் இஸ்லாம் மார்க்கம் பங்களாதேஷத்தின் தேசிய மதமாக அறிவிக்கப்பட்டது.

இந்த முடிவை எதிர்த்து அங்குள்ள பல சிறுபான்மை அமைப்புகள் உயர்நீதிமன்றத்தில் பொதுநல மனுக்களை தாக்கல்செய்து வழக்கு தொடர்ந்திருந்தன.

இஸ்லாமை நாட்டின் தேசிய மதமாக அறிவித்ததை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட அனைத்து வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டன.

இதற்கிடையில், அந்நாட்டில் சிறுபான்மை இன மக்களாக வாழ்ந்துவரும் கிறிஸ்தவர்கள், புத்த மதத்தினர் மற்றும்இந்துக்கள்மீது அண்மைக்காலமாக வன்முறை தாக்குதல் பெருகி வருகிறது.

கோயில் மற்றும் தேவாலயங்களுக்குள் புகுந்து படுகொலைகளை செய்யும் அளவுக்கு அங்கு நிலைமை மோசம் அடைந்து வருகிறது.

கடந்த 7 ஆண்டுகளில் இந்துக்கள் மீது 200 இற்கும் அதிகமான தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

இந்த தாக்குதல்களை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு பங்களாதேஷ் அரசை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன் வோஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையின் முன் நேற்று முன்தினம் ஏராளமான இந்துக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர், ஒபாமாவிடம் அவர்கள் அளித்த மனுவில் கூறியுள்ளதாவது.

பங்களாதேஷத்தில் இந்து கோயில்களும் இந்து மக்களின் சொத்துகளும் சூறையாடப்படுகின்றன. இந்து மக்களுக்கு சொந்தமான நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. இந்து பெண்களை துன்புறுத்துவதும் இந்துக்களை கொல்வதும் அன்றாட நிகழ்வாகி விட்டது.

மக்களின் உணர்வுகளை புரிந்துகொண்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் வல்லவரான நீங்கள் பங்களாதேஷத்தில் சிறுபான்மையின மக்களின்மீது கட்டவிழ்த்து விடப்படும் தீவிரவாதத்தை தடுத்து நிறுத்துமாறு அந்நாட்டு அரசை வலியுறுத்த வேண்டும்.

வருங்கால ஜனாதிபதி ட்ரம்ப் தலைமையிலான அரசும் எங்களை பாதுகாக்க முன்வர வேண்டும் என நீங்கள் அறிவுறுத்த வேண்டும் என அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# ஐ.நா.பொதுச் செயலராக அன்ரனியோ குரெரெஸ்



ஐ.நா. பொதுச்செயலராக, போர்த்துக்கல் நாட்டின் முன்னாள் பிரதமர் அன்ரனியோ குரெரெஸ் (வயது-67) நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்டார். இவர் ஐ.நாவின் ஒன்பதாவது பொதுச் செயலராவார்.

கடந்த பத்தாண்டுகளாக ஐ.நா. பொதுச்செயலராக இருக்கும் பான் கீ மூனின் பதவிக்காலம், எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையிலேயே, புதிய ஐ.நா.பொதுச்செயலராக நேற்று முன்தினம் அன்ரனியோ குரெரெஸ் பதவியேற்றார்.

எனினும், இவர் தனது பணிகளை எதிர்வரும் 2017 ஜனவரி முதலாம் திகதி ஆரம்பிப்பார்.

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில், ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் புதிய ஐ.நா. பொதுச்செயலர் பதவியேற்றார்.

ஏழு பெண்கள் உள்ளிட்ட 12 பேர் ஐ.நா. பொதுச் செயலர் பதவிக்குப் போட்டியிட்ட போதிலும், கடந்த ஒக்டோபர் மாதம் அன்ரனியோ குரெரெஸ் ஐ.நா. பாதுகாப்புச் சபை மற்றும் பொதுச் சபையினால் ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2002ஆம் ஆண்டு வரை போர்த்துக்கல் நாட்டின் பிரதமராகப் பதவி வகித்த அன்ரனியோ குரெரெஸ், 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரை, அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையராகவும் பதவிவகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# இரட்டை குண்டு வெடிப்பு 38 பேர் உயிரிழப்புக்கு அமெரிக்கா கண்டனம்

(இஸ்தான்புல்)

துருக்கியில் கால்பந்து மைதானம் அருகே நடந்த இரட்டை குண்டுவெடிப்புகளில் 38 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். இந்த தாக்குதல்களுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

**முதல் குண்டுவெடிப்பு**

துருக்கி நாட்டின் முக்கிய துறைமுக நகரம் இஸ்தான்புல். அங்குள்ள பெசிக்டாஸ் மைதானத்தில் பெசிக்டாஸ் அணிக்கும், புர்சாஸ்போர் அணிக்கும் இடையேயான கால்பந்து போட்டி நடைபெற்றது.

இந்த போட்டியின்போது பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனிக்க திரளாக பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். போட்டி முடிந்து பார்வையாளர்கள் வெளியேறினர்.

அடுத்த 2 மணி நேரத்தில், பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் ஒரு பேருந்தில் வெளியேறினர். அப்போது அங்கே வெடிகுண்டுகள் நிரப்பிய காரை செலுத்தி வந்த பயங்கரவாதி ஒருவன், அந்த பேருந்து மீது பயங்கரமாக மோதினான். இதில் குண்டுகள் பலத்த சத்தத்துடன் வெடித்து சிதறின. அந்தப்பகுதியே அதிர்ந்தது.

அந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களும் கட்டடங்களும் பெருத்த சேதம் அடைந்தன.

**2ஆவது குண்டுவெடிப்பு**

இந்த தாக்குதல் நடத்தப்பட்ட அடுத்த சில நிமிடங்களில், அந்த பகுதியில் அமைந்துள்ள மக்கா பார்க் என்ற இடத்தில் தற்கொலைப்படை பயங்கரவாதி தனது உடலில் கட்டிக்கொண்டு வந்த வெடிகுண்டுகளை வெடிக்க செய்தான். அந்த குண்டுகள் பயங்கர சத்தத்துடன் வெடித்தன.

இந்த குண்டுவெடிப்புகளால் இஸ்தான்புல் நகரமே கதிகலங்கிப்போனது.

சம்பவ இடங்களுக்கு மீட்புப் படையினர் விரைந்தனர். அம்புலன்சுகளும் விரைந்தன.

**38 பேர் உயிரிழப்பு**

இந்த குண்டுவெடிப்புகளில் 38 பேர் உடல் சிதறி உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல்கள் கூறுகின்றன. மேலும் 166 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு அருகில் உள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலிஎண்ணிக்கை உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.


**அமெரிக்கா கண்டனம்**

இந்த தாக்குதல்களுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க ஜனாதிபதியின் வோஷிங்டன் வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தி தொடர்பாளர் நெட் பிரைஸ் நேற்று முன்தினம் குறிப்பிடுகையில்,

"இஸ்தான்புல் நகரில் நடந்த குண்டு வெடிப்புகளுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவிக்கிறது. இதில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். பொலிஸ் படையை குறிவைத்து இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இந்த தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்கள், படுகாயம் அடைந்தவர்களின் குடும்பங்களுடன் எங்களுடைய சிந்தனையும் பிரார்த்தனையும் இணைந்து இருக்கின்றன" எனக் தெரிவித்தார். (இ-3)

# அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சராக ரெக்ஸ் டில்லர்சன் தேர்வு



அமெரிக்காவின் புதிய வெளியுறவுத்துறை அமைச்சராக ரெக்ஸ் டில்லர்சன் என்பவரை அந்நாட்டின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தேர்வு செய்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற ட்ரம்ப் ஜனவரி மாதம் பதவியேற்கவுள்ளார்.

தனது தலைமையிலான ஆட்சியில் இடம்பெறவுள்ள அமைச்சர்கள் மற்றும் பல்வேறு துறைகளை சேர்ந்த அதிகாரிகளை தேர்வு செய்து வருகிறார்.

அவ்வகையில், அமெரிக்காவின் புதிய பாதுகாப்புத்துறை அமைச்சராக ஜேம்ஸ் மாட்டிஸ் என்பவரை நியமிக்க தீர்மானித்துள்ளதாக டொனால்ட் ட்ரம்ப் கடந்த வாரம் அறிவித்தார்.

இந்நிலையில், அமெரிக்காவின் புதிய வெளியுறவுத்துறை அமைச்சராக ரெக்ஸ் டில்லர்சன் என்பவரை டொனால்ட் ட்ரம்ப் தற்போது தேர்வு செய்துள்ளார்.

அமெரிக்காவின் மிக பிரபலமான தொழிலதிபரும் எக்ஸான் மொபைல் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாகவும் விளங்கிவரும் ரெக்ஸ் டில்லர்சன், இதற்கு முன்னர் ஹிலாரி கிளின்டனும் தற்போது ஜோன் கெரியும் வகித்துவரும் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சு பதவியை ட்ரம்ப் ஆட்சியின்கீழ் நிர்வகிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் மிகப் பிரபலமான தொழிலதிபர் என்ற முறையில் உலக நாடுகளில் உள்ள அதி முக்கிய தலைவர்களுடன் நட்பு வைத்துள்ள ரெக்ஸ் டில்லர்சன், அமெரிக்காவின்பகை நாடான ரஷ்யாவின் ஜனாதிபதி பதவி வகிக்கும் விளாடிமிர் புடினுக்கு மிகவும் நெருக்கமானவர் என கூறப்படுகிறது.(இ-3)

# ஜப்பானில் தோன்றிய அற்புத முகில் கூட்டம்





(டோக்கியோ)

ஜப்பானின் Fujisawa நகர்ப்புறத்தின் மேலாகத் தோன்றிய விசித்திரமான, கோள வடிவான முகிலின் புகைப் படங்கள் வெளிவந்த வண்ணமுள்ளன.


புகைப்படவியலாளர் தெரிவிக்கும் கருத்தின் படி, மேற்படி முகில் அது புகைப்படம் பிடிக்கப்பட்ட நேரத்திலிருந்து அதன் வடிவத்தை இழக்க ஆரம்பித்து, பின் சடுதியாக வானில் மறைந்திருக்கிறது.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியமளவில் இடம்பெற்றிருக்கின்றது.

ஆனாலும் இதுபோன்ற பஞ்சு முகில்கள் இனங்காணப்பட்டமை இது முதல் தடவையல்ல.

இதுபோன்ற நிகழ்வொன்று 2015 இலும் படம் பிடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட பாரதத்தின் மகிமைவாய்ந்த 12 ஜோதிலிங்க தரிசன நிகழ்வானது இம்மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று 13 ஆம் திகதி இரவு 9 மணி வரை கதிர்காமக்கந்தன் ஆலய வளாகத்திலுள்ள ஞானக்கணபதி கோவில் அன்னதான மண்டப அருகில் நடைபெற்றது.








## பூநகரி பிரதேச சபை

## பொதுச்சந்தைகள், கருவாட்டுக்கடைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2017

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 14.12.2016 தொடக்கம் 20.12.2016வரை
கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 21.12.2016 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 21.12.2016 பி.ப 12.30 மணி

**2017 ஆம் ஆண்டுக்கான பொதுச் சந்தைகள் , கருவாட்டுக் கடைகள் இறைச்சிக் கடைகளிற்கான மீள் கேள்விகோரல்**

| தொ.இல | விடயம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம் | ஏற்றுக் கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| | | பொதுச்சந்தைகள் | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 5000.00 | 35000.00 |
| 2 | முட்கொம்பன் | 500.00 | 3000.00 | 15000.00 |
| 3 | பள்ளிக்குடா | 500.00 | 5000.00 | 20000.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 500.00 | 5000.00 | 60000.00 |
| 2 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 20000.00 |
| 3 | 19 ம் கட்டை | 500.00 | 3000.00 | 25000.00 |
| 4 | வலைப்பாடு | 500.00 | 3000.00 | 15000.00 |
| இரணைதீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடாகடற்கரை | 500.00 | 3000.00 | 15000.00 |
| | | மாட்டிறைச்சிக்கடைகள் | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 1000.00 | 8000.00 | 80300.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 1000.00 | 8000.00 | 50000.00 |
| 2 | கிராஞ்சி | 1000.00 | 3000.00 | 28975.00 |
| இரணைதீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடாசந்தி | 1000.00 | 10500.00 | 760950.00 |
| | | கோழியிறைச்சிக்கடைகள் | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3000.00 | 20,000.00 |
| 2 | பள்ளிக்குடா | 1000.00 | 3000.00 | 21000.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 500.00 | 3000.00 | 15000.00 |
| 2 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 10000.00 |
| 3 | வலைப்பாடு | 500.00 | 3000.00 | 15000.00 |
| | | ஆட்டிறைச்சிக்கடை | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3000.00 | 22050.00 |
| 2 | பள்ளிக்குடா | 500.00 | 3000.00 | 15750.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 15000.00 |
| 2 | ஜெயபுரம் | 500.00 | 3000.00 | 15000.00 |
| இரணைதீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடாசந்தி | 500.00 | 3000.00 | 15000.00 |
| | | கருவாட்டுக்கடை | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3000.00 | 15000.00 |
| 2 | பள்ளிக்குடா | 500.00 | 3000.00 | 15000.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 15000.00 |
| இரணைதீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடாசந்தி இல - 01 | 500.00 | 3000.00 | 15000.00 |
| 2 | நாச்சிக்குடாசந்திஇல - 02 | 500.00 | 3000.00 | 15000.00 |

**முத்துலிங்கம் இராஜகோபால்**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**பூநகரி.**

(பி-0007)


# பௌத்த மதத்தை அழிப்பதற்கு சூழ்ச்சி

## ஞானசார தேரர் கொக்கரிப்பு

**(கொழும்பு)**

**பௌத்த மதத்தை அழிப்பதற்கு நான்கு புறத்திலும் சூழ்ச்சி இடம்பெறுவதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**



நாட்டையும் இனத்தையும், பௌத்த மதத்தையும் அழிப்பதற்கு நான்கு திசைகளிலிருந்தும் சூழ்ச்சி செய்யப்படுகின்றது. சிறு சிறு பேதங்களை களைந்து அனைவரும் ஒரு குடும்பமாக இணைந்து எழுந்து நிற்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. தேசியத்துவத்திற்குள் உள்ள தலைவர்களை இணக்கப்பாட்டுக்குள் கொண்டு வந்து நாட்டு மக்களுக்கு இது பற்றி கூறி பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் சொல்ல முடியாத பாவ காரியமொன்றின் பங்குதாரர்களாகி விடுவோம். இந்த தேசிய பிரச்சினையின் போது அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ள பொதுபல சேனா விரும்புகின்றது. அத்துரலிய ரத்ன தேரரின் குரலும் தற்போது தேவைப்படுகின்றது.

சம்பிக்க ரணவக்க, அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோர் இல்லாமல் இருந்திருந்தால் போரை வெற்றிகொண்டிருக்க முடியாது. மகிந்த, கோத்தபாய ஆகியோர் போரை வென்றெடுக்க வழங்கிய பங்களிப்பினை பாராட்டுவது போலவே சம்பிக்க, ரத்ன தேரர் போன்றவர்களின் பங்களிப்பும் வரவேற்கப்பட வேண்டியது. தேசியத்துவத்தை எழுப்பி போருக்கான உந்துதலை சம்பிக்க, ரத்ன தேரர் போன்றவர்கள் வழங்கினார்கள்.

மகிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ, உதய கம்மன்பில, விமல் வீரவன்ச, தினேஸ் குணவர்தன போன்றே சம்பிக்க ரணவக்க, அத்துரலிய ரத்ன தேரர் ஆகிய தேசியத்துவத்தை பிரதிநிதித்துவம் செய்யும் தலைவர்கள் பல்வேறு அரசியல் பிரவாகங்களை பிரதிநிதித்துவம் செய்தாலும் தற்போதைய சூழ்நிலையில் இணைந்து செயற்பட வேண்டும். சிங்களவர்களை பிளவடையச் செய்து எமது சிங்களத் தலைவர்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தி தங்களுக்கு தேவையானவற்றை செய்துகொள்ள சில சக்திகள் சூழ்ச்சி செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

# கோத்தா, கம்மன்பில ஜப்பானுக்கு பயணம்

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் ஜப்பானுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

கோத்தபாயவுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில, ரோஹித அபேகுணவர்த்தன மற்றும் நிரோசன் பிரேமச்சந்திர ஆகியோர் ஜப்பான் விஜயம் செய்துள்ளனர்.

ஜப்பான் வாழ் இலங்கையர்களின் அழைப்பினை ஏற்றுக் கொண்டு இவர்கள் இந்த விஜயத்தை மேற்கொண்டனர்.

எதிர்வரும் 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் இபராகீ, நகோயா ஆகிய பகுதிகளில் நடைபெறவுள்ள இரண்டு கருத்தரங்குகளில் பங்கேற்கவுள்ளனர். இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து இந்த கருத்தரங்குகளில் பேசப்படவுள்ளது. 18ஆம் திகதி இபராகீ ஸ்ரீசம்புத்த விஹாரையில் புத்தர் சிலை அங்குரார்ப்பண நிகழ்வு ஒன்று கோத்தபாய தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-3)

### மாகாண சபைகள் தான்தோன்றித்தனமாக செயற்படுவதைத் தடுக்க

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அமுலில் இருப்பது மிக அவசியமே!

## அமைச்சர் எஸ்.பி. கூறுகிறார்



**(கொழும்பு) 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தினால் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை அமுலில் வைத்திருப்பது அவசியமாகும் என்று சமூக சேவை வலுவூட்டல் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். மாகாண சபைகள் தான்தோன்றித் தனமாக செயற்படுவதை தடுப்பதற்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையே மிகச்சிறந்த வழி என்றும் அமைச்சர் தெரிவித்தார்.**

கண்டி - வாவின்ன பிரதேசத்தில் அமைந்துள்ள விசேட தேவைகளுடையோர் பயிற்சி நிலையத்திற்கு அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க நேற்று முன்தினம் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

அந்தப் பயிற்சி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள உடற்பயிற்சி பிரிவையும் அமைச்சர் இதன்போது திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வுகளை முடித்துக் கொண்டு திரும்பிய அமைச்சரிடம் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் அதற்கெதிராக எழுந்துள்ள எதிர்ப்பலைகள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர். "அரசியலமைப்பு தொடர்பாக குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொது மக்களின் கருத்துக் கணிப்பிற்கு செல்லக் கூடிய எந்தவொரு அரசியல் யாப்பு திருத்தத்திற்கும் அனுமதிக்க முடியாதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார். எவ்வாறாயினும் 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்துவதாயின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை காணப்படுவது அவசியம்.

19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இருந்தபடியினால்தான் 13ஆவது திருத்தத்திற்கு உச்ச நீதிமன்றம் அனுமதியளித்தது. மாகாண சபைகள் தான்தோனறித்தனமாக செயற்படுவதை தடுக்கும ஒரேயொரு முறை தான் நிறைவேற்று அதிகார முடைய ஜனாதிபதி முறைமை" என்றார்.

இதேவேளை அம்பாந்தோட்டையில் கடற்படையினருக்கும், அங்கு பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவரும் துறைமுக ஊழியர்களுக்குமிடையே ஏற்பட்ட முரண்பாட்டுச் சம்பவம் தொடர்பாகவும் ஊடக வியலாளர்கள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவிடம் வினவினர்.


இதற்கு பதில் வழங்கிய அமைச்சர் "சுதந்திரக் கட்சி இது தொடர்பாக இன்னும் ஆராயவில்லை. சர்வதேச கப்பல்கள் எங்காவது சிக்கியிருந்தால் அவற்றை மீட்பதற்கு கடற்படை சர்வதேச சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களுக்கு அமைய கடமைபட்டுள்ளது.

எனினும் அம்பாந்தோட்டை பணிப்பகிஷ்கரிப்பாளர்கள் ஊடகவியலாளர்களை பலிக்கடாவாக்கி கடற்படைக்கு தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்குதல் நடத்தச் சென்றால் அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கடற்படை செயற்பட்டிருக்குமானால் அதில் தவறில்லை. கடற்படைத் தளபதி ஏன் அதில் நேரடியாக தலையிட்டு அவ்வாறு செய்தார் என்பது பற்றி எனக்குத் தெரியாது. எவ்வாறாயினும் தகவல் அறியும் சட்டத்தின்படி ஊடக வியலாளர்களை புறக்கணிப்பது, தாக்குவது அனுமதிக்க முடியாது. ஆனால் பகிஷ்கரிப்பாளர்களின் பலிக்கடாவாக ஊடகவியலாளர்கள் செயற்படுவதையும் அனுமதிக்க முடியாது. மிகப் பெரிய மோதலை கடற்படைத் தளபதி சென்று தடுத்துவிட்டதாகவே நான் நினைக்கின்றேன்" என அமைச்சர் எஸ்.பி.கடற்படைத் தளபதியின் செயற்பாட்டுக்கு வக்காளத்து வாங்கினார்.

இதேவேளை கடற்படைத் தளபதியின் தாக்குதல் முயற்சி மிகவும் பாரதூரமானது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# குற்றவாளிகள் தண்டிக்கப்படாததால் அமைச்சர்கள் மத்தியில் கடும் அதிருப்தி

## அர்ஜுன ரணதுங்க சுட்டிக்காட்டு



(கொழும்பு)

கடந்த காலங்களில் குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படாதிருப்பது தொடர்பாக நல்லாட்சி அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள் பெரும் அதிருப்தி அடைந்திருப்பதாக துறைமுக அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்திலும் குற்றவாளிகள் தண்டிக்கப்படாதிருந்தால் தீர்க்கமான முடிவுகளை எடுக்க நேரிடும் என்றும் அவர் மைத்திரி-ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்தார்.

கொழும்பிலுள்ள துறைமுக அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கலந்து கொண்டு கருத்துக்களை வெளியிட்டார்.

"இன்று யாருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது? எனது அமைச்சின் கீழுள்ள துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் சிலர் பொலிஸ் நிதிமோசடி பிரிவுக்கு விசாரணைகளுக்காக சென்று வருகின்றனர். ஆனால் அதன் தலைவர் விசாரணைகளுக்கு அழைக்கப்படுவதில்லை. பறிமுதல் செய்யப்பட்டிருந்த அவரது கடவுச்சீட்டும் மீளளிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக நான் அமைச்சரவையிலும் குரல் எழுப்பியுள்ளேன்.

பெரிய திருடர்கள் அனைவரும் தப்பிச்செல்கின்றனர். இந்த அரசாங்கத்தில் எனக்கு உள்ள மிகப்பெரிய பிரச்சினை இதுதான். நான் நாடாளுமன்றத்திலும் சில நிறுவனங்கள்தொடர்பாக பேசினேன. இன்று பணம் படைத்தவர்கள் தப்பிவிடுகின்றனர்.

இதற்கு அமைச்சர்களும் பொறுப்புக்கூற வேண்டும். இதுதான் எனக்கு உள்ள அதிருப்தி. வரி குறைப்போ அல்லது பொருட்கள் சேவைகளின் விலைகள் குறைப்பையோ நாட்டு மக்கள் இன்று எதிர்பார்க்கவில்லை. கடந்த காலங்களில் குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். இன்று அது நிறைவேறியிருக்கின்றதா? இல்லை. யாரும் தண்டிக்கப்படமாட்டார்கள். எனவே ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இதனை செய்யுங்கள் என கூறியுள்ளேன். அதைவிட மேலதிகமாக எதனையும் என்னால் செய்ய முடியாது. எதிர்காலத்தில் குழுக்களாக நாங்கள் கோரிக்கை விடுப்போம். செய்வார்களா இல்லையா என்பது எமக்குத் தெரியாது. ஆனால் அந்த சந்தர்ப்பத்தில் அதற்கேற்ற வகையில் முடிவுகளையும் எடுக்க நேரிடும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## இன்று ஒரு தகவல்

### மனதிற்கு ஒரு ஸ்டெபிலைசர்

எந்த உணர்ச்சிகளுக்கும் உச்சி வரை போய்த் திரும்புவது நம்மில் பலருக்கு வாடிக்கையாக இருக்கிறது.

சோகம் என்றால் அசோக வனத்து சீதை மாதிரி ஆகிவிடுவது.

வெற்றி என்றால் விண்ணுக்கும் மண்ணுக்குமாய் ஏகமாய் குதிப்பது.

கோபம் என்றால் எரிமலை மாதிரிச் சீறுவது என்று எல்லாவற்றையுமே ஓவராகச் செய்து கொள்வது இவர்களது இயல்பு.

ஒரு சிறு அடி என்றால் கூட அதை எல்லாரிடமும் காண்பித்து அல்லது அதை எப்படியாவது காணும்படி செய்து ''த்சோ த்சோ'' என்று எல்லோரும் சொன்ன பிறகு தான் விடுவார்கள்.

அனுதாபத்தைப் பெறுவதில் இவர்களுக்கு அப்படி ஓர் ஆனந்தம்.

நம் கஷ்டங்களை யார் மீதும் திணிக்காமல், நம் சந்தோஷங்களை ஆர்ப்பாட்டம் செய்து பகிரங்கப்படுத்தாமல் எந்த உணர்ச்சிகளையும் நினைத்ததை நினைத்தபடி கொட்டி விடாமல் இருக்கப் பழகிக் கொள்வது அவசியம்.

எவனொருவன் சந்தோஷம் என்றால் குதிக்கிறானோ அவனால் நிச்சயம் சோகத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது.

சந்தோஷமா? சரி இனி அடுத்து வரும் கஷ்டத்தின் வீரியத்தைக் கட்டுப்படுத்த இது உதவும் என்று யார் அமைதியாக இருக்கிறார்களோ? அவர்களால்தான் ஒரே சீரான மனநிலையை மெல்ல அடைய முடியும்.

வயது ஏற ஏற மனம் பக்குவம் அடைய வேண்டாமா? இன்னுமா? குழந்தையைப் போல் மிட்டாய் கிடைத்ததும் குதித்து, அது பிடுங்கப்பட்டதும் அழுவது?

எப்போதும் ஒரே சீரான மன நிலையுடன் காணப்படும் நபர்களை நாம் நம் வட்டத்தில் சந்திக்காமலா இருக்கிறோம்? பலரைப் பார்க்கவே செய்திருக்கிறோம்.

பலமுறை இது இவர்களால் எப்படிச் சாத்தியம் என வியந்திருக்கிறோம்.

இது போதாது.

நாமும் இவர்களைப் போல் எதையும் ஒரே மனநிலையுடன் ஏற்கும் மனப் பக்குவத்தை அடைய முயல வேண்டும்.

ஆயிரம் கஷ்டம் என்றாலும் அவற்றைப் காலடியில் போட்டு மிதித்து விட்டு ஏதும் நடவாதது மாதிரிப் புன்னகையுடன் வலம் வர நம்மால் முடியும்.

முயற்சி தான் தேவை.

மனதிற்குள் இருக்கும் ஒரு சிறு சஞ்சலத்தை பிறர் தெரிந்து கொண்டுவிட அனுமதிக்கக்கூடாது என்ற வைராக்கியம் வந்தால் எத்தகைய மனப் போராட்டங்களையும் பிறர் தெரிந்து கொண்டு விடாதபடி செய்வது சாத்தியமே.


நாம் என்ன நினைக்கிறோம் என்பதைப் பிறர் சரிவரப் புரிந்து கொள்ள முடியாதபடி செய்து விடுவதில் வெற்றி கண்டால், அதுவே மனத்தைச் சீராக வைத்துக் கொள்ளும் முயற்சியில் முதல் வெற்றியாக ஆகி விடுகிறது.

மெல்ல முயன்று இந்தச் சீரான மன நிலையைப் பெற்று விட்டால்,

நம்மைப் பிறர் மட்டுமல்ல.

நம்மை நாமே விரும்ப ஆரம்பித்து விடுவோம்.

**லேனா தமிழ்வாணன்**


வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வடமராட்சி பருத்தித்துறைக்கு திடீர் விஜயம் மேற்கொண்டார். கந்த உடையார் வீதியில் உள்ள வல்லிபுரம் மார்க்கண்டு என்பவரது வீட்டில் சாய்பாபாபின் படத்தில் இருந்து விபூதி, குங்குமம் என்பன கொட்டப்படுவதாக பத்திரிகையில் வெளியான செய்தியை அடுத்தே அதனைப் பார்ப்பதற்காக அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டார். (படங்கள்:மகாலிங்கம்)




ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும், ஈழத்தமிழர்களின் ஆதரவுக் குரலாகவும் ஒலித்து வந்த தமிழகத்தைச் சேர்ந்த கவிஞர் இன்குலாப் கடந்த முதலாம் திகதி இயற்கை எய்தினார்.

ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்காகத் தன் இறுதி மூச்சு வரையிலும் ஒரு கவிதைப் போராளியாகவும், களப்போராளியாகவும் பணியாற்றி வந்த அவருக்கான நினைவேந்தல் நிகழ்ச்சி நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.




# யாழ்.இந்து மாணவன் ஜப்பான் பயணமானார்


ஆசிய நாட்டு இளைஞர்களுக்கான விஞ்ஞான விரிவாக்க செயற்றிட்டத்தினூடாக (Asian High School Students Japan-Asia Youth Exchange Programme in Science) ஜப்பான் அரசின் விஞ்ஞான தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் அழைப்பின் பேரில் 2016 இல் புலமைப்பரிசில் பெற்று இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை சேர்ந்த ஒரே ஒரு தமிழ் மாணவன் நிமலன் பிருந்தாபன் (தரம் 12 •உயிரியல் பிரிவு) ஜப்பான் பயணமாகியுள்ளார்.




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 11 இல் முதன்மை மாணவனாகிய இவர் க.பொ.த(சா/த) தரப் பிரிவில் 2015 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் முதலிடம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 927

மதி




றோமி





தர்சி





றாதை




சுஜி




வி.சிந்து




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீ. சுதந்திரக் கட்சிக்கே வெற்றி

## எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு



நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே வெற்றி கொள்ளும் என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கட்சிகளால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகளை வெற்றி கொள்ள முடியாது. அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரிக்கவும் முடியாது.

சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியைப் பிளவடையச் செய்ய முயற்சிக்கின்றனர். ஆனாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீது நம்பிக்கை கொள்ளும் ஆதரவாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இருப்பதால் இதை ஒரு பிரச்சினையாகக் கருத முடியாது எனத் தெரிவித்தார். (இ-3)

# சிறுவர் இல்லத்திற்கு நிதியுதவி



பிரான்ஸ் திருமறைக் கலாமன்றத்தினால் நாயகத்தில் உள்ள போரால் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட சிறார்களின் மேம்பாட்டிற்காகவும் மற்றும் நலன்புரித் திட்டங்களுக்காகவும் வருடம்தோறும் வழங்கப்பட்டு வரும் நிதியுதவி இம்முறை வவுனியாவில் உள்ள டொன் போஸ்கோ சிறுவர் இல்லத்துக்கு அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது மேற்படி நிதியுதவியினை யாழ். திருமறைக் கலாமன்ற செயலாளர் சி.எம். நெல்சன் சிறுவர் இல்லத்துக்கு பொறுப்பான அருட்சகோதரியிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

இந்நிதியுதவி கடந்த காலங்களில் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமம், யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் நிறுவனம் மற்றும் மட்டக்களப்பு-வவுணதீவு பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட சிறார்களுக்கும் திருகோணமலை பிரதேச செயலகத்துக்குட்பட்ட சிறார்களுக்கும் வன்னியில் உள்ள வசதி குறைந்த மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காகவும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# அரசாங்கச் சொத்துக்கள் விற்கப்படவே மாட்டாது

## நிதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கச் சொத்துக்கள் தனியார் மயமாக்கப்படவோ அல்லது விற்கப்படவோ மாட்டாதெனவும் 2017ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் அவ்வாறான ஆலோசனைகள் எதுவும் இல்லையெனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுக் கடன்களை பங்குகளாக்கி, மக்களின் கடன் சுமையை குறைப்பதனால் இந்த நாட்டை ஒரு பேரளவு உற்பத்திப் பொருளாதார மையமாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் வரவு - செலவுத்திட்டத்தில் உள்ளதென நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

"வரிவிடுமுறைக் காலம், சலுகை மற்றும் வட்டியில்லாக் கடன், விவசாயத்துறையை வர்த்தகமயப்படுத்த உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் கடன் ஏற்பாடுகள் என நாட்டை ஒரு பேரளவு உற்பத்தி நாடாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் வரவு - செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ளதால், பொருளாதாரத்தின் சகல துறைகளினதும் பங்காளர்களின் பிரதிநிதிகள் பாராட்டியுள்ளனர் என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், "அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களில் இலாபம் ஈட்ட முடியாது. செய்த கடன் பொறி எனும் சவாலை அரசாங்கம் பெரியளவில் எதிர்நோக்கியது.

இதனால் 2014ஆம் ஆண்டளவில் மொத்த தேசிய உற்பத்தி 11 சதவீதமாக அரச வருமானம் குறைந்தது. இப்போது மொத்த தேசிய உற்பத்தி 13.6 சதவீதம் எனும் அளவுக்கு இறைவரி அறவீடு அதிகரித்துள்ளது.

இதற்கு வரி அறவிடுவதில் ஊழல் நீக்கப்பட்டு, செயற்திறன் அதிகரித்தமையே காரணமாகும். இதன்மூலம் முதல் தடவையாக மீண்டெழும் செலவை அரச வருமானத்தால் ஈடு செய்ய முடிந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# இருட்டறையில் எனது வாழ்வு

## 25 வருடங்கள் சிறையிலிருக்கும் நளினியின் வலிகளைச் சுமந்த நெடுந்தொடர்..... 11



"சம்பவ இடத்தில் இறந்து போன போட்டோ கிராபர் ஹரிபாபுவின் நிலை மற்றும் லதா- கண்ணன் அவர்களது மகள் கோகிலா ஆகியோர்களது நிலைதான் என்னுடைய நிலையும். சதித்திட்டம் தெரிந்திருந்தால் ஹரிபாபு அருகில் இருந்து புகைப்படம் எடுத்திருக்க மாட்டார். கூடவே சுபா, தணு, சிவராசன், லதா கண்ணன் அவர் மகள் கோகிலா மற்றும் நான் உள்ளிட்டவர்களையும் படம் எடுத்திருக்கமாட்டாரே.. அதே நிலைதான் எனக்கும். மே 21ஆம் திகதிக்குப் பிறகு நாங்கள் சிவராசனுடன் 25ஆம் திகதி அன்று திருப்பதி போய் வந்தோம். அந்தச் சதிபற்றி தெரிந்து இருந்தால் அவருடன் சேர்ந்து நாங்கள் திருப்பதி போயிருப்போமா? "



... பிறகு தலைவர் வரும் நேரத்தில், சுபா என்னைப் பிடித்திழுத்துக் கொண்டு வெளியே வந்துவிட்டார். ஆனால், நீதிமன்றத் தீர்ப்பில் நான் அவர்களுக்கு மறைத்துப் பாதுகாப்பு கொடுத்ததாகவும் அன்றிலிருந்தே நான் தலைமறைவாகி விட்டதாகவும் கூறியிருக்கிறார்கள். இப்படி எல்லாவற்றையும் ஆழமாகப் பார்த்தால் உண்மைக் குற்றவாளிகளை விட்டுவிட்டு எங்களைச் சிக்கவைக்க வேண்டும் என்ற ஒரு நோக்கம் மட்டுமே இதில் இருந்திருக்கிறது.

சம்பவ இடத்தில் இறந்து போன போட்டோ கிராபர் ஹரிபாபுவின் நிலை மற்றும் லதா கண்ணன், அவரது மகள் கோகிலா ஆகியோர்களது நிலைதான் என்னுடைய நிலையும். சதித்திட்டம் தெரிந்திருந்தால் ஹரிபாபு அருகில் இருந்து புகைப்படம் எடுத்திருக்கமாட்டார். கூடவே சுபா, தணு, சிவராசன், லதா கண்ணன் அவர் மகள் கோகிலா மற்றும் நான் உள்ளிட்டவர்களையும் படம் எடுத்திருக்கமாட்டாரே... அதே நிலைதான் எனக்கும். மே 21ஆம் திகதிக்குப் பிறகு நாங்கள் சிவராசனுடன் 25ஆம் திகதி அன்று திருப்பதி போய்வந்தோம். அந்தச் சதிபற்றி தெரிந்து இருந்தால் அவருடன் சேர்ந்து நாங்கள் திருப்பதி போயிருப்போமா? எனக்கு இங்கு குடும்பம் இருக்கு, வாழ்வு இருக்கு. அப்படி இருக்க இந்த முட்டாள் தனத்தினை யாராவது செய்து இருப்பார்களா? அதுவும் என் தம்பி பெயரிலேயே வாடகைக் கார் புக் செய்திருந்தோம். அப்படி செய்திருப்போமா? குற்றம் நடந்த பிறகும் நாங்கள் எப்படி அவருடன் தொடர்பில் இருக்க வேண்டும் என்று நினைத்திருப்போம். 26ஆம் திகதி பத்திரிகைகள் மூலம் தான் கொலைச்சதியில் தணு சம்பந்தப்பட்டார் என உறுதியாகத் தெரிந்தது. அன்றுதான் அதுவரை நடந்ததை என் கணவரிடம் சிவராசன் சொல்கிறார். திருப்பதியில் இருந்து திரும்பிய மறுநாளே 27-5-91 அன்று எங்களின் வில்லிவாக்கம் வீட்டைக் காலி செய்துவிட்டோம். காரணம் சிவராசன் அங்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகத் தான்.

அது எல்லாம் சி.பி.ஐ.ஆவணங்களிலேயே இருக்கின்றன. இந்தப்பின்னணியை எல்லாம் பார்த்தால், கொலைச்சதியில் எங்களுக்குத் தொடர்பிருக்கவில்லை என்பது தெரியவரும் மேடம்'

பிரியங்கா:- 'அதன் பிறகு சிவராசனைப் பார்க்கவில்லையா?'

நான்: இல்லை.

பிரியங்கா: 'ஏன் உடனே பொலிஸ்'க்குத் தகவல் சொல்லவில்லை?'

நான்: 'அந்த நேரத்தில் என் கணவரின் பாதுகாப்பு கருதி அப்படியிருந்து விட்டேன். அவருக்கு ஏதும் ஆபத்து வந்துவிடக் கூடாது. எப்படியாவது நல்லபடியாக வெளிநாடு போய்விட வேண்டும். அதற்கான ஏற்பாட்டைச் செய்யும் முகவர் பொறுப்பே சிவராசனிடம்தான் இருந்தது. அது கெட்டு விடக்கூடாது. கூடவே எங்களை வேறு ஏதேனும் சதிவலையில் சிக்கவைத்து விடுவாரோ என்ற பயம் எல்லாம் சேர்ந்து அப்படியிருந்து விட்டேன். சிவராசனைப் பிடிக்க வேண்டும் என நினைத்திருந்தால் தாராளமாக எப்போதோ பிடித்திருக்கலாம்!'

- இப்படி நான் சொன்னதை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டே இருந்தார் பிரியங்கா!

"நான் சாப்பிடும் உணவில் விஷ மாத்திரை கலக்கப்பட்டது!"

"நான் சொன்னதை மிக நிதானமாக, அதே கூர்மையான பார்வையோடு கவனித்த படியே இருந்தார் பிரியங்கா. அவசியம் என்றால் மட்டுமே கேள்வி கேட்டார். அப்போது தான் எனக்கொரு மன உறுத்தல் இருந்தது.

'என்னைப் பற்றியும் என் கணவரைப் பற்றியும் மட்டுமே பேசிக் கொண்டிருக்கிறோமே. என் கணவருடன் தூக்குமர நிழலில் இருக்கும் மற்ற இருவரைப் பற்றியும் பேசவேண்டும் அவர்களும் குற்றமற்றவர்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறிவிட வேண்டும்' என்று அவர்களைப் பற்றி பேசினேன்.

(வலிகள் தொடரும்...)




# சிறுவர் அரங்கம்

## பொன் தந்த பாம்பு

...அதனால் வேறு யாராவது விருந்தாளி வந்தால் 'இல்லை' என்று சொல்லும் நிலைமை ஏற்படாதல்லவா?" என்று சொல்லிற்று. ஆண்புறா வேடனைப் பற்றி ஒன்றும் கூறவில்லை தன்னையே நிந்தித்துக் கொண்டது. 'கொஞ்ச நேரம் பொறு. உனக்கு உணவு தருகிறேன்' என்றது.

இவ்வாறு சொல்லிவிட்டு, அறவழியில் நின்று ஒழுகிய அந்தப் புறா, நெருப்பை வலம் வந்து, தன் வீட்டுக்குள் நுழைவது போல் மிகுந்த மனக்களிப்புடன் நெருப்பில் விழுந்தது.

அதைக் கண்டதும் வேடனுக்கும் அளவற்ற இரக்கம் பிறந்தது. நெருப்பில் விழுந்த புறாவைப் பார்த்து, "பாவம் செய்கிற மனிதன் தன் ஆன்மாவை நேசிபதில்லை. தான் செய்த பாவத்தைத் தானே அனுபவிக்க வேண்டும். என் புத்தி பாவம் நிறைந்த புத்தி பாவம் நிறைந்த செய்கைகளைச் செய்தே நான் திருப்தியடைந்து வந்திருக்கிறேன். எனக்கு நரகம் நிச்சயம். இந்தப் புறா ஒரு மகாத்மா. தன் மாம்சத்தைக் கொடுத்து, கொடிய மனம் படைத்த எனக்கு அறிவு புகட்டியிருக்கிறது. இன்றுமுதல் என் உடம்புக்குச் சுகமளித்துப் பேணாமல் கோடைக்காலத் தில் ஜலம் வற்றிவிடுவதுபோல் உடலை வாட்டப் போகிறேன். குளிர், காற்று, வெய்யிலைச் சகித்துக் கொண்டு, உடலை இளைக்கச் செய்து, பலவிதமான உபவாசங்களால் அறவழிப்பட நிற்பேன்" என்று சொன்னான். உடனே முளை, கம்பு, வலை, கூண்டு எல்லாவற்றையும் வேடன் முறித்தெறிந்தான். பரிதாபமான அந்தப் பெண புறாவைக் கூண்டிலிருந்து விடுதலை செய்துவிட்டான்.



அந்தப் பெண்புறா நெருப்பில் விழுந்த தன் கணவனைக் கண்டதும் சோகத்தால் அதன் நெஞ்சு நடுங்கியது. பரிதாபமாகப் புலம்பத் தொடங்கியது. "பிராண நாதா, நீ இன்றி நான் வாழ்ந் தென்ன பிரயோஜனம்? புருஷ னில்லாத பெண்கள் உயிர் வாழ்ந்து என்ன பயன்? மானம், தன்மதிப்பு, பெருமை, குடும்பத்தில் உறவினர்கள் காட்டும் மரியாதை, வேலையாட்களிடம் செலுத்தும் அதிகாரம் எல்லாம் பெண் விதவையானவுடன் மறைந்தொழிகின்றன' என்று பெண்புறா பலவிதமாக புலம்பிற்று. கற்பில் சிறந்த அந்தப் புறா தானும் தீயில் புகுந்தது.

உடனே, அங்கே ஆண்புறா தெய்வவிமானத்தில் ஏறி வந்து காட்சியளித்தது. பெண்புறாவும் தெய்வீக உடையும் ஆபரணாங்களும் அணிந்து அங்கு தோன்றி தன் புருஷனைப் பார்த்தது. அதைப் பார்த்த ஆண்புறா, "அன்பே, நீ என்னை மரணத்திலும் பின் தொடர்ந்தாய், சிறப்பான செய்கை செய்தாய்? மனித உடம்பில் வளரும் ரோமம் மூன்றரை கோடி எண்ணிக்கைக் கொண்டது. கடைசி வரை கணவனைப் பின்பற்றி வரும் மனைவியரும் சுவர்க்கத்தில் மூன்றரை கோடி வருஷங்களுக்கு வாழ்ந்து வருவார்கள்" என்றது. மகிழ்ச்சியுடன் பெண் புறாவைத் தெய்வ விமானத்தில் ஏற்றுவித்து அணைத்துக் கொண்டது. பிறகு அவ்விரண்டு புறாக்களும் இன்பமாக வாழ்ந்தன. வேடனோ மனோவேதனை மிகுந்தவனாகி, மரணத்தைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டே, காட்டில் நுழைந்தான். அவனுடைய ஆசைகள் எல்லாம் அகன்று விட்டன. காட்டில் காட்டுத்தீ பற்றியிருப்பதைப் பார்த்து, அந்தத் தீயில் அவன் புகுந்தான். பாவங்கள் எல்லாம் பஸ்மமாயின. அவன் சுவர்க்கத்துக்குச்சென்று சுகமாக வாழ்ந்தான்.

அதனால்தான் 'எதிரி சரணமடைந்தபோது அவனைக் கௌரவித்து....' என்ற செய்யுளைச் சொன்னேன்" என்று முடித்தது ரக்தாட்சன்.

அதைக் கேட்டபிறகு, ஆந்தையரசன் தீப்தாப்சனைப் பார்த்து, "நீ என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டது. அதற்குத் தீப்தாட்சன் பதிலளிக்கையில்,

"என்னைக் கண்டதும் தினந்தோறும் ஒதுங்கிச் சென்றவள் இன்றைக்கு என்னை வந்து அணைத்துக்கொள்கிறாள்? பரோபகாரியே, உனக்கு என் நன்றி. உனக்கு இஷ்டமானதை இங்கிருந்து எடுத்துச் செல்!"

என்ற கூற்றுக்கு ஒரு திருடன் மறுமொழியாக,

"திருடுவதற்கு ஏதாவது இங்கிருந்தாலும் அவை எனக்குத் திருடத் தக்கவையாக இல்லை. இப்படி அவள் உன்னை அணைத்துக் கொள்ளாமலிருந்தால் நான் திரும்பவும் இங்கு வந் திருப்பேன் என்று சொன்னான்" என்று சொல்லிற்று.

அதைக் கேட்ட ஆந்தை யரசன், "ஒன்றும் புரிவில் லையே! யார் அணைத்துக் கொள்வதில்லை? யார் அந்தத் திருடன்? விவரமாகச் சொல். அதைக் கேட்க விரும்புகிறேன்" என்றது. தீப்தாட்சன் சொல்லத் தொடங்கியது. (முற்றும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

12.2016 14

- 1287 - நெதர்லாந்தில் இடம்பெற்ற பெரும் வெளளத்தினால் சூடர் சே கடல் தடுப்பு சுவர் இடிந்ததில் 50,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1884 - இலங்கையில் இடம்பெற்ற பெருமசூறாவளி காரணமாக யாழ்ப்பாணத்தில் மட்டும் பெரும உயிரச் சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டன.
- 1899 - யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையை தனியாரிடம் இருந்து இலங்கை அரசாங்கம் பொறுப்பெடுத்துக் கொண்டது.
- 1900 - மாக்ஸ் பிளாங்க் தனது கரும்பொருள் கதிர்வீச்சு பற்றிய கொள்கையை நிறுவினார்.
- 1911 - ரோல்ட் அமுண்ட்சென் தலைமையிலான 5 பேரடங்கிய குழு தென் முனையை அடைந்த முதலாவது மனிதர் என்ற பெயரைப் பெற்றனர்.
- 1918 - பின்லாந்தின் மன்னனாக ஜெர்மனியின் இளவரசன் பிறீட்ரிக் கார்ல் வொன் ஹெஸ்சென் தெரிவுசெய்யப்பட்டான்.
- 1939 - நாடுகளின் கூட்டமைப்பில் இருந்து சோவியத் ஒன்றியம் வெளியேற்றப்பட்டது.
- 1941 - உக்ரேனின் கார்க்கிவ் நகரின் நாசி ஜேரமனியத் தளபதி யூதர்கள் அனைவரும் நகரை விட்டு 2 நாட்களில் வெளியேற உத்தரவிட்டான். அடுத்த இரு நாட்களில் சுமார் 15,000 யூதர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1962 - நாசாவின் மரைனர் 2 விண்கலம் வெள்ளி கோளை அண்மித்தது. இதுவே வெள்ளியை அண்மித்த முதலாவது விண்கலமாகும்.
- 1971 - வங்காளதேச விடுதலைப் போர்: கிழக்குப்பாக் கித்தானைச் சேர்ந்த 200 இற்கும் அதிகமான அறிவாளிகள் பாக்கித்தான் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1972 - அப்பல்லோ 17: யூஜின் சேர்னன் சந்திரனில் நடந்த கடைசி மனிதர் ஆனார்.
- 2003 - சதாம் உசேன் கைப்பற்றப்பட்ட செய்தியை ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோர்ஜ டபிள்யூ புஷ் அதிகாரபூர்வமாகறிவித்தார்.
- 2004 - தென் பிரான்சில் வான் வீதி எனஅழைக் கப்படும் மில்லோ என்ற உலகின் மிகு உயர் பாலம் திறக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1503 - நோஸ்ராடாமஸ், சிறந்த குறி சொல்லும பதிப்பாளர். (இ. 1566)
- 1546 - டைக்கோ பிரா, டேனியப் பிரபு. (இ.1601)
- 1895 - ஐக்கிய இராச்சியத்தின் ஆறாம் ஜோர்ஜ். (இ.1952)
- 1895 - போல் எல்யூவார், பிரெஞ்சுக் கவிஞர். (இ.1952)
- 1924 - ராஜ்கபூர், இந்தியத்திரைப்பட நடிகர்.(இ.1988)
- 1946 - சஞ்சய் காந்தி, இந்திய அரசியல்வாதி. (இ.1980)
- 1947 - டில்மா ரூசெஃப், பிரேசில் அரசியல்வாதி.
- 1953 - விஜய் அமிர்தராஜ் இந்திய டென்னிஸ் வீரர், நடிகர்.
- 1966 - எல் தோர்னிங் இசுமிட், டென்மார்க் அரசியல்வாதி.
- 1979 - சாமர சில்வா, இலங்கைத் துடுப்பாட்ட அணியின் மட்டையாளர்.
- 1984 - ராணா டக்குபாதி, இந்திய நடிகர்.
- 1984 - எட்வர்ட் ரைன்ஸ்போர்ட், சிம்பாப்வே துடுபாட்ட வீரர்.
- 1988 - வனேசா ஹட்ஜன்ஸ், அமெரிக்க நடிகை.

### இறப்புகள்

- 1591 - சிலுவையின் புனித யோவான், எசுப்பானிய மதகுரு, புனிதர். (பி. 1542)
- 1799 - ஜார்ஜ் வாஷிங்டன், ஐக்கிய அமெரிக்க நாடுகளின முதலாவது அரசுத் தலைவர். (பி.1732)
- 1953 - வி. ஐ. முனுசாமி பிள்ளை, தமிழக அரசியல்வாதி. (பி. 1889)
- 1959 - சோமசுந்தர பாரதியார், தமிழறிஞர். (பி.1879)
- 2006 - அன்ரன் பாலசிங்கம், தமிழீழ விடுதலை புலிகளின் அரசியல் ஆலோசகர். (பி. 1938)

### சிறப்பு நாள்

- இந்தியா - எரிபொருள் சேமிப்பு நாள்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 90 | 80 | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 100 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 70 | 120-160 | 60 | 100 | 70 |
| தக்காளி | 50 | 80 | 45 | 70 | 60 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 40 | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 30 | 80 | 20 | 20 | 50 | 60 | 40 |
| கரட் | 100 | 80 | 90 | 100-140 | 100 | 160 | 100 |
| பூசணி | 40 | 50 | 35 | 50 | 40 | 60 | 40 |
| புடோல் | 60 | 80 | 60 | 80 | 50 | 180 | 70 |
| வாழைக்காய் | 40 | 50 | 45 | 50 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 80 | 100 | 120 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 110 | 120 | 95 | 120 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 180 | 600 | 180 | 200 | 100 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 100 | 80 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 70 | 100 | 60 |
| பயற்றங்காய் | 140 | 200 | 120 | 180-240 | 140 | 200 | 200 |
| லீக்ஸ் | 100 | 100 | 95 | 100 | 100 | 140 | 100 |
| பீற்றூட் | 60 | 100 | 50 | 60 | 60 | 100 | 60 |
| கறிமிளகாய் | 150 | 200 | 130 | 200 | 120 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 350 | 300 | 200 | 200 | 180 | 200 | 200 |
| போஞ்சி | 200 | 300 | 160 | 200 | 200 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 70 | 50 | 50 | 60 | — | 60 | 50 |
| கீரை-1பிடி | 40 | 50 | — | 40 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 400 | 400 | 600 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 50 | 20-40 | 50 | 30 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 350 | 600 | — | 300 | 300 | — | 300 |
| வெங்காயப்பூ | 200 | 200 | — | — | 250 | — | — |
| முள்ளங்கி | 60 | 120 | 50 | 60 | 60 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 30 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 40 | 15 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 120 | — | 80 | 50 | 80 | 60 |

# எந்த விலையைக் கொடுக்கவும் தயாராகவுள்ள சீனா

(நேற்றைய தொடர்ச்சி...)

இது இலங்கை மற்றும் அமெ ரிக்காவிற்கு இடையிலான இரு தரப்பு இராணுவ உறவைப் பலப்படுத்துவதில் திருப்பு முனை யாக அமைந்துள்ளது. மார்ச் மாதம், அமெரிக்காவின் 'புளூறிட்ஜ்' என்கின்ற ஏழாவது கப்பல்படையின் கப்பலானது கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்ற போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைச் சென்று பார்வை யிடுவதற்கான அழை ப்பைப் பெற்றார்.

இதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு அமெரிக்காவின் மேலும் மூன்று கப்பல்கள் இலங்கை துறைமுகத்தில் வெற்றிகரமாகத் தரித்து நின்றன. அதாவது யு.எஸ்.எஸ்.நியூ ஓர்லியன்ஸ், யு.எஸ்.எஸ்.பிராங்க் கேபிள் மற்றும் யு.எஸ்.எஸ்.சோமசெற் ஆகியனவே அவையாகும். யு.எஸ்.எஸ்.சோமசெற் கப்பலா னது சில நாட்களுக்கு முன் திரு கோணமலைத் துறை முகத்தில் தரித்து நின்றமை இங்கு குறிப் பிடத்தக்கதாகும்.

குறிப்பாக, யு.எஸ்.எஸ்.சோமசெற் கப்பலும் அதன் வீரர்களும் இல ங்கை கடற்படை வீரர்களுக்கும் கப்பல் மாலு மிகளுக்கும் பாதுகாப்பு ஒத்து ழைப்பு தொடர்பான பயிற்சிகளை பரிமாற்றிக் கொண் டனர். இக்கூட்டு நடவடிக்கையில் அடிப்படை இராணு வப் பயிற்சிகள் மற்றும் மனிதாபி மான உதவி மற்றும் இடர் நிவாரணங்களை வழங்கக்கூடிய படகுப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

அமெரிக்காவின் இக்கூ ட்டுப்பயிற்சி யானது இலங்கை யுடனான இராணுவ சார் உறவைப் பலப்படுத்துவதாகவும் இதன்மூலம் இலங்கை தற்போது முன்னெடுக்கப்படும் நல்லிணக்கம் மற்றும் வெளிப படைத்தன்மை ஆகிய வற்றுக்கு நலன்பயக்கும் எனவும் அமெரிக காவின் பசுபிக் கட்ட ளைத் தளபதி தெரிவித்தார்.

காலி பாதுகாப்புக் கருத்தரங் கில் சீனாவின் மக்கள் இராணு வத்தின் கடற்படைப் பொறுப்ப திகாரி றியர் அட்மிரல் வாங்க் டசோங்க் உட்பட பல்வேறு நாட்டின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட நிலையில், மகிந்த ராஜ பக்ஷவின் சீனா மையப்படுத்தப் பட்ட வெளியுறவுக் கோட்பாட்டின் விளைவு தொடர்பாக ஹரிஸ் சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம் இலங்கை தனிமைப்படுத்தப்பட்டதாகவும் ஹரிஸ் குறிப்பிட்டார். 'இலங்கை யானது மூன்று பத்தாண்டு கால யுத்தத்திலிருந்து மீளெழுந்தமை மற்றும் தனிமை போன்றவற் றிலிருந்து வெளியேறுவதற்காக தற்போது நல்லிணக்க முயற்சியில் ஈடுபட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமைத்துவத்தின் கீழ், ஜனநாயக ஆட்சி மீண்டும் மலர்நதுள்ளதை இலங்கைவாழ் மக்கள் பார்க்கின்றனர்.

நீதி மற்றும் சட்ட ஆட்சியை நிலைநிறுத்துவதற்கான தங்களின் தொடர்ச்சியான ஈடுபாடானது அமெரிக்கா வுடனான ஒத்துழைப்பை விரிவுபடுத்தும். இதில் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு முக்கியமானது. இலங்கை அமெரிக்கா மற்றும் இந்தியா, அவுஸ்திரேலியா ஆகியன இந்திய மாக்கடலின் பாதுகாப்பில் தீவிர கவனம் செலுத்துகின்றன. இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் எழுந்துள்ள முக்கிய சவால்கள் மற்றும் நிலைத்தன்மை மற்றும் செழுமைக்கான அச்சுறு த்தல் ஆகியவற்றை முறியடிப் பதற்கா கவே கடற்பாதுகாப்பில் உரி மையுடன் ஈடுபட்டுள்ளன' என அமெரிக்காவின் பசுபிக் கட்டளைத் தளபதி ஹரிஸ் தெரிவித்தார்.

இந்திய - பசுபிக் பிராந்தி யத்தில் போக்குவரத்தில் ஈடுபடும் அடையாளங் காணமுடியாத பெரும் எண்ணிக்கையான கப்பல்களால் நேரடி அச்சுறுத்தல் எழுந்துள்ளதாகவும் தளபதி ஹரிஸ் குறிப்பிட்டார். 'இவ்வாறான பொதுவான கூட்டு நடவடிக்கையின் மூலம் இந்தக் கப்பல்கள் என்ன நோக்கத்தில் கடலில் போக்குவரத்தில் ஈடு படுகின்றன என்பதையும் இவை போதை ப்பொருட் கடத்தல், சட்டரீதியற்ற மீன்பிடி அல்லது ஆட்கடத்தல்களில் ஈடுபடு கின்றனவா என்பதையும் நாங்கள் அறிகின்றோம். இவ்வா றான சூழலை அறிந்து கொண்டு இவற்றுக்கு எவ்வாறு சிறந்த பதிலை வழங்குவது என்பது தொடர்பான தீர்மானத்தை எடுப்பதற்கு இவை நாட்டுத் தலைவர்களுக்கு உதவுகின்றன' என ஹரிஸ் தனது உரையில் தெரிவித்தார்.

70 கப்பல்கள், 300 விமானங்கள் 40,000 . கடற்படை மற்றும் நீர்மூழ்கி வீரர்களைக் கொண்டுள்ள அமெரிக்காவின் பசுபிக் கட்ட ளைப்பீடத்தின் ஏழாவது கப்பற் படையின் ஒரு கப்பலான, யு.எஸ். எஸ். பூளூ றிட்ஜ்ஜே அண்மையில் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்றது. அமெரிக்காவின் பசுபிக் கட்டளை மையமானது ஒன்றிணைக்கப்பட்ட கட்டளை நிலை வீரர்கள், கட்டளைத் தளபதி, மூத்த அமெரிக்க இராணுவ அதிகாரி ஆகியோரைக் கொண்டுள்ளது.

இக்கட்டளை மையமானது அமெரிக்காவின் மேற்குக் கடலிற்கு 100 கடல் மைல் தொலைவு தொடக்கம் இந்தியாவின் மேற்குக் கரை வரைக்கும், ஆட்டிக் தொடக்கம் அந்தாட்டிக்கா வரைக்குமான கடல்சார் இராணுவ நடவடிக்கை களுக்குப் பொறுப்பாக உள்ளது.

அமெரிக்க பசுபிக் கட்டளைத் தளபதி (அட்மிரல் ஹரிஸ்) நேரடியாக அமெரிக்க ஜனாதிபதிக்கு அறிக்கை யிடும் அதிகாரத்தைக் கொண் டுள்ளார். 'இந்திய மாக் கடலில் எழுந்துள்ள இராணுவ நகர்வைச் சமப்படுத்துவதில் அமெரிக்கா பங்கு வகிக்கும் எனவும் புதிய பிராந்திய பூகோள அரசியல் நிலைப்பாட்டில் இலங்கையுடனான அமெரிக்காவின் இராணுவ உறவுகள் புதிய அளவு கோலாக இருக்கும் எனவும் மகிந்த ராஜ பக்ஷ காலத்தில் சீனா செய்தது போன்று தொடர்ந்தும் இலங்கையில் சீனா செல் வாக்குச் செலுத்த முடியாத நிலை உருவாகும் என்பதையும் அமெரி க்காவின் நிலையானது இலங்கைக்கு உத்தர வாதத்தை வழங்குகிறது' என தளபதி ஹரிஸ் குறிப் பிட்டார்.


மகிந்த ராஜபக்ஷ ஆட்சியி லிருந்த போது விரிசலடைந்தி ருந்த அமெரிக்க - இலங்கை இராணுவ பங்களிப்பானது தற்போது மீண்டும் நெருக்க மடைந்து வருகிறது. ஆனால் தற்போது சீனாவால் மகிந்த ராஜபக்ஷவின் புதிய அரசியற் கட்சிக்கு நிதியுதவி வழங்கப் படுகிறது. புதிய அமெரிக்க-இலங்கை உறவானது நிதிப் பரப்புரை யாக மாற்றமுறலாம். இந்த அரசாங்கத்தை கவிழ்ப் பதற்கு ஆர்ப்பாட்டங்களும் மேற்கொள்ளப்படலாம்.

இவ்வாறானதொரு நிலை உருவாவதற்கு சீனா எத் தகைய விலையையும் மகிழ்ச்சியாகக் கொடுக்கும்.

(முற்றும்)

ஆங்கிலத்தில் – DE VALLIERE
வழிமூலம் – Ceylon today
மொழியாக்கம் - நித்தியபாரதி





EXCELLENT OPPORTUNITY FOR SRI LANKAN STUDENTS TO STUDY IN SWITZERLAND / CZECH REPUBLIC

SEVANAN BUSINESS SCHOOL
NORTH LANKA IIT
SUCCESS MAKES PERFECT

SEVANAN BUSINESS SCHOOL
ZURICH-SWITZERLAND / PRAGUE-CZECH REPUBLIC

Study BA / MA / MBA
With Part Time Job From The Day Of Arrival

COURSES OFFERED
BA in BUSINESS MANAGEMENT
Graduate Diploma in Business Management
MASTER OF BUSINESS ADMINISTRATION
Post Graduate Diploma in Business Management
BA / MA in HOSPITALITY AND TOURISM
Graduate / Post Graduate Diploma in Hospitality And Tourism
BA / MA in HEALTH AND SOCIAL CARE MANAGEMENT
Graduate / Post Graduate Diploma in Health And Social Care Management
BA / MA in INFORMATION TECHNOLOGY
Graduate / Post Graduate Diploma in Information Technology
BA (HONS) in MARKETING
Advanced Professional Diploma in Business And Marketing Management
MASTERS IN MARKETING AND INNOVATION
Post Graduate Diploma in Business And Marketing Strategy

ELIGIBILITY:
✓A/L PASS (OR)ANY DEGREE
✓KNOWLEDGE IN ENGLISH

SPECIAL FEATURES:
Scholarships upto 50%
3 to 6 months free accomodation
Free Health Insurance
Free German / Czech language classes
Visa renewal
Books, Study Materials & Excursions
Part Time Jobs from the day of arrival
8 to 12 months paid internships
Excellent infrastructure and environment.

RECRUITMENT IS GOING ON ....
CONTACT : NORTH LANKA IIT, TOP FLOOR, PEOPLE'S BANK BUILDING, STANLEY ROAD, JAFFNA.
PHONE: 0767504535 / 0214927088

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்






'நம் திட்டங்கள் குறித்தெல்லாம் விதிக்கு எந்தக் கவலையும் இல்லை' என்பான் சீனப் பழங்குடி. வைணவ பின்னணியிலிருந்து வந்த அம்முவுக்கு விதி மீது நம்பிக்கை இருந்ததா என்றெல்லாம் தெரியாது. ஆனால், அம்முவின் திட்டங்கள் குறித்து காலம் கிஞ்சித்தும் கவலை கொள்ளவில்லை. அது, அவரின் திட்டங்களுக்குச்சம்மந்தமே இல்லாத... சொல்லப்போனால் கொஞ்சமும் விருப்பமே இல்லாத ஒரு வாய்ப்புடன் காத்திருந்தது. ஆம், அது சினிமா வாய்ப்புதான்!

ஏற்கனவே கூறியது போல், திரைப்படத் துறை குறித்த விருப்பம் கடுகளவு ஆசைகூட அம்முவுக்கு இருந்ததில்லை. சந்தியாவுக்கும் அப்படித்தான். மருத்துவர் அல்லது இந்திய ஆட்சிப் பணியாளர் ஆக வேண்டும் என்பதுதான் அம்முவின் விருப்பம். நன்றாகப் படிக்கவும் செய்தார். இதுகுறித்து சந்தியாவே பின்பு ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

'என் மகள் அம்மு - ஜெயலலிதா - திரைப்படங்களில் நடிக்க வேண்டும் என்று நான் முதலில் விரும்பவில்லை. சிறு குழந்தையாக இருக்கும்போதே அம்மு எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் திறமையைப் பெற்றிருந்தாள். படிப்பில் அம்மு கெட்டிக்காரி. வகுப்பில் அவள்தான் முதல் மாணவி. படித்துப் பட்டம்பெற வேண்டும் என்ற ஆர்வம் அம்முவுக்கு இருந்தது. அவள் விரும்பியவாறு நிறையப் படிக்கட்டும் என்றுதான் நானும் எண்ணினேன்."



ஆனால், அந்த விருப்பம் இறுதிவரை நிகழாமலேயே போய்விட்டது.

கொஞ்சம் உன்னிப்பாகப் பகுத்தாய்ந்தால், அதற்கு சந்தியாவும் ஒரு காரணம்தான். ஆம், அவர் மட்டும் கடுமையாக மறுத்திருந்தால்.... இன்று அம்மு அப்பலோவில் ஒரு மருத்துவராகக்கூட ஆகி இருந்திருக்கலாம்... இல்லையென்றால், தமிழகத்தின் தலைமை ஆலோசகராக இன்று ஷீலா பாலகிருஷ்ணன் இருக்கும் இடத்தில் அம்மு இருந்திருக்கலாம். யார் கண்டது...? ஹூம்... வாழ்க்கை விசித்திரமானதுதான்!

சரி வாருங்கள். முதல் சினிமா வாய்ப்புக்கு முன்பு... அம்முவுக்கு நடிப்பு சம்பந்தமாக வந்த வேறு வாய்ப்புகளைப் பார்ப்போம்.

**வில்லன் 'சோ'...!**

சந்தியா எப்போதாவது அம்முவைத் திரைப்படப் படப்பிடிப்புக்குச் அழைத்துச் செல்வது உண்டு. ஒருமுறை, எம்.ஜி.ஆர்.நடித்த ஒரு படப்பிடிப்புக்கு அழைத்துச்சென்று இருக்கிறார்.

அப்போது, அம்முவுக்கு 10 வயதுக்குள்தான் இருக்கும். சுட்டியாக விளையாடிக் கொண்டிருந்த அம்முவைப் பார்த்து, எம்.ஜி.ஆர்., "உன் பெயர் என்னம்மா...?" என்று கேட்டுள்ளார். அதற்கு அம்மு, ஆங்கிலத்திலேயே சரளமாகப் பதில் கூறியுள்ளார்.

"ஏன உனக்குத் தமிழ் தெரியாதா" என்று எம்.ஜி.ஆர் கேட்க, அதற்கும் அம்மு, ஆங்கிலத்திலேயே பதில் சொல்லியுள்ளார். சிரித்துக்கொண்டே எம்.ஜி.ஆர். அந்த இடத்தைக் கடந்திருக்கிறார். அவருக்கு அப்போது தெரிந்திருக்க வாய்ப்பில்லைதானே... இந்த அம்முவைத்தான், பின்னாளில் இதே ஆங்கிலப் புலமைக்காக ராஜ்ய சபா உறுப்பினராக, டில்லிக்கு அனுப்பப்போகிறோம் என்று.

ஏன்...? இப்போது இந்தச் சம்பவம்என்றால்.. இதே ஆங்கிலப் புலமைதான். அம்முவுக்கு நாடகத்தில் வாய்ப்புக் கிடைக்க காரணமாக அமைந்தது.

அப்போது, சென்னை சர்ச் பார்க் கான்வென்டில் அம்மு படித்துக் கொண்டிருந்தார். வை.ஜி.பார்த்தசாரதி, ஆங்கில நாடகம் போடுவதற்கான வேலைகளில் இருந்தார்ஒருபெண்கதாப்பாத்திர த்துக்கு மட்டும் ஆள் கிடைக்காமல் இருந்தது. எங்கெங்கெல்லாமோ தேடிப் பார்த்தார். அமையவேஇல்லை. பின், நண்பர்கள் மூலமாக அம்மு குறித்து கேள்விப்பட்டு, சந்தியாவை அணுகுகிறார்கள். நாடகம் என்பதால் சந்தியாவும் சம்மதிக்கிறார ஆங்கிலமொழியை நன்கு அறிந்து சரளமாகப் பேசும் அம்முவுக்கு, அந்த நாடகத்தில் ஆங்கிலம் பேசத் தெரியாத பிரெஞ்சுப் பெண்ணின் வேடம் கிடைத்தது. இந்த நாடகத்தில் வில்லனாக நடித்தவர் சோ.



**ஆங்கிலப் பட வாய்ப்பு!**

இதே காலகட்டத்தில்தான் இந்திய ஜனாதிபதி வி.வி.கிரியின் மகன், சங்கர் கிரி தான் தயாரிக்கப்போகும் ஆங்கில ஆவணப் படத்தில் கதாநாயகியாக நடிக்க ஆங்கிலம் தெரிந்த ஒரு பெண்ணைத் தேடிக் கொண்டிருந்தார். இது குறித்து வை.ஜி. பார்த்தசாரதியிடமும் சொல்ல... வை.ஜி.பி சற்றும் யோசிக்காமல், அம்முவைப் பரிந்துரைத்து இருக்கிறார். சோவும் அம்முவின் நடிப்பை சங்கர் கிரியிடம் புகழ்ந்து கூறி, "உங்கள் ஆவணப் படத்தில் அம்மு சிறப்பாக நடிப்பாள்" என்று சொல்லி இருக்கிறார்.

சங்கர் சற்றும் தாமதிக்காமல், உடனே சந்தியாவைச் சந்தித்து, அம்முவை நடிக்கக்கேட்டு இருக்கிறார். ஆங்கிலப் பட வாய்ப்பு. அதுவும் ஜனாதிபதியின் மகன் தயாரிக்கும் படம். ஆக, சிறந்த வாய்ப்புதான். இருந்தாலும், அம்முவுக்குத் தயக்கம். "இல்லை... அம்மு சினிமாவில் நடிப்பதை நான் விரும்பவில்லை... அவளும் விரும்பமாட்டாள்..." என்று நாசூக்காக மறுக்க, சங்கர் விடுவதாக இல்லை. "படிப்புத்தான் முக்கியம்.

அது எனக்கும் புரிகிறது. உங்கள் மகளின் படிப்புக்கு இடையூறு ஏற்படாமல் சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் படப்பிடிப்பை நடத்திக் கொள்கிறேன். நிச்சயம்... உங்கள் மகளுக்கும் இது ஒரு நல்ல பொழுதுபோக்காக இருக்கும்" என்று கேட்க, அரை மனதுடனே சம்மதிக்கிறார் சந்தியா.

'எபிசில்' (Epistle) படப்பிடிப்புத் தொடங்குகிறது.

கொஞ்சம் கொஞ்மாகத் திரைத்துறை, அம்மு வாழ்வை வியாபிக்கத் தொடங்கியது!

(தொடரும்)

ஒரு கோடியில் நின்று காட்டும் பிடிவாதம் ஒரு போதும் நிலைக்காது. கடைப்பிடிக்கும் நிதானமே உறுதியாய் நிற்கும். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சிறுபான்மை இனத்தின் உரிமைகளை ஆட்சியாளர்கள் தீர்மானிக்கக் கூடாது

சிறுபான்மையின மக்கள் பாதுகாக்கப்படுவர் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

சிறுபான்மை இன மக்கள் பாதுகாக்கப்படுவர் என்று இந்த நாட்டின் பிரதமர் கூறுவதற்குள் பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்துக்கு எப்போதும் ஆபத்தானதாக உள்ளது என்ற உண்மை மறைமுகமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுபான்மை இன மக்கள் பாதுகாக்கப்படுவர் என்று பிரதமர் கூறுகின்ற போது யாரிடம் இருந்து பாதுகாக்கப்படுவர் என்ற கேள்வி எழும்.

இந்தக் கேள்விக்கு பெரும்பான்மை இனத்திடம் இருந்து என்பது பதிலாக அமையும். அந்த வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிய கருத்தில் ஓர் உண்மை உள்ளடங்கியுள்ளது.

மாறாக சிறுபான்மை இன மக்கள் பாதுகாக்கப்படுவர் என்ற கருத்துரைக்குள் இரண்டு ஐய வினா எழுகிறது. அதாவது இந்த நல்லாட்சியில் சிறுபான்மை இன மக்கள் பாதுகாக்கப்படுவரா? அல்லது சிறுபான்மை இன மக்களை பாதுகாக்கும் வகையில் அரசியலமைப்புச் சீர்திருத்தமும் சிறுபான்மை இனத்தின் உரிமையை முழுமையாக வழங்குவதன் மூலமும் சிறுபான்மை இன மக்கள் பாதுகாக்கப்படுவரா? என்பதே அந்த இரு ஐய வினாவாகும்.

நல்லாட்சியில் சிறுபான்மை இன மக்கள் பாதுகாக்கப்படுவர் என்பதே பிரதமர் கூறிய கருத்துரையின் உட்பொருள் என்றால், அடுத்த ஆட்சி வேறொன்றாயின் சிறுபான்மை இனத்தின் கதை கந்தலாகி விடும்.

ஆக, நல்லாட்சியில் மட்டுமே சிறுபான்மை இன மக்கள் பாதுகாக்கப்படுவதாக இருந்தால் அந்தப் பாதுகாப்பு அர்த்தமற்றது என்பதுடன் எதிர்காலத்தில் பேராபத்துக்களையும் சந்திக்க நேரிடும்.

மாறாக சிறுபான்மை இன மக்கள் எந்தக் காலத்திலும் எப்போதும் பாதுகாக்கப்படுவர் என்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துரை அமையுமாயின் உண்மையில் அது வரவேற்கத்தக்கதாக இருக்கும்.

பொதுவில் ஒரு நாடு என்றால் அங்கு சகல இன மக்களும் சகல உரிமைகளும் பெற்று வாழ்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இருந்தும் இலங்கையில் அப்படியான நிலைமை அறவே இல்லை எனலாம்.

பெரும்பான்மை இனமாகிய சிங்கள மக்களும் ஆட்சியாளர்களும் இந்த நாடு தமக்கு மட்டுமே சொந்தம் என்கின்றனர்.

இந்த உரிமை பாராட்டும் விடயத்தோடு இனப்பாகுபாடு மிகச் கச்சிதமாக பேணப்பட்டு வருவதுடன் தேர்தல் காலங்களில் இனவாதம் மேலெழுந்து ஆட்சியாளர்களைத் தெரிவு செய்கிறது.

இதனால் இந்த நாட்டின் சிறுபான்மை இனமான தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள், அனுபவித்த இழப்பின் வலிகள் கொஞ்சமல்ல.

இன்றுவரை இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயம் காலம் கடத்தப்படுகிறதேயன்றி ஆக்கபூர்வமானதாக எதுவும் நடக்கவில்லை. நடக்கிறது என்று சொல்லப்படுவதிலும் நம்பிக்கை இல்லாமல் இருக்கிறது.

எனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிய சிறுபான்மை இன மக்கள் பாதுகாக்கப்படுவர் என்பது எக்காலத்திலும் பாதுகாக்கப்படுவதாக இருக்க வேண்டும்.

நல்லாட்சியில் பாதுகாப்பு அடுத்த ஆட்சியில் வெட்டிப் புதைப்பு என்பதாக நிலைமை இருந்தால் வேள்வி ஆடுகளின் கதிதான் தமிழினத்துக்குரியதாகிவிடும்.

எனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுகின்ற சிறுபான்மை இன மக்களுக்கான பாதுகாப்பு என்பது அந்த மக்களுக்கு வழங்கப்படுகின்ற உரிமை அதிகாரம் என்பவற்றிலேயே தங்கியுள்ளது.

இவற்றை வழங்காமல் – வழங்க முயற்சிக்காமல் சிறுபான்மையினம் பாதுகாக்கப்படும் என்று வெறுமையாக கூறுவது காலம் கடத்தும் ஒரு செயற்பாடாக அமையுமேயன்றி வேறில்லை எனலாம்.

# யுத்த வெற்றிக்குக் காரணம் மகிந்தவின் அரசியல் ஆளுமையே

## முஸ்லிம் உலமாக் கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

யுத்த வெற்றிக்கு காரணம் சம்பிக்க அல்ல எனவும் மகிந்த ராஜபக்ஷ என்ற அரசியல் ஆளுமை எனவும் முஸ்லிம் சமூகம் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும் என முஸ்லிம் உலமாக் கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

யுத்த வெற்றி குறித்து தெரிவிக்கப்பட்ட பொது பல சேனாவின் அறிக்கை தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்த வெற்றிக்கு சம்பிக்க ரணவக்கவும் ஹெல உறுமயவும் பிரதான காரணமாகும் என பொது பல சேனாவின் ஊடகப் பேச்சாளர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இதில் இருந்து பொதுபல சேனாவை உருவாக்கியது மகிந்தவோ கோத்தபாயவோ அல்ல எனவும் சம்பிக்கவும் ஹெல உறுமயவும் எனவும் மிகத் தெளிவாக மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

அன்று மகிந்த பொது பல சேனாவுக்கெதிராக நடவடிக்கை எடுக்க முற்பட்ட போது அதற்கு சம்பிக்க தடையாக இருந்ததாக மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார். ஆனாலும் அவரையும் மீறி மகிந்த நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறி மகிந்தவை வீட்டுக்கு அனுப்பி மைத்திரி மற்றும் ரணிலைக் கொண்டு வந்தனர்.

இப்போது மகிந்த ஆட்சியை விட இந்த ஆட்சியில் பொதுபல சேனாவுக்கு பல நன்மைகள் கிடைத்தது போல் தெரிகிறது. அவர்களை கைது செய்ய விடாமல் சம்பிக்க தடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதே உண்மையாகும். அது மட்டுமல்ல ஞானசார சொல்வதை அமுல்படுத்தும் அரசாக இன்றைய அரசு மாறியுள்ளது.

இது முஸ்லிம்களுக்கு பாரிய ஆபத்துக்களை கொடுக்கும். இனியும் ஞானசார வெளியில் நின்று சத்தமிடாமல் உள்ளிருந்தே முஸ்லிம்களுக்கு எதிராக சதிகளை மேற்கொள்ளப் போகிறார் என்பதை அறிவிக்கிறது பொது பல சேனாவினது ஊடகப் பேச்சாளரான சம்பிக்கவின் கருத்து.

ஆகவே முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பார்வையில் மாற்றம் தேவை. யுத்த வெற்றிக்கு காரணம் சம்பிக்க அல்ல எனவும் மகிந்த ராஜபக்ஷ என்ற அரசியல் ஆளுமை எனவும் முஸ்லிம் சமூகம் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும்.

அத்துடன் எதிர்த் தரப்பு அரசியலையும் முஸ்லிம் சமூகம் ஊக்குவிக்காவிட்டால் நம்மை வைத்துக் கொண்டே நம்மை அழிக்கும் திட்டங்களை நிறைவேற்றி விடுவார்கள் எனத் தெரிவித்தார். (இ-3)

## போயஸ் கார்டனை விட்டு சசிகலா வெளியேறுகிறார்?

தமிழகத்தின் முதல்வராகவும், அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளராகவும் பதவி வகித்த ஜெயலலிதா கடந்த 5 ஆம் திகதி காலமானார்.

இதையடுத்து முதல்வராக ஓ.பன்னீர்செல்வம் பொறுப்பேற்றுகொண்டார். கட்சியின் பொதுச்செயலாளர் பதவியை ஏற்குமாறு ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட கட்சியின் முக்கிய நிர்வாகிகள் சசிகலாவை வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் சசிகலாவுக்கு எதிரான நிலையையும் தமிழகத்தின் பல பகுதிகளில் காண முடிகிறது.

ஜெயலலிதாவால் விரட்டப்பட்ட சசிகலாவின் உறவினர்கள், ஜெயலலிதாவின் உடலை சுற்றி அரணாக நின்றது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

மேலும் போயஸ் கார்டன் வீட்டிலேயே சசிகலா தங்கியுள்ளதால், வீடு உள்ளிட்ட ஜெயலலிதாவின் சொத்துகளை அவர் வசம் கொண்டு வந்துள்ளதாகவும் பரவலாக பேசப்படுகிறது.

போயஸ் கார்டன் வீட்டை முற்றுகையிடும் அ.தி.மு.க. தொண்டர்கள், சசிகலாவுக்கு எதிராக முழக்கமிட்டு வருவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் சசிகலா போயஸ் கார்டனை விட்டு வெளியேறப் போவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

போயஸ் கார்டன் முன்பு கூடிய பொதுமக்கள் சசிகலாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருவதும், சசிகலா போயஸ் கார்டனைவிட்டு வெளியேற வேண்டுமென பகிரங்கமாக பேசி வருவதும் சசிகலாவை பாதிப்புக்கு ஆளாக்கியுள்ளது.

ஜெயலலிதாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்திய சசிகலா போயஸ் கார்டனில் தங்கியிருக்கிறார். சசிகலா, இளவரசி, அவரது மகன் விவேக் தவிர யாரும் இங்கு இல்லை.

மற்றவர்கள் இரண்டு நாட்கள் மட்டும் தங்கியிருந்தார்கள். அவர்களை சசிகலா வெளியேற்றி விட்டார்.

தம்பி திவாகரன் மன்னார் குடியிலும், டாக்டர் வெங்கடேஷ், மகாதேவன் ஆகியோர் சென்னையில் உள்ள அவர்களது வீடுகளுக்கும் சென்று விட்டார்கள்.

டாக்டர் சிவக்குமார் மட்டும் அவ்வப்போது வந்து போகிறார். "யாரும் இங்கு இருக்க வேண்டாம். நாம் பட்ட அவமானங்கள் போதும்.

இனிமேலும் உங்களால் எனக்கு எந்த பாதிப்பும் வரக்கூடாது என்று சொல்லித் தான் மற்றவர்களை வெளியேற்றினார்.

தற்போது ஜெயலலிதா இருக்கும்போது யார் யார் இருந்தார்களோ, அதாவது சசிகலா, இளவரசி, இளவரசி மகன் விவேக் ஆகியோர் மட்டுமே கார்டனில் இருக்கிறார்கள்.

சசிகலா மட்டும் கட்சி நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனைகளையும், உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார்.

சசிகலா இப்போது உடல் அளவிலும், மனதளவிலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை தன் மீது ஒரு பரிதாப சூழலை ஏற்படுத்தி, அதன் மூலம் கட்சிப் பதவியை எந்த சிக்கலும் இல்லாமல் பெறுவதற்காகவே சசிகலா போயஸ் கார்டனை விட்டு வெளியேறும் முடிவை எடுத்திருப்பதாகவும், இடைக்கால அடிப்படையில் உறவுகளை தள்ளி வைத்திருப்பதாகவும் பேச்சு எழுந்துள்ளது. இவ்வாறு, தமிழக அரசியல் பரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது. (இ-3)

## முன்பள்ளியின் ஆண்டு நிறைவும் கலைக் கதம்பம் விழாவும்

யாழ்.ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளியின் 42 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மழலைகளின் கலைக் கதம்ப விழாவும் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

மத்திய முன்பள்ளி தலைவர் கா. சிவசோதி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் திருமதி. சுபாசினி மதியழகன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. பிரதீபா சிவகுமார்து யாழ்ப்பாணம் முன்பள்ளிக் கல்விப் பணிப்பாளர் க. விமலநாதன், யாழ். கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஸ்ரீமதி சாந்தகுமாரி விஜயகுமார், வடமாகாணக் கல்வி அமைச்சின் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் முகாமை உதவியாளர் பிரம்மஸ்ரீ சு.ஜனார்த்தன சர்மா, கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் ஸ்ரீமதி. மனோரஞ்சினி லோகேஸ்வரசர்மா, சிவசக்திமணிமண்டப ஆலோசனைக்குழு உறுப்பினர் சி.தாங்கராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### என்றும் உண்மையே பேசுங்கள்



✦ எப்பொழுதும் உண்மையே பேச வேண்டும். அப்பொழுதுதான் உண்மையின் ரூபமாகிய இறைவனை காண முடியும். இறைவனிடம் உள்ளப் பூர்வமான பக்தி கொள்ள வேண்டும். அலுவலகத்திலும், வியாபாரத்திலும் உண்மை நெறி தவறக்கூடாது. கபட வேஷத்தையும், ஏமாற்றுவதையும் விட்டுவிட்டு உண்மையே பேசினால் கடவுளைக் காணலாம்.

✦ ஒரு மனிதனுக்குக் கடன் அதிகமாகிவிட்டது. அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அவன் பைத்தியம் பிடித்தவன் போல் நடிக்க ஆரம்பித்துவிட்டான். வைத்தியனால் குணமும் அடையவில்லை. கடைசியில் கெட்டிக்கார வைத்தியன் ஒருவன் உண்மையைத் தெரிந்து கொண்டான். அந்த போலிப் பைத்தியத்தைத் தனியாக அழைத்துச் சென்று "அடேய்! நீ என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறாய்! பைத்தியமாக நடித்துக் கொண்டிருந்தால், உண்மையாகவே உனக்குப் பைத்தியம் பிடித்து விடும். இப்பொழுது உன்னிடம் பைத்தியத்திற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. ஜாக்கிரதையாக இரு!" என்று எச்சரித்தான். இதைக் கேட்ட அந்த மனிதன் பயந்து போய் பைத்தியமாக நடிப்பதை விட்டுவிட்டான். எவ்வளவு தான் மூடி மறைத்தாலும் உண்மை ஒருநாள் வெளி வந்தே ஆகவேண்டும்.

✦ பொய், அனைத்தையும் விட கெட்டது. பொய் வேஷம் போடுவதும் கெட்டதே. ஒருவன் பொய் பேசுவதில் விருப்பம் கொண்டால், பொய்யின் மேலுள்ள பயம் அவனுக்குப் போய்விடும். வாய்மையே வெல்லும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

# பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய மின்னொளியிலான கபடி சுற்றுத்தொடர்







வடமராட்சிக் கபடி சங்கத்தின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் கபடிச் சுற்றுப்போட்டித் தொடர் நடைபெற்றது.

கடந்த 11 ஆம் திகதி இரவு 7 மணிக்கு ஆரம்பமாகிய இறுதிப் போட்டியில் பருத்தித்துறை முனை சென். தோமஸ் ஏ அணியும் சென். தோமஸ் பி அணியும் போட்டியிட்டன.

இரு அணிகளும் ஒரே கழகத்தை சேர்ந்தவையாயினும் போட்டியில் விறுவிறுப்பு குறையவே இல்லை.

முதலாம் பாதியாட்டத்தில் சென். தோமஸ் பி அணியின் எதிர் ஆக்கிரமிப்புத் தாக்குதலுக்குள் தடம்புரண்ட சென்.தோமஸ் ஏ அணி மீள்வதற்கு பல முயற்சிகள் எடுத்துக் கொண்டிருந்தது. இருப்பினும் சென். தோமஸ் பி அணியின் ஆதிக்கத்தால் ஏ அணி திணறிக்கொண்டே இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இதனால் முதல் பாதியாட்டம் முழுமையாக சென். தோமஸ் பி கட்டுப்பாட்டுக்குள் விழுந்தது. இதனால் முதல் பாதியாட்டம் முடிவடையும் போது 25:13 புள்ளிகளை பெற்று முன்னிலை வகித்தது.

இரண்டாம்பாதியாட்டத்தில் விளையாட்டு வியூகங்களை மதிநுட்பத்துடன் மாற்றியமைத்துக் கொண்டு களம் புகுந்த முனை சென். தோமஸ் ஏ அணி அனல் பறக்கும் வேகத்தில் ஆக்கிரமிப்புத் தாக்குதல் ஆட்டத்தைக் கையாண்டது. இதனால் இறுதிவரை போட்டி பரபரப்பாகவே சென்றது. காதைப் பிளக்கும் அளவிற்கு போட்டிக்களம் பரபரப்பாகவே மாறியதை காணக்கூடியதாக இருந்தது. முனை சென். தோமஸ் பி அணி தாம் சளைத்தவர்கள் அல்ல என எதிர் தாக்குதலை தொடுத்த வண்ணம் இருந்தன. இறுதியாக போட்டி முடிவுக்கு வரும் போது சென். தோமஸ் ஏ அணி ஐக்கியம் 52:44 என்ற புள்ளிகள் அடிப்படையிலான வெற்றி பெற்று முதலாமிடத்திற்கான கிண்ணத்தை வெல்ல சென். தோமஸ் பி அணி இரண்டாம் இடத்திற்கான கிண்ணத்தை வென்றது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக பருத்தித்துறை – முனை சென்.தோமஸ் ஏ அணியின் யூட் சுலக்சன் தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டித் தொடரின் தான் விளையாடிய அனைத்து போட்டிகளிலும் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்ட சென். தோமஸ் பி அணியும் ஆக்கிரமிப்பு எதிர் ஆக்கிரமிப்பு வீரராகிய அ .அஜித் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க)

## இன்றைய போட்டி

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் மூன்றாம் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் போட்டியில் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கம்பர் மலையங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

## பாடும்மீன்-அன்னை சமநிலையில் முடிவு

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங்-2016 உதைபந்தாட்ட போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அன்னை விளையாட்டுக்கழகம் மோதியது.

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற போட்டி 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவுற்றது. (க)

## சக்கோட்டை சென்.சேவியர் சுப்பர் 8 சுற்றுக்கு தெரிவு



அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் அல்வாய் மனோகரா வி.கழக மைதானத்தில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் இளவாலை யங்ஹென்றீஸ் வி.கவை எதிர்த்து சக்கோட்டை.சென்சேவியர் வி.க.மோதியது. மிகவும் பரபரப்பாக நடை பெற்ற முதல் பாதி ஆட்டத்தில் ஆட்டம் தொடங்கி முதல் நிமிடத்திலேயே யங்ஹென்றீஸ் அணி வீரர் தனேஸ் முதல் கோலினை பதிவு செய்தார்.

தொடர்ந்து கடுமையாக போராடிய சென்சேவியர் அணி வீரர் றோசன் 13 ஆவது நிமிடத்தில் ஒரு கோலினை போட ஆட்டம் சம வலுப்பெற்றது. தொடர்ந்த ஆட்டத்தின் ஹென்றீஸ் அணி கோல்போடும் முயற்சி முறியடிக்கப்பட்டது. 17 ஆவது நிமிடத்தில் மீளவும் சென்சேவியர் அணி சார்பில் கனியூட் இரண்டாவது கோலினை பதிவு செய்து தனது அணியின் வெற்றியினை உறுதி செய்தார்.

2.1 என்ற கோல் அடிப்படையில் முதல் பாதி நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்தில் மிகவும் கடுமையாக ஹென்றீஸ் அணி கோல் போட முயற்சித்த போதும் சென் சேவியர் அணியினர் மிகவும் துல்லியமாக தடுத்தாடினர். இறுதியாட்ட நேரமுடிவில் 2.1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று சுப்பர்-8 சுற்றுக்கு தகுதி பெற்றது சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழகம். (க)

## கலைவாணி வி.கழகத்தை வீழ்த்தி சென்.நியூஸ்ரார் வி.க. அபாரவெற்றி





அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியில் கலைவாணி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென் நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் சென்.நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் 5:0 என்ற அபார வெற்றி பெற்றது. (க)

## FA கிண்ண உதைபந்தாட்டம்; சென்.லூட்ஸ் அணி வெற்றி





இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால் நடத்தப்படும் 11நபர் கொண்ட FA கிண்ண உதைபந்தாட்ட தொடரில் 11.12.2016 அன்று புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் பெரியவிளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்.லூட்ஸ் அணி மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் ஆரம்பம் முதல் சென். லூட்ஸ் ஆதிக்கம் செலுத்தியது முதல் பாதியில் சென்.லூட்ஸ் ஒரு கோலை பெற்று முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் மேலும் ஒரு கோலை போட்டது.

தனது ஆட்ட வியூகத்தை மாற்றிய சென்.அன்ரனிஸ் வீரர்கள் தொடர்ந்து இரு கோல்களை போட்டு ஆட்டத்தை சமன் செய்தனர்.

மீண்டும் சென்.லூட்ஸ் அணியினர் மேலும் ஒரு கோலை போட்டனர்.

ஆட்ட நேர முடிவில் 03:02 என்ற கோல்கள் அடிப்படையில் சென்.லூட்ஸ் அணி வெற்றி பெற்றது. (க)

## இலங்கை...

உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கைக்கு வருகை தந்துள்ள தஜிகிஸ்தான் ஜனாதிபதி, மோமாலி ராமோன் தலைமையிலான பிரதிநிதிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் மேற்கொண்ட இருதரப்பு கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் தஜிகிஸ்தான் ஜனாதிபதி தலைமையிலான தூதுக்குழுவினர் இராணுவ மரியாதையுடன் வரவேற்கப்பட்டனர்.

அபிவிருத்தி முயற்சிகள், இரத்தினக்கல் கைத்தொழில், ஆடைக் கைத்தொழில், விளையாட்டு ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கையிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பல பாடங்கள் இருப்பதாக குறிப்பிட்ட தஜிகிஸ்தான் ஜனாதிபதி, இரு நாடுகளுக்குமிடையில் இருக்கும் உறவுகளை மேம்படுத்தும்போது தொழில்நுட்ப பரிமாற்றங்கள் மற்றும் இளைஞர் அபிவிருத்தி போன்ற துறைகள் தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்த வேண்டுமென குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்குமிடையில் நிலவும் உறவுகளை மேம்படுத்தும் ஆரம்ப நடவடிக்கையாக அரசியல், சுற்றுலாத்துறை, உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் உடன்படிக்கைகளிலும் சுற்றுலா மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தக உடன்படிக்கைக்கான வரைபிலும் இருநாட்டு பிரதிநிதிகளும் நேற்று கையெழுத்திட்டனர்.

இலங்கைக்கு வருகை தருமாறு தனக்கு விடுக்கப்பட்ட அழைப்பு தொடர்பில் நன்றி தெரிவித்த, மோமாலி ராமோன் தஜிகிஸ்தானுக்கு வருகை தருமாறு ஜனாதிபதி மைத்திரிக்கு அழைப்பு விடுத்தார்.

பொருளாதார அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் பிராந்திய பாதுகாப்பு தொடர்பிலும் போதைப்பொருள் கடத்தலை முறியடித்தல் தொடர்பிலும் இருநாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது இன்றியமையாததென்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இலங்கை மற்றும் தஜிகிஸ்தானுக்கு இடையிலுள்ள நோக்கங்கள் பொதுவானதெனவும் இருநாடுகளுக்குமிடையில் நிலவும் வர்த்தகம் போதுமானதல்ல என்பதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தஜிகிஸ்தான் அரசாங்க மற்றும் தனியார்துறை வர்த்தகர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கும் வர்த்தக வாய்ப்புகளை இனங்காண்பதற்கும் முன்வர வேண்டுமென பகிரங்க அழைப்பு விடுத்ததுடன், இருநாடுகளுக்குமிடையில் வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை விருத்தி செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக் காட்டினார்.

இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான ஜோன் அமரதுங்க, மலிக் சமரவிக்கிரம, தயாசிறி ஜயசேகர, ஹர்ஸ டி சில்வா, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபேகோன், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எசல வீரக்கோன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (செ-11)

## சர்வஜன வாக்கெடு...

சம்பூர்- நாவலடி பிரதான வீதிப் பணிகள் நிறைவடைந்த நிலையில் நேற்று மக்களிடம் அதனைக் கையளிக்கும் நிகழ்வு நாவலடிச் சந்தியில் இடம்பெற்ற வேளை அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், இந்த நாட்டில் வாழும் சகல மக்கள் மத்தியிலும் ஒரு நல்லிணக்கம், புரிந்துணர்வு ஏற்பட்டிருப்பதனை நாங்கள் அவதானிக்கின்றோம். அதற்கு மக்கள் மத்தியில் சமாதானம், புரிந்துணர்வு, நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்ற தற்போதைய அரசின் கொள்கையே காரணமாகும்.

அத்துடன் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டியுள்ளது. நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டுமாக இருந்தால் தேவையில்லாத பிரச்சினைகளை உருவாக்காது எல்லோரும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்.

இந்த நாட்டில் வாழும் சகல மக்களும் இந்த நாட்டில்தான் வாழ்ந்தாக வேண்டும். வேறு வழியில்லை. அதுவே சிறந்த வழியாகும். நீண்டகால யுத்தத்தின் பின்னர் இந்த நல்லாட்சி சூழல் ஏற்பட்டுள்ளது. தற்போது இந்த நாட்டில் தேசிய அரசாங்கம் ஒன்று இயங்கி வருகிறது.

அதில் இரண்டு பிரதான கட்சிகளும் அங்கம் வகிக்கின்றன. இதற்குள் சிறு குழப்பங்களை ஏற்படுத்த யாரும் முயலக் கூடாது. சிலர அவ்வாறு முயற்சிக்கின்றனர். பாராளுமன்றம் அரசிலமைப்புச் சபையாக மாற்றப்பட்டுள்ளன. பல குழுக்கள் அமைக்கப்பட்டு கருமங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நாங்கள் ஒரு அரசில் சாசனம் விரைவில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கின்றோம்.

அந்த அரசியல் சாசனம் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றப்படும். அவ்வாறு நிறைவேற்றப்படும் அந்த சாசனம் ஒரு சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் சகல மக்களது விருப்புடன் நிறைவேற்றப்பட வேண்டும். அந்த அரசியல் சாசனம் சகல பிரிவு மக்களாலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். இந்த நாட்டின் பெரும் பான்மையினர், தமிழ் மக்கள் மற்றும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் ஆகியோரால் அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

அவ்வாறான ஒரு முயற்சியே இந்த நல்லாட்சி அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது வரையில் நாட்டில் நிலவிய எந்த ஒரு அரசியல் சாசனங்களும் மக்களுடைய சம்மதத்துடன் அல்லது கூடுதலான அரசியல் கட்சிகளின் சம்மதத்துடன் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. ஆகவே நிறைவேற்றப்படவுள்ள அரசியல் சாசனம் சகல மக்களினதும் அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்பட வேண்டும் என சம்பந்தர் உரையாற்றியுள்ளார்.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கே.துரைரெட்ணசிங்கம், கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெனார்டோ, கிழக்கு மாகாண அமைச்சர்களான சி.தண்டாயுதபாணி, ஆரியவதி கலப்பதி, துரைராஜசிங்கம், மாகாண உறுப்பினர் கே.நாகேஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (செ-11)

## ஜனாதிபதி நாளை...

சார நிகழ்வுகள் மற்றும் உணவு கண்காட்சி போன்றவற்றிலும் ஜனாதிபதி பங்குபற்றுவார்.

இந்த சுற்றுப்பயணத்தின் போது இரு நாடுகளுக்கும் முக்கியத்துவம் மிக்க புதிய வர்த்தக முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்தும் இருதரப்பு உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்படவுள்ளன.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தில் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை விருத்தி செய்யும் நோக்குடன் மலேசிய மன்னர் மற்றும் பிரதமர் ஆகியோரையும் ஜனாதிபதி சந்தித்து கலந்துரையாடவுள்ளார். (செ-11)

## மதபோதனை...

வதனூடாக மட்டுமே நல்ல மனிதர்கள் உருவாகுவார்களென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, மனிதர்கள் மதபோதனைகளை வாழ்க்கையில் பின்பற்றாமை காரணமாகவே சமூகம் சீரழிந்து போவதாகவும் குறிப்பிட்டார்.

மனக்கலக்கமுடைய மனிதர்கள் பௌத்த தர்மத்தினூடாக நிம்மதியடையலாம் எனவும் தற்போது மேற்குலகமும் பௌத்த தத்துவம்தொடர்பில் கூடுதலாக அக்கறை காட்டுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நெல்லிகல ரஜமகா விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மதகுருமார்களைத் தரிசித்து நலன் விசாரித்ததுடன், அஸ்கிரிய மகாநாயக்க தேரர் அதி சங்கைக்குரிய வறகாகொட தம்மசித்தி ஸ்ரீ பஞ்ஞானந்த ஞானரதனாபிதான தேரருக்கு காணிக்கைகளை வழங்கி, ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வின் ஞாபகார்த்தமாக விகாரை வளாகத்தில் நெல்லி மரமொன்று ஜனாதிபதியால் நடுகை செய்யப்பட்டது.

அதன்பின்னர் வழிபாட்டு கூடத்தை திறந்து வைத்து, வழிபட்ட ஜனாதிபதி நெல்லி கல நுழைவுப் பாதை மற்றும் புத்த பிரானின் திருவுருவத்தையும் திறந்து வைத்தார்.

நெல்லிகல பௌத்த நிலையத்தின் நிறுவுனர் சங்கைக்குரிய வதுறகும்புறே தம்மரதன தேரரால் உலோகத்திலான புத்தபிரானின் திருவுருவமும் பௌத்த சாசனத்துக்கு ஜனாதிபதி ஆற்றும் பணியைப் பாராட்டி பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்கவினால் நினைவுப் பரிசும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது. விகாரை நிர்மாண பணிகளில் பங்களிப்பு செய்த கலைஞர்களுக்காக பரிசில்களை ஜனாதிபதி வழங்கி வைத்தார்.

நிகழ்வில் துறவியர்கள், அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்கா உட்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் ஜயந்தி சிறிசேன அம்மையார், ஹேமா பிரேமதாஸ அம்மையார் மற்றும் பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.(செ-11)

## அதிகார வரம்பு...

உரிமைகளை மீறும் செயல் என தெரிவித்ததோடு கட்டப்பஞ்சாயத்துக்கு ஒப்பான விசாரணைகளை மேற்கொண்டு முடிவுகளை வழங்கி பொதுமக்களின் காணி உரிமைப்பிணக்குகளுடன் விளையாடும் ஒருவர் எமது வடமாகாணத்திற்கு ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பது எமது துர்ப்பேறு எனவும் உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் குறிப்பிட்ட ரவிகரன், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே அண்மைக்காலமாக தனது அதிகார வரம்புகளை மீறி எதேச்சை அதிகாரமாக நிர்வாக நடவடிக்கைகளில் தலையிட்டுவருகிறார். இதன் இன்னொருபகுதியாகவே கடந்த 09.12.2016ஆம் நாளன்று மாலை 4.00 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்தில் இவரால் பொதுமக்களின் காணிப்பிணக்குகள் விசாரணை செய்யப்பட்டு தீர்வுகள் வழங்கப்பட்டன. இதற்காக இவரால் சிபார்சு செய்யப்பட்ட பதினாறு பிணக்குகள் முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்திற்கு அனுப்பப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விசாரணைகளின் போது குறித்த காணிப்பிணக்குகள் தொடர்பாக ஆளுநரிடம் முறையிட்ட பகுதியினர் மட்டுமே அழைக்கப்பட்டு எதிர்த்தரப்பினர் அழைக்கப்படாத நிலையில் ஒரு தலைப்பட்சமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளமை கவலைக்கிடமானதாக உள்ளதுடன் வேதனை தருவதாகவும் அமைகின்றது. இயற்கைநீதி என்பது பிணக்கிற்குட்படும் இருபகுதியினரையும் அழைத்து வெளிப்படையாக நீதிநெறிகளின்பால் விசாரணைகளை மேற்கொள்வதாகும். இதைக்கூட பின்பற்றாது ஒருதலைப்பட்சமாக கட்டப்பஞ்சாயத்துக்கு ஒப்பான விசாரணைகளை மேற்கொண்டு முடிவுகளை வழ்ங்கி பொதுமக்களின் காணி உரிமைப்பிரச்சினைகளுடன் விளையாடும் ஒருவர் வடக்கு மாகாணத்திற்கு ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பது எமது துர்ப்பேறே.

இவ்வாறு ஒருதலைப்பட்சமான விசாரணைகளை மேற்கொள்வது பாதிக்கப்பட்ட தரப்பினரின் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவால் வடக்கு மாகாண மக்களின் காணி தொடர்பான பிரச்சினைகள் இரண்டு வருடங்களில் தீர்க்கப்படவேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டதற்கு அமைய காணி அமைச்சினால் 2013/01 இலக்க சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது. இச்சுற்றுநிருபத்தின்படி பிரதேச செயலாளர் ஒருவரால் தீர்த்துவைக்கப்படமுடியாத காணிப்பிணக்குகள் காணி ஆணையாளர் நாயகம், காணி அமைச்சின் செயலாளர் போன்ற உயர் அதிகாரிகளால் நடத்தப்படும் நடமாடும் சேவை ஒன்றின் மூலம் தீர்த்துவைக்கப்படும்.

காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம், அரச காணிச்சட்டம் போன்ற அரசகாணிகளின் நிர்வாகம் தொடர்பான சட்டங்களை நன்கறிந்த அதிகாரிகளால் 2013/01 சுற்று நிருபப்படி நடமாடும் சேவையில் தீர்வுவழங்கப்பட்ட பிணக்குகள் ஆளுநரால் மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு நடமாடும் சேவையில் வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு முரணான தீர்மானங்கள் வழங்கப்பட்டிருப்பது நாட்டின் சட்டம் ஒழுங்கு பேணப்படுவதை கேள்விக்குறியாக்கி இருப்பதுடன் அரச நிர்வாகத்தை கேலிக் கூத்தாக்கி உள்ளது. இதுவரை காலமும் வடக்கு மாகாணத்திற்கு நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் எவரும் பொதுமக்களின் காணிப்பிணக்குகளை கையிலெடுத்து சட்டத்திற்கு முரணாக நடத்தி தீர்ப்புகளை வழங்கவில்லை.

நல்லாட்சி என்று அடையாளப்படுத்தப்படும் இந்த அரசும் இது தொடர்பில் போதிய கவனம் எடுத்து சட்டத்திற்கு முரணாக வழங்கப்பட்ட இத்தீர்ப்புகளை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் வடமாகாணத்தின் நிர்வாக நடவடிக்கைகளில் இனியாவது வடமாகாண ஆளுநர் எதேச்சை அதிகாரத்து டன் தலையிட்டு குழப்பங்களை விளைவிக்காது இருக்கவேண்டும் எனவும் ரவிகரன் தனது கருத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். (செ-4)

## வாகன விபத்து...

வவுனியா வீரபுரம் ஊடான செட்டிக்குளம் பாதையில் பயணித்த இரு மோட்டார் சைக்கிள்கள் இராசேந்திரன்குளம் பாடசாலைக்கு அருகாமையில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இதில் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவன், மனைவி மற்றும் இரு பிள்ளைகளும் மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரும் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் அங்கு நின்ற முச்சக்கர வண்டியின் உதவியுடன் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான விசாரணைகளை நெளுங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-250)

## அடுத்து வரும்...

தற்கு இன்னும் 20 தலைமுறைகள் தேவைப்படும்.

ராஜபக்ஷ காலத்தில் கட்சியின் கொள்கைகள் உதாசீனம் செய்யப்பட்டு கள்வர்கள் திருடர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

போரின் மூன்றில் இரண்டு பகுதியை நான் வெற்றிகொண்டிருந்தேன். எஞ்சிய பகுதியையே மகிந்த வெற்றிகொண்டார்.

சர்வதேச ரீதியில் தற்போது நாட்டுக்கு ஒத்துழைப்பு கிடைத்து வருவதாகவும் நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல பிரதான இரண்டு கட்சிகளும் கைகோர்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## இனப்பிரச்சினை...

விஜித ஹேரத்,

தேசிய இனப்பிரச்சினையை மையப்படுத்திய வட்டமேசை பேச்சுக்களுக்கு மக்கள் விடுதலை முன்னணி முழுமையான ஈடுபாடுடன் பங்களிப்பு வழங்கும் எனத் தெரிவித்தார்.

இறுதி அரசியலமைப்பு வரைபை முன் வைப்பதற்கு முன்பதாகவே ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டி என சுய நல அரசியலுக்காக கருத்துக்களை தெரிவிப்பதை விடுத்து நாட்டின் எதிர்காலம் கருதி செயற்பட வேண்டும் என்பதே மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடாகும்.

எனவே தான் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக பல யோசனைகளை போர் முடிந்தவுடனேயே நாம் முன் வைத்தோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற புதிய அரசியலமைப்பு விவகாரம் தொடர்பாக நேற்று ஊடகங்களிடம் தெளிவுப்படுத்துகையிலேயே மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார். (செ-11)

## அதிரடி விலைக்குறைப்பு!!

என்ன ஆச்சரியமாக இப்பொழுது இருக்கிறதா?



அனைத்து விளம்பரப் பலகைகள் மற்றும் பனர் பிறிண்டிங் வேலைகளுக்குமான விலைகள் சடுதியாக குறைக்கப்பட்டுள்ளன!

எமது உற்பத்திகளுக்கான மூலப் பொருட்களை நாம் இப்போது குறைந்த விலையில் நேரடியாக இறக்குமதி செய்வதனால் இவ் விலைக்குறைப்பானது சாத்தியமாகியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

3 வருட உத்தரவாதத்துடன்

| ஒருபக்க டிஜிற்றல் விளம்பரப்பலகை (கல்வனைஸ் சீற் இல்லாமல்) High Quality | ஒருபக்க டிஜிற்றல் விளம்பரப்பலகை (கல்வனைஸ் சீற்றுடன்) High Quality | ஒருபக்க ஒளியூட்டப்பட்ட விளம்பரப்பலகை (Backlit Light Board) High Quality |
|---|---|---|
| ~~250/-~~ | ~~350/-~~ | ~~650/-~~ |
| 190/- சதுர அடி | 250/- சதுர அடி | 490/- சதுர அடி |

(C-6678)

ANDRA DIGITAL IMAGE

அதி உயர்தர டிஜிற்றல்பனர் பிறிண்டிங்

சதுர அடி ~~50/-~~ 38/- இலிருந்து

டிஜிற்றல் பிறிண்டிங் துறையில் 200க்கு மேற்பட்ட கொழும்பு மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு திருப்திகரமான சேவையை வழங்கும் ஒரே நிறுவனம்

379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 221 7279 / 021 222 8929 / 077 7481696

---

## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

(C-6669)

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

---

## தேவை

பாண் வாகனம் ஓடுவதற்கு 30 வயதிற்கு மேற்பட்ட சாரதிகள் மற்றும் பாண் விற்பனையாளர்கள் உடன்தேவை

புதிய துர்க்கா வெதுப்பகம்
கலைவாணி லேன்,
பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

---

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

---

## அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550*/= Kg

DELIVERY IN 3 - 5 DAYS

மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: 0768226243

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- நெல்லியடி
- வல்வெட்டித்துறை

V2 TRAVELS (C-6600)

---

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

பண்டிகைக் காலத்தில் உங்கள் உறவுகளுக்கு பெறுமதியான பொருட்களையும் கடிதங்களையும் விரைவாகவும் குறைந்த விலையிலும் அனுப்பிட

021 221 5656
070 330 5500

அலினா & கோ
976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

---

## யாழ் புத்தகசாலை புதிய முகவரியில்

ஆஸ்பத்திரி பின் வீதி ஞானம்ஸ் ஹோட்டலுக்கு அருகில் இயங்கிய யாழ் புத்தகசாலை 09.12.2016 முதல் கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இத் திறப்பு விழாவை முன்னிட்டு விசேட விலைக்கழிவில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகங்களுக்கு: 10% - 20%; காகிதாதிகள், எழுதுபொருட்கள், அப்பியாசக் கொப்பிகள்: 10% - 40%

SALE

தொடர்புகளுக்கு :

யாழ்.புத்தகசாலை
இல.22A, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(சண்முகம் உணவகத்திலிருந்து 7வது கடை)
021 221 7874, 021 492 7568

(சி-6677)

கிளை : யாழ்.புத்தகசாலை
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
(கனகபுரம் விளையாட்டரங்கு சந்தி)
021 492 7625

---




## ஆயுஷ்ய ஹோமம்

# மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

பாரத்வாஜ கோத்திரம் ஆவஸ்தம்பசூத்ரம்
சிவஸ்ரீசிவ கந்ததாசக் குருக்கள் சேஷம்மா
பவாநிதி தம்பதிகளின் பௌத்திரனும்
கஜேந்திர சர்மா லோஜினி தம்பதிகளின்
சீமந்த புத்திரனும்

## சிரஞ்சீவி க.சபரீஷ சர்மா



3ஆவது பிறந்தநாளை
அவரது இல்லத்தில் சிறப்பாக
கொண்டாடுகின்றார்.

(சி-6672)

கண்ணகி அம்மன் ஆலயம்
வற்றாப்பளை,
முள்ளியவளை, முல்லைத்தீவு.
021 320 8862

வாழ்த்துவோர் :-
அன்புக்குரிய தாத்தா, பாட்டிமார்,
அப்பா, அம்மா.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.